3C8
/43

# த.ச.பே.செயலக

# வெளியீடு

தொகுதி-29 எண்-1

செப்-வ -1992

©

D
2,31 1992
N92.29.1
1631-3

வெளியீடு 7-1-1993 Issued 7-1-1993

308
93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

ங்கட்கிழமை, செப்டம்பர் 21, 1992 - தொகுதி 29 எண். 1
nday, the 21st September 1992 - Volume 29 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] Price Rs. 3-00

309

D

V211,31'N92

N92·29·1

உள்ளடக்கம்

21—9—1992


| | பக்கங்கள் |
| --- | --- |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | iii—vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xi—xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி). | xiii—xxii |
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து .. | 1—2 |
| **2. இரங்கல் தீர்மானம்—** | |
| முன்னாள் குடியரசுத் துணைத்தலைவர் திரு. எம். இதயத்துல்லா மறைவு குறித்து. | 3 |
| **3. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள். .. | 3—40 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 40—97 |
| **4. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து. .. | 97—98 |
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. | 98 |
| (ஆ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.) | 112 |
| (இ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.) | 114 |
| (ஈ) முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1992—93 —வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல், | 121 |

பக்கங்கள்.

**6. கண்டனம்—**

அவை உரிமை மீறலுக்காக ''முரசொலி'' ஆசிரியர் திரு. எஸ். செல்வம் அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்தல். 98—104

**7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை— ..**

தமிழகத்தில் நிலவும் சட்டம் - ஒழுங்கு குறித்து. .. 104—110

**8. ஒழுங்குப் பிரச்சினை—**

பதவிப் பிரமாணத்தின்போது எடுத்துக்கொண்ட உறுதி மொழிக்கு மாறாக ''சுயநிர்ணய உரிமை'' பற்றிப் பேசுவது குறித்து. 110—111

**9. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992. 112

(ஆ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992. 112—113

(இ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992. 113—114

(ஈ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992. 114—115

(உ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன் வடிவு, 1992. 115

(ஊ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு 1992 116

(எ) வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்தச்)சட்ட முன் வடிவு, 1992. 117

**10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992-93—அளித்தல்.** 117—120

**11. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்** .. 121—135

163183



**தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.**

**ஆளுநர்— திரு. பீஷ்ம நாராயண் சிங்.**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்சஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப்பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |
| 2. நிதி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் - அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட) கம்பெனிகள் பதிவு. |

| | | |
|---|---|---|
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |
| 5. கல்வி அமைச்சர் | .. | மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல் |
| 6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 7. போக்குவரத்துத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 8. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் துணிநூல். |
| 9. பொதுப்பணித் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட) நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு. |
| 10. உள்ளாட்சித் துறை அமைச்சர். | .. | மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர் |



| | | |
|---|---|---|
| | | வாகம், ஊரக வளர்ச்சி ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |
| 11. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள். |
| 12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 13. வேளாண்மைத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு.கு.ப.கிருஷ்ணன்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி. |
| 14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, திட்டமிடல், நகர்ப்புற வளர்ச்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 15. சமூக நலத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திருமதி இரா.இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |

| | |
|---|---|
| 16. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால் நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம். |
| 17. பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பிற்பட்டோர் நலன். மிகப் பிற்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலன் மற்றும் மீனளம். |
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru **BHISHMA NARAIN SINGH**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. | THE HON. Dr. J. JAYALALITHA : Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control. |
| 2. Minister for Finance .. | THE HON. Dr. V. R. NEDUNCHEZHIAN : Finance Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law .. | THE HON. Thiru K. A. KRISHNASAMY Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of companies. |
| 4. Minister for Revenue : | THE HON. Thiru S. D. SOMASUNDARAM : Revenue, District Revenue Establishment Deputy Collectors Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes. |

| | |
|---|---|
| Minister for Education : | THE HON. Dr. C. ARANGANAYAGAM Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology. |
| 6. Minister for Health .. | THE HON. Thiru S. MUTHUSAMY : Health, Medical Education, Family Welfare and Environmental, Pollution Control. |
| 7. Minister for Transport : | THE HON. Thiru K. A. SENGOTTAYAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinshona. |
| 8. Minister for Handlooms and Textiles: | THE HON. Thiru E. MADHUSUDHANAN Handlooms and Textiles. |
| 9. Minister for Public Works. | THE HON. Thiru S. KANNAPPAN . Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control. |
| 10. Minister for Local Administration. : | THE HON. Thiru ALAGU THIRUNAVUKKARASU : Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 11. Minister for Food and Co-operation : | THE HON. Thiru G. VISWANATHAN : Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics. |



| | |
|---|---|
| 12. Minister for Labour .. | THE HON. Thiru S. RAGUPATHY: Labour, Employment and Training Urban and Rural Employment Programmes and Census. |
| 13. Minister for Agriculture. | THE HON. Thiru KU. P A. KRISHNAN : Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 14. Minister for Housing and Urban Development. | THE HON. Thiru T. M. SELVAGANAPATHI: Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority. |
| 15. Minister for Social Welfare. | THE HON. Thirumathi R. INDIRA KUMARI: Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 16. Minister for Adi-Dravidar Welfare, | THE HON. Thiru M. ANANDAN . Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development. |
| 17. Minister for Backward Classes and Fisheries. | THE HON. Thiru D. JAYAKUMAR Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen and Fisheries. |
| 18. Minister for Rural Industries. | THE HON. Thiru S. NAGOOR-MEERAN: Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

*21—9—1992 ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பெற்றது.



## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு. பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி.. பி.எஸ்.ஸி, பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | இணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்த்தர், திரு. தா., பி.ஏ.,பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ., | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| முனீர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. ச., பி.காம்., | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜே., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வெ., பி.எஸ் ., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| சம்பத்ராஜன், திரு. க. | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி<br>பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா. எம்.ஏ., | சார்புச் செயலாளர் |
| ராஜ்சேகரன், திரு. சி. ஜே. | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி.<br>டி.ஆர்.எல். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி.,<br>பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலாளர் |
| ஆறுமுகப்பெருமாள், திரு. மு.<br>எம்.ஏ., | தலைமை நிருபர் |
| சந்திரகுமார், திரு. செ.,<br>எம்.ஏ., | தலைமை நிருபர் |
| சுந்தரராஜுலு, திரு. துரை<br>எம்.ஏ., | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ.,<br>பி.ஏ., | தலைமை நிருபர் |
| வெங்கடேசன், திரு. இரா.,<br>எம்.ஏ., எல்.எல்.பி., | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).

### பெயர்களும் தொகுதிகளும்.

| | | |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். .. | ஆலந்தூர் |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. .. | அரூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4. | அமர்நாத், திரு. ஓ. எஸ். .. | மதுரை கிழக்கு |
| 5. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6. | அரங்கநாதன், திரு. ஆர். டி. .. | விருத்தாசலம் |
| 7. | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8. | அர்ச்சுனன், திரு. க. .. | வீரபாண்டி |
| 9. | அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 10. | அழகு திருநாவுக்கரசு, திரு. .. | ஒரத்தநாடு |
| 11. | அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. எஸ். .. | நாமக்கல் (செ.வ.) |
| 13. | ஆசைமணி, திரு. எஸ். .. | குத்தாலம் |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. எம். .. | நத்தம் |
| 15. | ஆண்டித் தேவர், திரு. எஸ். .. | திருப்பரங்குன்றம் |
| 16. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. | ஆறுமுகம், திரு. செ. .. | வானூர் (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம். .. | உளுந்தூர்ப்பேட்டை (செ.வ.) |
| 19. | இந்திரகுமாரி, திருமதி இரா. .. | நாட்றாம்பள்ளி |
| 20. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 21. | இராசாராமன், திரு. சோ. .. | பாபநாசம் |

| | |
|---|---|
| 22. இராசாராம், திரு. க | பனமரத்துப்பட்டி |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. | திருமங்கலம் |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26. இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 27. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | கம்பம் |
| 28. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 29. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 30. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | இளையாங்குடி |
| 31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | செஞ்சி |
| 32. இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 33. இராஜமன்னார், திரு. சூ. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி |
| 35. இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரணியம் |
| 36. இராம வீரப்பன், திரு. | காங்கேயம் |
| 37. இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 38. இளம்வழுதி, திரு. | எழும்பூர் |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 43. கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |



| | |
|---|---|
| 44. கந்தசாமி, திரு. கே. | தலைவாசல் (செ.வ.) |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46. கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி |
| 50. கனகவல்லி, திருமதி என். | விளாத்திகுளம் |
| 51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 52. காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53. காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 54. காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம் |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. | ஸ்ரீரங்கம் |
| 58. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59. குப்பன், திரு. க. | திருவொற்றியூர் |
| 60. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62. குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63. கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 64. கோபாலகிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 65. கோபால், டாக்டர் க. | நன்னிலம் (செ.வ.) |
| 66. கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67. சக்குபாய், திருமதி நா. | கும்மிடிப்பூண்டி |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |

69. சஞ்சய் ராமசாமி, திரு. .. விருதுநகர்
70. சண்முகநாதன், திரு. எஸ். .. ஆலங்குடி
71. சண்முகம், திரு. எஸ். வி. .. மதுரை மேற்கு
72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. கடலாடி
73. சந்திரசேகர், திரு. வி. பி. .. பொள்ளாச்சி
74. சம்பத், திரு. எ. .. வாணியம்பாடி
75. சரஸ்வதி, திருமதி அ. தி. .. சத்தியமங்கலம்
76. சரஸ்வதி, திருமதி ப. .. கபிலர்மலை
77. சரோஜா, டாக்டர் வெ. .. சங்ககிரி (செ.வ.)
78. சாத்தையா, திரு. தி. .. இராஜபாளையம் (செ.வ.)
79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். முகையூர்
80. சிங்காரம், திரு. ஆர். .. பேராவூரணி
81. சிங்காரம், திரு. கே. .. மொரப்பூர்
82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. சிங்காநல்லூர்
83. சியாமளா, திருமதி ரெ. .. கோவில்பட்டி
84. சிவசுப்பிரமணியன், திரு. கு. .. குறிஞ்சிப்பாடி
85. சிவபதி, திரு. என். ஆர். .. தொட்டியம்
86. சின்னசாமி, திரு. கா. .. சேந்தமங்கலம் (ம.ப.)
87. சின்னசாமி, திரு. ம. .. கரூர்
88. சின்னசாமி, திரு. வி. கே. .. பவானிசாகர்
89. சின்னப்பன், திரு. கே. கே. .. ஜெயங்கொண்டம்
90. சீனியம்மாள், டாக்டர் மு. .. அவினாசி (செ.வ.)
91. சீனிவாசன், திரு. ஆ. கு. .. பெரணமல்லூர்
92. சீனிவாசன், திரு. கு. .. மன்னார்குடி
93. சுதர்சனம் திரு. டி. .. பூந்தமல்லி



94. சுந்தரசாமி, திரு. எம். .. கலசப்பாக்கம்
95. சுந்தரதாஸ், திரு. மா. .. விளவன்கோடு
96. சுந்தரம், திரு. எம். கே. .. தண்டராம்பட்டு
97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. பரமக்குடி (செ.வ.)
98. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. .. திருப்பத்தூர்
99. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
100. சுப்பிரமணியம், திரு. வ. மு. .. மானாமதுரை (செ.வ.)
101. சுப்பிரமணியன், திரு. வி. என். .. பெருந்துறை
102. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. பழனி (செ.வ.)
104. சுலோசனா, செல்வி எல். .. மேட்டுப்பாளையம்
105. சுவாமிநாதன், திரு. சி. .. புதுக்கோட்டை
106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. கோபிசெட்டிபாளையம்
107. செல்லக்குமார், டாக்டர் அ. .. அண்ணா நகர்
108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. ஒட்டன்சத்திரம்
109. செல்லதுரை, திரு. ஆ. .. திருச்செந்தூர்
110. செல்வகணபதி, திரு. டி. எம். .. திருச்செங்கோடு
111. செல்வராசன், திரு. அ. .. துறைமுகம்
112. செல்வராஜ், திரு. கே. .. கோயம்புத்தூர் மேற்கு
113. செழியன், திரு. தா. .. பெரம்பலூர் (செ.வ.)
114. சேகர், டாக்டர் எம். பி. .. பெரம்பூர் (செ.வ.)
115. சேகர், திரு. எம். ஜி. .. பாலக்கோடு
116. சொக்கலிங்கம், திரு. பி. .. மதுராந்தகம்
117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. .. தஞ்சாவூர்
118. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
120. தங்கமுத்து, திரு. கு. .. திருவோணம்
121. தங்கராஜ், திரு. ஆர். .. ஆண்டிமடம்
122. தங்கவேல், திரு. எம். .. முசிறி
123. தண்டாயுதபாணி, திரு. வி. .. குடியாத்தம்
124. தமிழரசன், திரு. செ. கு. .. வந்தவாசி (செ. வ.)
125. தமிழரசு, திரு. வெ. .. ஆத்தூர்
126. தம்புசாமி, திரு. வே. .. திருவாரூர் (செ. வ.)
127. தர்மலிங்கம், திரு. கி. .. அணைக்கட்டு
128. தர்மலிங்கம், திரு. பே. .. பாளையங்கோட்டை
129. தவசி, திரு. கே. .. ஆண்டிப்பட்டி
130. தனபால், திரு. ம. .. திருப்போரூர் (செ.வ.)
131. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
132. தாமோதரன், திரு. சி. .. நெல்லிக்குப்பம்
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. துரை, திரு. எஸ். எம். .. ஆத்தூர்
135. துரைமுருகன், திரு. கு. சு. .. பல்லடம்
136. துரை ராமசாமி, திரு. .. வெள்ளக்கோவில்
137. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை (மத்தி)
138. தென்னவன், திரு. மு. .. இராமநாதபுரம்
139. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு
140. தேனி பன்னீர்செல்வம், திரு. .. போடிநாயக்கனூர்
141. நடேசன், திரு. இரா. .. திருவட்டாறு
142. நடேசன், திரு. மு. .. சேலம்-I



143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. .. நாங்குநேரி
144. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்
145. நிர்மலா, செல்வி பி. .. திண்டுக்கல்
146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. தேனி
147. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ. வ.)
148. பட்டாபிராமன், திரு. கா. ப. காஞ்சிபுரம்
149. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
150. பரமசிவம், திரு. ஆர். பி. .. சின்னசேலம்
151. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்
152. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்
153. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்
154. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி
155. பழனிசாமி, திரு. நா. சா. .. கிணத்துக்கடவு
156. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்
157. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
158. பழனியம்மாள், திருமதி க. .. ராசிபுரம்
159. பன்னீர்செல்வம், திரு. என். .. திருவிடைமருதூர்
160. பன்னீர்செல்வம், திரு. சா. .. திண்டிவனம்
161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. .. திருநாவலூர்
162. பாண்டியம்மாள், திருமதி இரா. உசிலம்பட்டி
163. பாப்பா சுந்தரம், திரு. வி. .. குளித்தலை
164. பாலகங்காதரன், திரு. ஜெ. .. சிவகாசி
165. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். .. பொங்கலூர்

167. பாலசுப்பிரமணியன், திரு. கி. .. பட்டுக்கோட்டை
168. பாலன், திரு. எம். கே. .. சைதாப்பேட்டை
169. பாலையா, திரு. ஆ. .. குளச்சல்
170. பீட்ரிக்ஸ் டி. சோசா, டாக்டர் .. நியமனம்
171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். தென்காசி
172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. சேரன்மகாதேவி
173. புரட்சிமணி, திரு. ச. மங்களூர் (செ.வ.)
174. புருஷோத்தமன், டாக்டர் வெ. பெண்ணாகரம்
175. பூராசாமி, திரு. எம். .. பூம்புகார்
176. பெரியசாமி, திரு. வே. .. அந்தியூர் (செ.வ.)
177. பெரியவீரன், திரு. எம். .. பெரியகுளம்
178. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ம.ப.)
179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். நிலக்கோட்டை (செ.வ.)
180. பொன்னுசாமி, பேராசிரியர் க. மருங்காபுரி
181. பொன்னுசாமி, திரு. பெ. தருமபுரி
182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. வரகூர் (செ.வ.)
183. போளூர் வரதன், திரு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
184. மணிமேகலை, டாக்டர் சு. .. அரியலூர்
185. மணிமேகலை, திருமதி வி. ஜி. அருப்புக்கோட்டை
186. மணிவாசகம், திரு. கே. பி. .. உடுமலைப்பேட்டை
187. மதுசூதனன், திரு. இ. .. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்.
188. மரியம் உல்ஆசியா, திருமதி கே. .. அரவக்குறிச்சி
189. மல்லிகா, செல்வி கோ. .. புவனகிரி
190. மனோகரன், திரு. கே. ஏ. .. ஓசூர்



191. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு
192. மாலா, டாக்டர் ஜி. ஆர். .. திருச்சிராப்பள்ளி-2
193. முகம்மது ஆசிப், திரு. .. திருவல்லிக்கேணி
194. முத்துசாமி, திரு. சு. .. பவானி
195. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி
196. முருகானந்தம், திரு. கே. ஆர். .. சிவகங்கை
197. முருகையா பாண்டியன், திரு. ஆர். அம்பாசமுத்திரம்
198. முனிரத்தினம், திரு. ஏ. எம். .. சோளிங்கர்
199. முனிவெங்கடப்பன், திரு. கே. கிருஷ்ணகிரி
200. முனுசாமி, திரு. கா. பூ. .. காவேரிப்பட்டினம்
201. மூர்த்தி, திரு. து. .. சீர்காழி (செ.வ.)
202. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
203. ரகுபதி, திரு. சே. .. திருமயம்
204. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
205. ரங்கராஜன், திரு. டி. எம். .. மயிலாப்பூர்
206. ரத்தினவேல், திரு. த. .. திருவெறும்பூர்
207. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்
208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. தூத்துக்குடி
209. ரவிக்குமார், திரு. ஏ. .. பொன்னேரி (செ.வ.)
210. ரவிச்சந்திரன், திரு. வி. .. உப்பிலியாபுரம் (ம.ப.)
211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. ஆலங்குளம்
212. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்
213. ராஜு, திரு. கே. ஆர். .. கூடலூர்
214. ராஜு, திரு. கே. பி. .. பேரூர்

215. ராஜேந்திரன், திரு. என். ஆர். .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

216. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

217. லாரன்ஸ், திரு. கு. .. பத்மநாபபுரம்

218. லோகாம்பாள், திருமதி ஜெ. .. லால்குடி

219. வரதராஜன், திரு. செ. து. .. செங்கல்பட்டு

220. விசுவநாதன், திரு. ஜி. .. ஆற்காடு

221. வீரபாண்டியன், டாக்டர் பெ. .. செங்கம் (செ.வ.)

222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. .. தளி

223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். .. கடலூர்

224. வேடியப்பன், திரு. தா. .. போளூர்

225. வேணுகோபால், திரு. என். ஜி. .. ராணிப்பேட்டை

226. வேலையா, திரு. டி. .. திருநெல்வேலி

227. ஜனார்தனன், திரு. தே. .. விழுப்புரம்

228. ஜானகிராமன், திரு. கோ. .. மேல்மலையனூர்

229. ஜீனத் சர்புதீன், திருமதி .. சேப்பாக்கம்

230. ஜெயக்குமார், திரு. எஸ். .. தியாகராய நகர்

231. ஜெயகுமார், திரு. டி. .. ராயபுரம்

232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். .. சேலம்-1

233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. .. பர்கூர்

234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் .. ஆரணி

235. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. வால்பாறை (செ.வ.)

<u>பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.</u>

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 6, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு 2023.

1992 செப்டம்பர் 21, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

தீயிட்டுச் சுடச்சுட மாசு நீங்கி ஒளிவீசும் பொன்போல் தவ வலிமையால் உயர்ந்து நிற்போர், துன்பம் எனும் தீ வருத்த வருத்த தீமை நீங்கி ஒளிவீசுவர்.

### (1) இரங்கற் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஜி. மூர்த்தி அவர்கள் 7—5—1992 ஆம் நாளன்றும், திரு. கே. ஜே. உய்யகொண்டான் அவர்கள் 11—5—1992 ஆம் நாளன்றும், திரு. க.வெ. வீரானபலம் அவர்கள் 6—6—1992 ஆம் நாளன்றும், திரு. பி. கே. லிங்க கவுடர் அவர்கள் 25—6—1992 ஆம் நாளன்றும், திரு. கே. என். சிவபெருமாள் அவர்கள் 1—7—1992 ஆம் நாளன்றும், திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் அவர்கள் 17—8—1992 ஆம் நாளன்றும் மற்றும் திருமதி கே. கமலாம்புஜம்மாள் அவர்கள் 19—8—1992 ஆம் நாளன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினராகிய திரு. ஜி. மூர்த்தி அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், பேரணாம்பட்டுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. ஜே. உய்யகொண்டான் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. க. வே. வீராணம்பலம் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும் மதுரை மாவட்டம் மேலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் இவர் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பி. கே. லிங்க கவுடர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. என். சிவபெருமான் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை அன்றைய மதுரை மாவட்டம் வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

திருமதி கே. கமலாம்புஜம்மாள் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை அன்றைய செங்கற்பட்டு மாவட்டம் கும்மிடிபூண்டித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து இப்பேரவை மிகுந்த துயருற்றுள்ளது. அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித் துளிகள் மவுனமாக நின்றனர்.)



முற்பகல் 10-05

(2) இரங்கல் தீர்மானம்.

முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் திரு. எம். இதயத்துல்லா மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கின்றேன்:

"திரு. எம். இதயத்துல்லா, முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் 18—9—1992 அன்று மறைவுற்ற செய்தி கேட்டு இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

மறைந்த திரு. எம். இதயத்துல்லா அவர்கள் 31—8—1979 முதல் 30—8—1984 வரை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக விளங்கினார். மேலும் அவர் 1969 மற்றும் 1982-இல் தற்காலிகக் குடியரசுத் தலைவராகவும் விளங் கினார். அவர் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக 1968 முதல் 1970 வரை பணியாற்றியுள்ளார். இந்தியத் திருநாட்டின் தலைசிறந்த குடிமகனாகவும், நல்லறி ஞராகவும் திகழ்ந்த அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரது மறைவு குறித்து இப்பேரவை தனது பெரும் துயரினையும், அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், இயற்கை எய்திய பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித் துளிகள் மவுனமாக நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற் றப்பெற்றது.

(3) வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 1, திரு. ம. [illegible] மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

1—

## சட்ட நடவடிக்கைத் தொடர்பு இயக்குநர் நியமித்தல்.

*9042—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்ட நடவடிக்கைத் தொடர்பு இயக்குநர் நியமிக்கும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில், சென்னைமாநகரம்உட்பட குற்றவியல்வழக்குகளை விசாரிப்பதற்கு என்று ஜுடீசியல் மாஜிஸ்ட்ரேட்கோர்ட்ஸ்-273 குற்றவியல் நீதிமன்றங்கள் உள்ளன. அவைகளில் ஒட்டு மொத்தமாக 295 உதவி குற்றவியல் வழக்கறிஞர்களும், டென்யூர் போஸ்ட்டிலே 185 பேருமாக 480 பேர் இன்றையதினம் பணியாற்றுகிறார்கள். அதேபோல, 21 மாவட்டங்களில் மாவட்ட அளவில் குற்றவியல் வழக்குகளைக் கவனிப்பதற்கென, குறிப்பிட்டக் கால அடிப்படையில் வழக்கறிஞர்கள் உள்ளனர். ஆக, 21 மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களில் 3 லட்சத்து 21 ஆயிரத்து 502 வழக்குகள் 1992 மார்ச் மாதம் வரையிலே நிலுவையில் உள்ளன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில், 1986 ஆம் ஆண்டு 480 அரசு வழக்கறிஞர் பணிகளையும், நிர்வாகத்தையும் சீரமைக்க, செம்மைப்படுத்த, சட்ட நடவடிக்கைத் தொடர்பு இயக்குநர்—டைரக்டர் ஆப் பிராசிகியூசன் அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கமே, சென்னை நகர காவல் கமிஷனர், மாவட்டங்களிலுள்ள கலெக்டர்கள் ஆகியோர் பல்வேறு சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளையும், அரசுத் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டியுள்ளதால், அவர்களால் வழக்குகளைத் துரிதப்படுத்தி, அதிகக் கவனம் செலுத்த இயலாமல் உள்ளது என்பதால் சட்ட நடவடிக்கைத் தொடர்பு இயக்குநர் என்கிற அமைப்பை—டைரக்டர் ஆப் பிராசிகியூசன் என்கிற அமைப்பை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். அதனை, தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தவுடன் கலைத்து விட்டது. அதனை இப்பொழுது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் 'ரிவைவ்' செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே அது செயல்பட இருக்கிறது. அதன் மூலம் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகள் துரிதமாக பைசல் செய்யப்படும்.

முற்பகல் 10—10

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிற டைரக்டர் ஆஃப். பிராசிகியூஷன்ஸ் அவர்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நியமிக்கப் போகிறது என்ற இனிப்பான செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி



நியமிக்கப்பட இருக்கிற அந்த டைரக்டருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்பட இருக்கிறது? இப்போது சில வழக்குகள், வழக்குகளின் தன்மை அறியப்படாமல் மேலெழுந்தவாரியாகப் போடப்படுவதால், உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விடுகிறார்கள். அண்மையில்கூட அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தன. அப்படி மேலெழுந்தவாரியாக அதிகாரம் கொடுக்காமல், முழு அதிகாரம்—சூப்பர்வைசரி பவர் கொடுத்து, உண்மையான குற்றவாளிகள் தப்பிக்காமல் இருக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கு இணங்கத்தான் இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின்படி உள் துறை—ஹோம் டிப்பார்ட்மென்ட்—இன்றைக்கு ஆர்கனைசேஷனல் ஸ்டிரக்சர் பற்றி அதற்குரிய நிர்வாகக் கூட்டமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்று ஆய்ந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர இருக்கிறது; அதை அவர்கள் பரிசீலித்து, பிறகு ஆணையிடுவார்கள்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகள் எவ்வளவு? அதைத் துரிதப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அரசு வழக்கறிஞர்கள் —லா ஆபிசர்ஸ்—எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? அவற்றில் காலியிடங்கள் எவ்வளவு என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ஹைறக்கோர்ட்டைப் பொறுத்த வரையில் 8,207 குற்றவியல் மேல் முறையீடுகள்—கிரிமினல் அப்பீல்ஸ்—மார்ச் 31 ஆம் தேதி வரையில் நிலுவையில் இருக்கின்றன. அதைப்போல சிவில் வழக்குகள் ஒரு லட்சத்து இருபதாயிரம் நிலுவையில் இருக்கின்றன. ஆக, ஒரு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து இருநூறு வழக்குகள் 'இன்றைக்கு நீதி மன்றங்களிலே சிவில் மற்றும் கிரிமினல் ஆகிய இரண்டு துறைகளிலே இருக்கின்றன. இதனையும் துரிதப்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டைரக்டர் ஆஃப் விடிகேஷன் என்ற அமைப்பை, எப்படி மாவட்டங்களில் டைரக்டர் ஆஃப் பிராசிகியூஷன் என்ற அமைப்பு துரிதப்படுத்த பயன்படுமோ, அப்படி உயர்நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கும் வழக்குகளைத் துரிதப்படுத்த டைரக்டர் ஆஃப் லிடிகேஷன் என்ற ஒரு அமைப்பை உருவாக்க ஆணையிட்டு, அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்களுடைய ஆணை பெற்று விரைவிலே அது அமைக்கப்படும். சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மொத்த

அரசு வழக்கறிஞர்கள் எண்ணிக்கை 185. இவற்றில் 135 இடங்கள் இதுவரையில் நிரப்பப்பட்டிருக்கின்றன. மீதியான இடங்கள் இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கிற காரணத்தாலே அதனைத் துரிதப்படுத்தி, அந்த இடங்களுக்கும் நியமிக்க அரசு மிக அக்கறையோடு செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புரட்சித்தலைவர் காலத்திலே டைரக்டர் ஆஃப் பிராசிகியூஷன் என்று உடனடியாக ஆரம்பிப்பதற்கு மாவட்ட அளவில்கூட ரீஜனல் டெபுடி டைரக்டர் அலுவலகத்தை வைக்க வாடகைக்கு இடம் பார்த்து, ஒரு மாத வாடகைகூட அளித்திருக்கிறார்கள். இதற்குப் பூர்வாங்கமான வேலைகள் தொடங்கப்பட்டு பின்னாலே நிறுத்தப்பட்டது. டைரக்டர் ஆஃப் பிராசிகியூஷன் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் கூட லா டிமான்டிலே, இதே மாமன்றத்திலே உடனடியாக துவங்கப்படும் அன்று அறிவித்தார்கள். அப்படி அறிவித்து பல மாதங்கள் கடந்து விட்டன. எனவே ஒரு குறிப்பிட்ட கால அளவில் இது தொடங்கப்படுமா அல்லது உடனடியாகத் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு அந்தக் கருத்துருவை அறிவித்தேன். பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதற்காக ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த ஆணையின்படி இன்றைக்கு உள் துறை அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் நிச்சயமாக டைரக்டர் ஆஃப் பிராசிகியூஷன்ஸ் செயல்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 2, திரு. என். ஆர். ராஜேந்திரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. செ. கு. தமிழரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

2—

தென்னாற்காடு மாவட்டத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை அல்லது நந்தனார் பெயர் சூட்டல்.

*9379—திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :



தென்னாற்காடு மாவட்டத்தை வள்ளலார் மாவட்டம் என பிரித்தபின் எஞ்சியுள்ள தென்னாற்காடு மாவட்டத்துக்கு தில்லையாடி வள்ளியம்மையின் பெயரையோ அல்லது நந்தனார் பெயரையோ சூட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம் பிரிக்கப்பட்டு புதிய விழுப்புரம் -வள்ளலார் மாவட்டம் ஏற்படுத்திய பின் எஞ்சியுள்ள தென்னாற்காடு மாவட்டப் பகுதிக்கு தென்னாற்காடு மாவட்டம் என்றே பெயரிட அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-15

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாப்பிரிக்கா போராட்டத்தின்போது, உத்தமர் காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, தன்னுடைய மார்பிலே துப்பாக்கித் தோட்டாக்களை ஏந்தி, மறைந்த, தாழ்த்தப்பட்ட மக்களின் மூதாட்டி தில்லையாடி வள்ளியம்மை அவர்களின் பெயரை, நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு வைக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் கூட, அது வேறு பல தவிர்க்க முடியாத காரணங்களால் மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிக்கிறபோது, அதில் ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு தில்லையாடி வள்ளியம்மையின் பெயரை வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலேயே முதன் முதலில் கோவில் நுழைவுப் போராட்டத்தைத் தொடங்கியவர் நந்தனார். 'மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளா?' எனக் கேட்டபோது, 'சற்றே விலகி இரும் பிள்ளாய், சந்நிதானம் மறைக்குதே' என்று கூறி, கோவிலின் உள்ளே நுழைந்த நந்தனார் திருப்பெயரை, சிதம்பரத்தைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு அரசு வைக்குமா என்று நான் கேட்பதற்கு முன்னால், இன்றைக்கு நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு கோயிலிலே ஒரு தாழ்த்தப்பட்டவன் நுழைவதற்கு, அர்ச்சகராக ஆவதற்கு உத்திரவிட்ட புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதன் முதலில் கோவில் நுழைவுப் போராட்டத்தை நடத்திய நந்தனார் பெயரை, சிதம்பரம் மாவட்டத்திற்கு வைக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்தக் காரணத்தினாலும் காயிதே மில்லத் அவர்கள் பெயரை நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வைக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேயே எந்தெந்த மாவட்டங்களுக்கு எந்தெந்தப் பெயர்களை வைக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டதோ, அந்தப் பெயர்களைத் தான் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வைத்துள்ளது. இடையில் வந்த அரசு அவைகளை மாற்றியது. இடையில் அப்படி மாற்றியதையெல்லாம் இந்த அரசு ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. ஆகவே புரட்சித் தலைவர் எதைச் செய்தாரோ அதைத்தான் புரட்சித் தலைவி அவர்கள் பின்பற்றிக் கொண்டு வருகிறார்கள். அதைப்போலத்தான், தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வள்ளலார் மாவட்டம் என்று, பிரிக்கப்படும் புதிய மாவட்டத்திற்குப் பெயர் வைப்பது என்பது புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் எடுத்த முடிவு. அதை அப்படியே இந்த அரசு பின்பற்றிக் கொண்டிருக்கிறது. எஞ்சியுள்ள புதிய மாவட்டத்திற்கு எந்தப் பெயரை வைப்பது என்பதில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் கூட ஒரு பெயரைச் சொல்லவில்லை, இரண்டு பெயர்களைச் சொல்லியிருக்கிறார். அதேபோல அரசுக்கும் பல்வேறு கோரிக்கைகள்—தியாகங்கள் செய்தவர்கள், நாட்டு மக்களுக்கு அறிமுகம் ஆனவர்கள் என்று பலருடைய பெயர்களை வைக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே எதை வைப்பது என்பதைப் பற்றியோ அல்லது எஞ்சியுள்ள மாவட்டத்திற்கு தென்னாற்காடு—கடலூர் மாவட்டம் என்று வைப்பதா என்பதைப் பற்றியோ, அரசு விரைவில் முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தென்னாற்காடு மாவட்டத்திற்கு நந்தனார் அவர்கள் பெயரை வைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பது அங்கேயிருக்கின்ற மக்களின் நீண்டநாள் எண்ணம். வைக்கத்திலே ஆதி திராவிடர்கள் கோயிலிலே நுழைய வேண்டுமென்று தந்தை பெரியார் அவர்கள் போராடியதற்காக, இன்றைக்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைக்கத்திற்குச் சென்று அவருடைய சிலையை அங்கே திறக்க இருக்கின்றார்கள். இந்தப் புதிய காலத்தில் அந்தப் போராட்டத்தை அன்று நடத்தியதற்காக தந்தை பெரியார் அவர்களை நாம் போற்றுகிறோம். ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நந்தனார் அவர்கள் தில்லை நடராஜர் கோயிலுக்குள் நுழைந்து சமூக நீதியை நிலை நாட்டிய போராட்டம் முக்கியமானது. எனவே நம்முடைய அரசு தென்னாற்காடு மாவட்டத்திற்கு நந்தனார் பெயரை வைத்தால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும். அதனை அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பதை இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன பதிலே இதற்கும் பொருந்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வள்ளலார் மாவட்டம் அமைக்கும் பணியைத் தொடங்கும் வகையில் தனி ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து, அதற்கான வேலைகளைக் கவனிக்கும் நிலைமையை ஏற்படுத்திய மாண்புமிகு இதய தெய்வம் அவர்களுக்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாவட்டத் துவக்க விழா எப்போது நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே துவக்கப்பட வேண்டுமென்பதற்குத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதற்குத் தனி அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். தனி அதிகாரி அதற்கான பணியில் ஈடுபட்டு அதற்கான எல்லைகளையெல்லாம் வரைந்து அனுப்ப இருக்கிறார். முதலில் ஒரு ஆய்வுக் குழு அனுப்பப்பட்டது. அந்தப் புதிய மாவட்டத்தில் எந்தெந்த வட்டம், எந்தெந்த ஊர்கள், எந்தெந்த கிராமங்கள் இருக்க வேண்டுமென்பதையும் குழு ஆய்வு செய்தது. இன்றைக்கு நிலைமைக்கேற்றவாறு விரைவில் மாவட்டத் துவக்க விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 3, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

3—

திருவெண்காடு ஊராட்சியிலுள்ள நூலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்.

* 9346—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழி தாலுக்கா, திருவெண்காடு ஊராட்சியிலுள்ள நூலகத்திற்கு நூலகத்துறை மூலம் கட்டடம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தாலுகா, திருவெண்காடு ஊராட்சியிலுள்ள நூலகத்திற்கு நூலகத் துறை மூலம் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். மேலும் நாகை காயிதே மில்லத் மாவட்டத்திற்கு எத்தனை நூலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? அந்தப் பகுதியிலே ஏராளமான மக்கள் வாழ்வதால் மிகவும் சுலபமான சூழ்நிலை இருப்பதால், அவசியம் கருணை உள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த சீர்காழி தாலுகா, திருவென்காடு ஊராட்சி நூலகத்திற்கு நூலகக் கட்டிடம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டுகிற திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இருந்த போது துவக்கப்பட்டது. அதன்படி பல்வேறு நூலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பொதுவாக, பொது மக்களுடைய ஆதரவை நாம் எதிர்பார்க்கின்றோம். அந்த அடிப்படையிலே காலி மனைகள் கிடைக்குமேயானால் அங்கே கட்டிடங்கள் கட்டுவது என்கிற ஏற்பாட்டின்படி, தஞ்சாவூர் நூலக ஆணைக் குழுவால் இலவசமாக 33 காலி மனைகள் பெற்று, 33 நூலக கட்டிடங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி இப்போதுதான் அளிக்கப்பட்டு இருக்கிறது. தற்போது மேலும் 8 நூலகங்களுக்கு இலவசமாக காலி மனைகள் பெறப்பட்டுள்ளன; அங்கேயும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இந்தக் குறிப்பிட்ட திருவெண்காடு ஊராட்சியிலே இருக்கின்ற இந்த நூலகத்திற்கு இதுவரையிலும் காலி மனை பெறப்படவில்லை. அந்தப் பொறுப்பை தனிப்பட்டவர்களோ, உள்ளாட்சி நிறுவனங்களோ ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 4, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



4—நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டிடம்.

*10126—திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடப் பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு, புதுப் பொலிவோடு வந்து இருக்கிறார்.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் உதகையில் முதன்மைக் கல்வி அலுவலகம் தற்போது ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மூன்று அறைகளில் இயங்கி வருகிறது. அந்த இடம் மிகவும் பற்றாக்குறையாக உள்ளதினால் இந்த முக்கிய அலுவலகத்திற்கு கண்டிப்பாக ஒரு புதிய கட்டிடம் தேவைப்படுகிறது. ஆகவே, அரசு புதிய கட்டிடத்தை உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு ஒரு கட்டிடம் தேவை என்பதை அரசு நன்கு உணருகிறது. ஆனால் இந்த ஆண்டு அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நிதி நிலைமை சரியானதற்குப் பிறகு, அங்கிருந்து கருத்துரு பெறப்படுமேயானால் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டப்படும்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இதை ஒரு முன்னுரிமையாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டுக்கான கல்வித் திட்டங்களைப் பற்றிப் பரிசீலனை செய்கின்ற போது மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையும் எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

5—

பெரிய நகரங்களில் அரசு நடமாடும் மருத்துவமனை.

*9084—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரிய நகரங்களில் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களை உடனே காப்பாற்ற அரசு நடமாடும் மருத்துவமனை துவக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) பெரிய நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் விபத்துப் பிரிவு தனியாக உள்ள காரணத்தால் நடமாடும் மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் விபத்து மற்றும் அவசரப் பணிகளுக்காக முதற்கட்டமாக சென்னை நகரத்தில் 5.56 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அந்தத் திட்டம் தொடங்கும் போது, கோவை, மதுரை, சேலம், திருச்சி—இப்படிப் பெரிய நகரங்களில் விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களை வாகனங்களில் வந்து எடுத்துச் செல்வதற்கு வாடகை டாக்சிகள் கூட வருவதற்குத் தயங்குகின்ற வேளையில் அரசு ஆஸ்பத்திரிக்கு போன் செய்து, அவர்களும் ஆம்புலன்ஸ் அனுப்புவதற்கு ஒரு மணிநேரம் ஆவதற்குள் அந்த விபத்தில் காயப்பட்டவர்கள் இறந்து விடுகிற சூழ்



நிலை ஏற்படுகின்ற காரணத்தால் பெரியநகரங்களில் நடமாடும் மருத்துவமனைகளை அமைக்கின்ற போது அந்த விபத்துக்குள்ளானவர்களை உடனுக்குடன் காப்பாற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்பதால் அந்தத் திட்டத்தை இந்த ஆண்டில் அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி, சென்னையிலே 5.56 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தைச் செயலாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை உலக வங்கி உதவியோடு செய்ய நாம் முயற்சி எடுத்து இருக்கிறோம். அதே போன்று கோவை, திருச்சி சேலம் ஆகிய நகரங்களில் இதை அமலாக்குவதற்காக ஒரு 10 கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டம் தயாரித்து அதை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தப் பணம் கிடைத்த பின்னால்தான் அதைப் பற்றி ஆலோசிக்கப்படும். அதற்கு முன்னதாக 15 இடங்களிலே எங்கெங்கே அதிகம் விபத்துக்கள் நடக்கின்றவோ அதற்குஅருகாமையிலே உள்ள காவல் நிலையத்திலே நம்முடைய ஆம்புலன்ஸ்களை நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, ஓரளவிற்கு அந்தப் பிரச்சினை தவிர்க்கப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 10—25.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் ஆம்புலன்ஸ் நிறுத்துவதாகக் கூறி இருக்கிறார்கள் முக்கிய நகரங்களில், கோவை, மதுரை, சேலம் ஆகிய ஊர்களில் டிவிஷன் வாரியாக மாநகராட்சி மருத்துவ மனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ் நிறுத்துவதற்கு பதிலாக, இந்த நடமாடும் மருத்துவ மனை மூலம் உடனடியாக சிகிச்சை அளிக்கிற விதத்தில் மருத்துவர்களோடு அந்த வாகன வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வசதியைச் செய்ய முடியாது. காரணம், அங்கேயே எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பது முடியாத காரியம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த நோயாளிகளை அல்லது அடிபட்டவர்களை, விபத்திற்குள்ளானவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு வந்தால் தான் எல்லா வசதிகளையும் நம்மால் செய்து கொடுக்க முடியும். இருந்தாலும் ஆம்புலன்ஸ் எல்லா இடங்களிலும் நிறுத்தப்படுகிற போது இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தவிர்க்க முடியும் என்று கருதுகிறோம். ஒவ்வொரு டிவிஷனுக்கும் தனியாக வண்டி கொடுக்க முடியாது. நிலைமை எப்படி இருக்கிறது என்று உங்களுக்கு தெரியும். எனவே, தனித்தனியாக எங்கெல்லாம் விபத்து நடக்கிறது என்று தெரிந்து எல்லா இடங்களிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பது என்பது முடியாத காரியம்,

காவல் நிலையத்தில் நிறுத்தி வைப்பதற்குக்காரணம் உடனடியாக தகவல் எட்டுமே என்பதற்காகத்தான் வயர்லெஸ் மூலமாக அங்கே தகவல் கொடுப்பார்கள் என்ற காரணத்தால் தான் அங்கே நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய பெரிய நகரங்களிலுள்ள தனியார் மருத்துவமனைகள் 'பர்ஸ்ட் எய்ட் சர்டிபிகேட் கோர்ஸ்' என்ற கோர்சைத் தொடங்குவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட மருத்துவமனைகள் பெரிய நகரங்களில் தங்களுடைய சொந்தச் செலவில் மருத்துவ ஊர்திகளை அமைத்து விபத்து ஏற்படும் நேரங்களில் உபயோகிப்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் முன் வருவார்களென்று தெரிகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலனை செய்து தனியார் மருத்துவமனைகளுடைய சேவையைப் பெறுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாராவது இப்படி முன்வருவார்களானால் நிச்சயமாக இந்த அரசாங்கத்திற்கு அதில் எந்தத் தடையும் இல்லை. அவர்கள் சொல்கிறபோது அவர்களை அணுகி, அதை எந்த முறையில் அமலாக்குவது என்பதைப் பற்றி ஆலோசனை செய்து செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை மருத்துவமனையில்தான் விபத்து ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க பிரிவு இருக்கிறது. காவல் நிலையங்களில் வாகனங்களை நிறுத்தி விபத்தில் காயமுற்றவர்களை ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த வாகனத்தில் முதலுதவி செய்கிற வகையில் மருத்துவ அதிகாரியையும் சேர்த்து அனுப்புவதற்குத் திட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் தான் விபத்து நடந்த இடத்தில் உயிர்ப்பாதுகாப்பிற்கானமுதல்சிகிச்சை அளித்து 100 அல்லது 150 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு உயிர்ப்பாதுகாப்போடு விபத்தில் காயமுற்றவர்களை அழைத்துச் செல்ல முடியும். அந்த உதவியைச் செய்யச் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை மருத்துவமனை மட்டுமல்ல,



சட்டமன்றத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவிக்கச் சொல்லி, நாங்கள் அறிவித்திருக்கிறோம். அதன் படி, ஒரு பரிசுத் திட்டம் கொடுக்கப்பட்டு வருகிறது. முதல் தலைமை மருத்துவமனை உள்ளடங்க ஏறத்தாழ 37 இடங்களில் இப்படி விபத்துப் பிரிவு தமிழகம் முழுவதும் நாம் வைத்திருக்கிறோம். எனவே, அந்த இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அவ்வளவு நேரம் ஆகாது. முதலுதவிக்காக மருத்துவர்களை அந்த வாகனத்தில் வைக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். நாம் வாகனம் நிறுத்துகிற இடத்திலிருந்து முதலுதவி அளிக்கிற வகையில், அந்த அளவுக்கு வசதியான மருத்துவமனைகள் மிக அருகாமையில் இருக்கும். ஆகவே, முதலுதவிக்காக மருத்துவர்களை அதிலே வைக்க வேண்டிய அவசியம் இல்லை. விபத்து நடந்த இடத்திலிருந்து முதலுதவிக்காகக் கொண்டுபோகிற அந்த மருத்துவமனை மிக அருகாமையில் இருக்கும். மருத்துவர்கள் அந்த வாகனத்தில் இருப்பதன் மூலமாக பெரிய மருத்துவமனைக்குக் வசதியை செய்துவிட முடியாது. எனவே, மருத்துவமனைக்குக் கொண்டுபோவதுதான் பொருத்தமாக இருக்கும். எனவே முதல் கட்டமாக வாகனங்களை நிறுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 6, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமச்ச

6-—

## குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வோர் உதவித் தொகையை உயர்த்துதல்.

*11081— திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் ஆண், பெண் இருவருக்கும் அரசு வழங்கும் உதவித்தொகையைக் கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ரங்கநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லி விட்டார்கள். குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் குடும்பத்தினருக்கு, அதைச் செய்து கொண்ட பிறகு பல்வேறு வியாதிகள் வருகின்றன. அதைப் போக்குகிற வகையில் அரசு

வழங்குகிற உதவித் தொகையை கூடுதலாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு இப்போது தருகிற தொகை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால் அதை உயர்த்தித் தர அரசு முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இல்லை யன்று சொன்ன காரணத்தால் நாங்களும் இல்லையென்று சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம் மத்திய அரசாங்கம் பெண்களுக்காக, அந்த ஆபரேஷன் செய்துகொள்பவர்களுக்கு 145 ரூபாயும், இதர செலவுகளுக்காக 55 ரூபாயும் என்று மொத்தமாக 200 ரூபாய் கொடுக்கிறது. தமிழக அரசு அதோடு 70 ரூபாய் சேர்த்து 270 ரூபாயாக இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, நிதிப் பிரச்சினையின் காரணமாகத்தான் இதை இப்போது நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது, உயர்த்த முடியாது என்று தெரிவித்தேன். மத்திய அரசாங்கம் உயர்த்திக் கொடுத்தால் நமக்குப் பிரச்சினையே இல்லை.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 200 ரூபாய் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். பல்வேறு பொது அமைப்புகள் தற்போது இருக்கின்றன. அதன் மூலமாகவும், நிதி உதவியைத் திரட்டி மாநில அரசு கொடுக்கின்ற 70 ரூபாயை, 200 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்றும் அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களிலே இருப்பதைவிட நாம் தான் அதிகமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாநிலத்திலே தான், இந்த அச்சீவ்மென்ட் இருக்கிறதே, அதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, நாம்தான் முதலிடத்திலே இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி), மத்திய அரசாங்கம் எவ்வளவு நிர்ணயித்துக் கொடுக்கிறார்களோ, அதைவிட அதிகமாக 4 சதவீதம் கூடுதலாக நாம் இப்போது பெற்றிருக்கிறோம். அதாவது அவர்கள் 100 சதவீதம் குறிப்பிட்டுக் கொடுத்தால், 104 சதவீதம், நாம் இப்போது அச்சீவ் செய்து இருக்கிறோம். எனவே, நிச்சயமாக இதை உயர்த்திக் கொடுக்க வேண்டிய நிலையில் இல்லை. ஆனால், மத்திய அரசாங்கம் இதைப் பரவலாக செய்யலாம். அப்படிச் செய்தால், அது வசதியாகவும் கூட இருக்கும். கூடுதலாக இப்போது ஒரு திட்டத்தைக் கடந்த



பரிசாக அனேகமாக ஒரு பவுன், அதே போன்று மூன்று இரண்டாவது பரிசுகள் என்று இப்படிக் கொடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும், தனித்தனியாக இந்தக் குலுக்கல் நடந்து இப்போது இது நடைமுறையிலே வைக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணத்தால், ஏறத்தாழ கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்த 4 மாத காலத்தில்,—இந்த ஆண்டு 4 மாத காலம், இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னாலே, கடந்த ஆண்டிலே இந்தத் திட்டம் இல்லாத இதே காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது,—ஏறத்தாழ 15 ஆயிரம் பேர்கள் கூடுதலாக இந்த அறுவை சிகிச்சையிலே முன்வந்து செய்து கொண்டு இருக்கிறார்கள் எனவே, இந்தத் திட்டம் முழுமையாக, சிறப்பாக, மற்ற மாநிலத்தோடு ஒப்பிடுகிறபோது, நடந்து கொண்டு இருக்கிறது. மத்திய அரசிலேயிருந்து வந்த ஒரு ரெவியூ கமிட்டிகூட, இதைச் சிறப்பாக செய்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போய் இருக்கிறது. எனவே, இதை அதிகப்படுத்திக் கொடுக்கின்ற வாய்ப்பு இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆள் சேர்க்கின்ற வேலையிலே பிரைமரி ஹெல்த் சென்டர்களினுடைய ஹெல்த் விசிட்டர்கள் ஈடுபடுத்தப் படுகின்றார்கள். அவர்கள் வழங்குகின்ற தொகைக்கும், பி. டி. ஓ. க்கள் வழங்குகின்ற தொகைக்கும் வித்தியாசம் இருப்பதால், அவர்களால், ஆள் பிடிக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள். இதனால், மேலதிகாரிகள் மூலமாக பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, பி. டி. ஓ. க்களும், பிரைமரி ஹெல்த் நர்சஸ் கொடுக்கின்ற தொகை ஒரே அளவாக இருக்கின்ற வகையிலே ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒதுக்குகின்ற தொகை ஒரே மாதிரியாகத்தான் ஒதுக்குகிறது. ஆனால், ஆங்காங்கே அவர்களுடைய வசதிக்கு ஏற்ப அங்கே இருப்பவர்கள் உங்களைப் போன்றவர்களைப் பயன்படுத்தி, இந்தக் காரியங்களைச் செய்கின்ற காரணத்தால், இதிலே ஏற்றத் தாழ்வுகள் வருகின்றன. எனவே, உங்கள் ஊரிலே இந்தப் பிரச்சினை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

1992 செப்டம்பர் 21

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே இந்தக் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்கின்ற பெண்களிலே அதாவது ரொம்ப பேர் ஆக—100 பேர்கள் செய்தால் அதிலே ஒன்றிரண்டு கேஸ்களில் வேலை செய்ய முடியாத அளவிற்கு அவர்களுடைய உடல்நிலை ஆகிவிடுகிறது. அவர்கள் இதனால் மிகவும் பயப்படு கிறார்கள். எனவே, அப்படி வேலை செய்யமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அவர்கள் மருத்துவமனை சான்று கொடுத்தால் அவர்களுக்கு தனியாக ஏதாவது உதவி செய்தால் நலமாக இருக்குமே, அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இது தனியாக பரிசீலிக்க வேண்டிய விஷயம். காரணம், அப்படி ஏதாவது ஒரு முறையை வைத்து விட்டால், நிச்சயமாக எல்லோரும் அதற்கு மனு செய்கின்ற நிலைமை ஏற்படுமேயொழிய, குறிப்பிட்ட முறையாக அது நடக்கும் என்று நம்மால் நம்ப முடியவில்லை. எனவே, அதைப் பார்த்துத்தான் அதிலே இருக்கின்ற சிரமங்களை எல்லாம் பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்பது மிக முக்கியமான திட்டம். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கு இதுதான் காரணம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்கூட கடந்த மாதம் டெல்லியிலே நடந்த மாநாட்டில் அருமையான கருத்தை—இந்தியாவே பாராட்டும்படியான கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு கட்டாயமாக ஆள் பிடித்து அழைத்து வரவேண்டிய ஒரு கட்டாய நிலைமை இருக்கிறது. இதை மாற்ற, ஒரு மோட்டிவேசன், அதாவது மக்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை உணரும்படியாக செய்வதற்கு—தங்கப் பதக்கம் போன்ற பரிசுகள் எல்லாம் கொடுக்கிறார்கள்—இன்னும் இதைவிட மேலும் சிறப்பாகச் செய்வதற்கு, அரசு வேறு ஏதேனும் திட்டங்கள் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அரசாங்கத்திற்கு தெரிந்த அத்தனை முறைகளையும் கையாண்டுவிட்டது. எனவே, அத்தனை முறைகளையும் கையாண்டுதான் இதை ஓரளவிற்கு நாம் எட்டிப் பிடித்து இருக்கிறோம். இன்னும் முழுமையாக எல்லா மாநிலங்களிலேயும் கடைப்பிடிக்கிறபோதுதான், முழுமையான நன்மை நாடு முழுவதும் கிடைக்கும். எனவே, தனியாக, புதிதாக எந்தத் திட்டத்தையும் நாம் ஆலோசித்துத்தான் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. கட்டாயப்படுத்தி ஆள் பிடிப்பதை நிறுத்த



1992 செப்டம்பர் 21]

வேண்டும் என்று சொன்னார்கள். இதை மோட்டிவேட் செய்வதற்கு அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. என்றைக்கு மக்கள் தாங்களாக முன்வந்து இதைச் செய்து கொள்கிறார்களோ, அன்றைக்கு நிச்சயமாக கட்டாயப்படுத்தி, ஆள் பிடிக்கின்ற அந்த நிலை கைவிடப்படும். அதுவரையில் அதைக் கொஞ்சம் தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு என்கின்ற பொருள் பற்றிய விவாதம் எங்கே வந்தாலும் அதில் ஏதோ பெண்கள் தான் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டுமென்ற ஒரு உணர்வினை, அரசு செய்கின்ற விளம்பரங்களாக இருந்தாலும் சரி; மற்றும் பிரச்சாரங்களாக இருந்தாலும் சரி, பெண்கள் மட்டுமே செய்து கொள்ள வேண்டுமென்று முன்னிலைப் படுத்தப்பட்டு வருவதைப் போன்ற ஒரு உணர்வு இருக்கிறது. அதைப் போலவே ஆண்களும் அந்த அளவிற்கு இந்தத் திட்டத்தில் பங்கு கொள்வதற்கு வசதியாக இந்த விளம்பரங்கள், ஆண்களும் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதைத் தூண்டுகின்ற வகையில் அமையுமா? அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்வதற்கான திட்டங்கள் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரத்திலே ஆண்களும் செய்து கொள்ள வேண்டுமென்றுதான் செய்யப்படுகிறது. அரசைப் பொறுத்தவரையில், பிரித்துப் பார்க்கவில்லை. ஆனால் வீட்டிலே கொஞ்சம் ஆண்கள் அதிகாரமாக இருக்கிற காரணத்தால், பெண்களை அனுப்பிவிடுகிறார்கள் என்பது தான் எங்களுடைய கருத்து. எனவே அதை மாற்றுவதற்கு உங்களைப் போன்றவர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்தால் வசதியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே அரசைப் பொறுத்தவரையில் சரிசமமாகத்தான் இந்த விளம்பரத்தைச் செய்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஆண்கள் செய்து கொண்டால் நல்லது என்பதைக் கூட இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு நீங்களே முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்று கூட தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 7, திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

7—

**வனத்துறையினர், கள்ளச்சாராயம் தயாரிப்போர் மீது வழக்கு போடுவதற்கு சட்டம் இயற்றுதல்.**

*9356—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் உள்ள வனப்பகுதிகள், சமூகநலக் காடுகள் ஆகிய இடங்களில் கள்ளச் சாராயம் தயாரிக்கப்படும்போது காவல் துறையினர் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லாததால், வனத்துறையினர் கள்ளச் சாராயம் தயாரிப்போர் மீது வழக்கு போடுவதற்கு சட்டம் இயற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறைஅமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதிகள், சமூக நலக்காடுகள் ஆகிய இடங்களில் சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைகளைத் தடுத்து ஒழித்திட அப்பகுதியில் பணிபுரியும் வனக் காவலாளர், வனக் காப்பாளர், வனவர், வனச்சரகர் ஆகியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும், தவறினால், முதல் குறைப்பாட்டிற்கு எச்சரிக்கையும், பின்னர் கண்டுபிடிக்கப்படும் குறைபாட்டிற்கு தற்காலிகப் பணி நீக்கமும் செய்யப்படும் எனவும் ரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வனப் பகுதிகளில், சமூகநலக் காடுகள் மற்றும் அங்கே இருக்கக் கூடிய வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் காய்ச்சுகின்ற காரணத்தால் வனத்துறை அதிகமாக பாதிக்கப்படுகிறது. ஆகையினால் காவல் துறைக்கு எப்படி அவர்கள் மேல் வழக்கு தொடர்வதற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ, அதே மாதிரி வனத்துறை அதிகாரிகளுக்கும் அந்த மாதிரி வழக்கு தொடர்வதற்கு சட்டத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றல் மிக்க முதலமைச்சராக, இங்கே நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, வனத்துறையில் இது போன்ற குறைபாடுகள் இங்கே எனக்கு சுட்டிக்காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சும்போது, வனத்துறை அழிக்கப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதே நேரத்தில் இதுவரையில், வனத்துறையில் உள்ள வனத்துறை அதிகாரிகள் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, ஏதேனும் தகவல் கொடுத்துள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் இது போன்ற தகவல்களைத் தருவார்களேயானால், இந்த அரசு தயக்கமின்றி நடவடிக்கை எடுக்கும். நம்முடைய புரட்சித் தலைவி யார் தவறு செய்தாலும், அதைத் தண்டிக்கின்ற ஆற்றல் மிக்க முதலமைச்சர் தமிழகத்திலே இருக்கும் வரையில், யாராலும் கள்ளச் சாராயம் காய்ச்ச முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில், கன்னியாகுமரியில் இருக்கின்ற ஃபாரஸ்டுகளிலே, அதிகமான இடங்களிலே— உங்கள் மூலமாகச் சொல்கிறேன்— கேரள எல்லையிலே, கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடாது என்ற காரணத்தினாலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அனைவரும், கள்ளச் சாராய வியாபாரிகளும் மலைகளில் வந்துவிட்டார்கள். குறிப்பாக என்னுடைய பகுதியில் இருக்கின்ற பேச்சிப்பாறை, கல்வாரி ஃபாரஸ்டுகளிலே சாராயம் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இதை உங்கள் மூலமாகச் சொல்கிறேன். இதில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் இன்றைய தினம், இந்த இடத்திலேதான் சொல்கிறார்களே தவிர, இதற்கு முன்னால், இதுபோன்ற குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டியிருந்தால், இந்த அரசு தயக்கமின்றி நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு :

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை காடுகளில் ஒருசில இடங்களில் கேரள எல்லைப் பகுதிகளில் உள்ள காடுகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றபோது காவல்துறையினர் அங்கு

சென்று அவர்களைப் பிடிப்பதற்கு சட்டமில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அதற்கு வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற பேர்வழிகளைப் பிடிப்பதற்கு பொதுவான ஒரு சட்டத்தினை இயற்றி, காவல்துறையினர் அங்கு சென்று, அவர்களைக் கைது செய்ய முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் குறிப்பிட்டது ஒரே கருத்தைத்தான். கேரள மாநிலத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நம்முடைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை வனத் துறையினுடைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக அந்தப் பகுதியிலே இருக்கிற கள்ளச் சாராயத்தைத் தடுக்க வேண்டும் என்று இந்த அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 8, திருமதி கே. மரியம்உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

8—

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்துதல்.

*9846 —திருமதி கே. மரியம்உல் ஆசியா :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்பாடு செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு விடுமுறை நாட்களிலே பொது மக்கள் சொரிந்தும் செல்வதற்கு வசதியாக, அதிக அளவில் பஸ்கள் விடப்படுமா ? மேலும் அந்த அறிஞர் அண்ணா உயிரியல்



பூங்காவைப்பற்றி பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தும் வகையில் செய்திப்படம் தயாரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் வரலாற்றைப் படைத்த நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கிற அந்த அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யலாம் என்று ஆணை பிறப்பித்து உத்திரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பணிகள் இப்போது விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்தைப் பற்றிக் கேட்டார்கள். அந்தப் பகுதியிலேயிருந்து 16 வழித் தடங்களில் பொது மக்கள் செல்வதற்கு இன்றைக்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 9, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

9—

மேலப்பாளையத்தில் நூற்பாலை

*9341—திரு. பே. தர்மலிங்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் ஒரு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதியை தொழிலில் பின்தங்கிய தொகுதியாக கடந்த சட்டமன்றத் கூட்டத் தொடரில் அறிவித்த நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பாளையங்

கோட்டை தொகுதி மக்களின் சார்பாக வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டை தொகுதியில் எல்லா வசதிகள் இருந்தும், தொழில்கள் எதுவும் இல்லாத நகரமாக விளங்குகிறது. எனவே பாளையங் கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் ஒரு நூற்பு ஆலை அமைக்க கருணை உள்ளம் கொண்ட நமது அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் பேட்டையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை 50 ஆயிரம் கதிர்களுடனும், பாரதி கூட்டுறவு நூற்பு ஆலை 12 ஆயிரம் கதிர்களுடனும் செயல்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர தமிழகத்தில் 17 நூற்பு ஆலைகள் இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக இவைகள் 13.52 இலட்சம் கிலோ கிராம் சிட்டா நூலையும், 11.52 இலட்சம் கி.கிராம் கோன் நூலையும்உற்பத்தி செய்கிறது. தற்போது தமிழகத்தில் நூல் உற்பத்தியில் உபரியாக இருக்கிற காரணத்தால்இதற்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 10, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

10—

சங்ககிரிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 10331—டாக்டர் வெ. சரோஜா :
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலாக்கப்பட்டும், குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சங்ககிரி செயற்பொறியாளர் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ள குழாய்த் தொடரமைப்பை மாற்றி யமைக்கும் (Diversion Pipe Line) திட்டத்தை இவ்வாண்டில் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



(ஆ) சங்ககிரி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகையை சங்ககிரி பேரூராட்சி செலுத்தியவுடன் வேலை துவங்கி முடிக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி செலுத்த வேண்டிய தொகையை செலுத்தியபின் விரைவில் தொடங்கப்படும் என்று சொல்லி யிருக்கிறார். செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு ? செலுத்தியுடன் எவ்வளவு விரைவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வரும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5 இலட்சம் ரூபாயை சங்ககிரி பேரூராட்சி செலுத்த வேண்டியிருக்கிறது. செலுத்தியவுடன் உடனடியாக வேலை துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

11—

வாழை, வெற்றிலைப் பயிர்களை பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்த்தல்.

*9374—திருமதி ப. சரஸ்வதி:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாழை, வெற்றிலைப் பயிர்களைப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாழை, வெற்றிலைப் பயிர்களைப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்க்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. எனினும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம்மூலம் செயல்படும் வாழைப் பயிருக்கான ஈட்டுறுதித் திட்டத்தினை விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் கோவை, திருச்சி, வ.உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்த சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பிரிமியத் தொகை முழுவதையும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி பெற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய முழு ஈட்டுத் தொகைக்குப் பொறுப்பேற்கிறது.

[1992 செப்டம்பர் 21

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி காவிரியின் வளம் கொண்டு இருப்பதால், வாழையும் வெற்றிலையும் செழித்து வளர்ந்தாலும் புயல் காலங்களில் அடியோடு அழிந்து விடுகிறது. கோடிக் கணக்கான இழப்பிற்கு ஆளாகி மக்கள் துடிக்கின்றனர். மக்களின் ஜீவாதார பிரச்சினையாக இருக்கக்கூடிய இந்தப் பணப் பயிர்கள் என்று கருதப்படக்கூடிய பயிர்களை பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ஒரு தொகையைக் கட்டச் சொல்லி, அந்த இரண்டு ஆண்டுக்குள் இழப்பு ஏற்பட்டால் அந்த இழப்புக்கு மக்களுக்கு நிவாரணம் கொடுக்கும் வகையில் மக்களைக் காப்பாற்ற வழிவகை செய்யக் கூடிய எங்களுடைய தானைத் தலைவியினுடைய அரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்து, பெற்றுத் தருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மத்திய அரசு திட்டத்தில் 7 பயிர்களுக்கு மட்டும்தான் ஈட்டுறுதித் திட்டம் இருக்கிறது. இரண்டு பயிர்களையும் சேர்க்க வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசோடு கலந்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ப. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து எவ்வளவு காலங்களில் இதைப் பெற்றுத் தரமுடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உடனடியாக மத்திய அரசோடு இதைப் பற்றிப் பேச இருக்கின்றோம். மத்திய அரசு எவ்வளவு விரைவில் ஒப்புக் கொள்கிறதோ அவ்வளவு விரைவில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர் பாதுகாப்பு அதாவது வாழை வெற்றிலை இவை இரண்டிற்கும் நான்கு ஜில்லாக்களில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திண்டுக்கல் ஜில்லாவிலே கொடைக்கானல் மலை, பண்ணைக்காடு பகுதி, தாண்டிக்குடி பகுதி, சிறுமலை இந்தப் பகுதிகளில் முடிக்கொத்து நோய் வாழைக்கு வந்து முழுவதுமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் அளிக்க முடியாத ஒரு சூழ்நிலை



1992 செப்டம்பர் 21]

ஏற்பட்டது. ஆகையினால் இந்தத் திண்டுக்கல் மாவட்டத்தையும் இந்தத் திட்டத்திலே சேர்த்து அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவகேளே அரசு, இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சா அவர்கள் ஏழு பயிர்கள் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்திலே சேர்க்கப்பட்டது என்று சொன்னார்கள். அவை எவை எவை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா அத்துடன் கோவை மாவட்டத்தில் இன்றைக்கு அழிந்து வருகின்ற தென்னை மரங்களை இந்த இன்சூரன்ஸ் திட்டத்திலே சேர்க்கின்ற வகையிலே அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஜி விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவாகளே இதுவரையில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி ஆகிய பயிர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் இருக்கிறது. மேலும் தென்னை போன்ற பயிர்களைச் சேர்க்க வேண்டும் என்றயோசனை சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிச்சாமி.

திரு. நா. சா. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்சூரன்ஸ் திட்டத்திலே அறிவிக்கப்பட்டுள்ள பயிர்கள் பெரும்பாலும் குறைந்த முதலீட்டிலே செய்யப்படுகின்ற தானியப் பயிர்களாக இருக்கின்றன. அதைவிட அதிகமான முதலீடு செய்கின்ற வாணிபப் பயிர்களில்தான் இந்த இழப்பிற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எனவே எல்லா வாணிபப் பயிர்களுக்கும் இன்சூரன்ஸ் திட்டத்தை அமுலாக்குவதற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மத்திய அரசின் அகில இந்திய திட்டம். தமிழ்நாட்டிற்காக மட்டும் தனியாகச் செய்ய முடியாது. ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற யோசனையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய ஒப்புதலையும் பெற்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 செப்டம்பர் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திருமதி செ. சுந்தராம்பாள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

2—

மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்குதல்.

* 10048 திருமதி செ. சுந்தராம்பாள்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேட்டூரிலுள்ள அலுமினியத் தொழிற்சாலையில் கடந்த 6 மாதங்களாக உற்பத்தி இல்லாமல் இயந்திரங்களை விற்று தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நிர்வாகமானது, இயந்திரங்களை விற்று தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுத்து வருவது தொடர்பான தகவல் எதுவும் இல்லை. கடந்த ஓராண்டாக இந்நிறுவனத்தில் உற்பத்தி ஏதும் நடைபெறாததால், நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதால், தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்க தொழிற் சங்கங்களின் ஒப்புதலின் பேரில் மூலப் பொருட்களை மட்டும் விற்றதாக அறியப்படுகிறது.

(ஆ) மால்கோ நிர்வாகம் தொழிற்சாலையை மீண்டும் திறக்கச் சில சலுகைகளைக் கோரி தமிழக அரசிடம் விண்ணப்பித்திருந்தது. அக்கோரிக்கைகளை மனிதாபிமானம் மிக்க தொழிலாளா நலம் காக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசினுடைய தொழிற்துறை பரிசீலனைசெய்து மின்சாரக் கட்டண பாக்கித் தொகையை தவணை முறையில் செலுத்துதல், மின் கட்டணச் சலுகை, விற்பனை வரி ஒத்தி வைத்தல் ஆகிய சலுகைகளை அரசு அளித்துள்ளது. மேற்கண்ட சலுகைகளை வைத்து, நிர்வாகம் நிதி நிறுவனங்களை அணுகி சலுகைகளைப் பெற்று மூன்று மாதத்திற்குள்ளாக தொழிற்சாலையைத் திறக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. அரசு அறிவித்துள்ள சலுகைகளின் அடிப்படையில் நிர்வாகம் நிறுவனத்தை இயக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

திருமதி செ. சுந்தராம்பாள்; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் 3 மாதத்தில் அந்தக் கம்பெனி திறக்கப்படும் என்று கூறியதற்காக தாயுள்ளம்



1992 செப்டம்பர் 21]

கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பில் நன்றியைக் கூறிக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஓராண்டுகாலமாக அந்த கம்பெனியின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காரணத்தினால் அந்தத் தொழிற்சாலையின் 1,500 குடும்பத்தினர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 6 மாதமாக சம்பளம் எதுவும் கொடுக்கப்படாமல் உள்ள காரணத்தால் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். 1990–91 ஆம் ஆண்டுக்கான தீபாவளி போனஸ் கூட இன்னும் அவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது. எனவே தாயுள்ளம்,கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கம்பெனி தனது உற்பத்தியை கூடிய விரைவில் தொடங்குவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. சே. ரகுபதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொன்ன வள்ளலாரைப் போல இன்றைக்கு அருட்பெரும் ஜோதி தனிப் பெரும் கருணையாக ஒளி வெள்ளத்தோடு தனது ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மனிதாபிமானம் மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) உரிய முயற்சிகளை மேற்கொண்டு கடந்த மார்ச மாதம் வரைக்கான சம்பளத்தில் ஆயிரம் ரூபாய் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுக்கான போனஸ் தொகையைப் பெற்றுத் தருவதற்காக மாண்புமிகுடாக்டர் புரட்சி தலைவி அவர்களின் அரசினுடைய தொழிலாளர் நலத்துறை உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்:

13—

நாமக்கல்லில் தவிட்டு எண்ணெய்த் தொழிற்சாலை.

* 9554—திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நாமக்கல்லில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்</u>, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல்லில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியும்.

<u>திரு. எஸ். அன்பழகன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாமக்கல் தொகுதியிலுள்ள பல குடும்பங்கள் அந்தத் தொழிற்சாலையை நம்பிக் கொண்டு இருந்தன. அப்படிப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டதற்கான காரணங்களையும், அதில் வேலை செய்த தொழிலாளர்களுடைய தற்போதைய நிலை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17.1-1977 ஆம் ஆண்டு முதல் இந்த ஆலையை 'தாய்' நிறுவனம் எடுத்து நடத்தியது. 1978 ஆம் ஆண்டு முதல் உற்பத்தியை ஆரம்பித்தது. ஒரு நாளைக்கு 15 மெட்ரிக் டன் அரிசி தவிடும், 20 மெட்ரிக் டன் எண்ணெய் பிண்ணாக்கு அறைக்கும் திறன் உடைய இந்த ஆலை குறைந்த திறன் அறவைக் கொண்டதால் நிகர லாபம் ஈட்டித் தர இயலவில்லை. எனவே, இந்த ஆலை நட்டத்தில் இயங்கத் தொடங்கியது. 14–9–1984-ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இந்த ஆலையின் செயல்பாட்டை ஆராய்ந்து இந்த ஆலையை மூடுவதற்கு அரசுக்கு சிபாரிசு செய்தது. 14–10–1988-ல் இந்த ஆலையை மூடுவது எனஅரசு முடிவு செய்தது. இந்த ஆலையில் பணியாற்றிக் கொண்டு இருந்த 30 நிரந்தரப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்படவில்லை. மாறாக வேறு இடங்களில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 14, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

14—

## சத்திரப்பட்டியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள்.

<u>*9905—திரு. தி. சாத்தையா</u>: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) இராஜபாளையம் ஒன்றியம் சத்திரப்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்'

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u> (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டுவசதித் திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் சத்திரப்பட்டி நகரப் பகுதியில் குடியிருப்புத் திட்டம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதிக்கான தேவை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றது. இது குறித்து நிர்ணயம் செய்யப்பட்ட பின் நிலம் கிடைப்பதற்கேற்ப திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

<u>திரு. தி. சாத்தையா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளில் கூட அடைய முடியாத முன்னேற்றத்தைக் கடந்த ஒரு ஆண்டில் மட்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எனது தொகுதியான இராஜபாளையம் தொகுதி அடைந்து உள்ளது என்பதை பெரு மகிழ்ச்சியோடு எனது தொகுதி மக்கள் சார்பாக கூறிக்கொள்கிறேன். இது போல் எனது தொகுதியில் உள்ள சத்திரப்பட்டி கிராமம் தொழிலில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள ஒரு ஏரியாவாகும். சத்திரப்பட்டி பேண்டெஜ் கிளாத் உற்பத்தியில் உலக நாடுகள் அளவில் பெயர் பெற்ற ஊராகும். இந்த ஏரியாவில் அதிகமான மில் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் போதிய வீட்டு வசதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த வீடு கட்டும் பணியில் குறைந்தது ஒரு ஆயிரம் வீடுகளாவது கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுகின்ற எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதியிலிருந்து எவ்வளவு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதைப் பொறுத்தும், அரசால் நியமிக்கப்பட்டிருக்கின்ற குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நிலம் எவ்வளவு வாங்கப்பட்டு இருக்கிறது, எவ்வளவு நிலம் கிடைக்கப்பெற்றிருக்கிறது என்பதைப் பொறுத்தும் அரசு சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் செயற்படுத்த உத்தேசித்திருக்கிறது. அந்த அடிப்படையில் கோரிக்கை அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்குமானால் ஆயிரம் வீடுகள் அல்ல எவ்வளவு வீடுகளுக்கு கோரிக்கைகள் வருகிறதோ அவ்வளவு கோரிக்கைகளுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 செப்டம்பர் 21]

முற்பகல் 10-55

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிமாண்ட் நோட்டிபிகேஷன் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எப்போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றேன். கோரிக்கை மனுவினுடைய எண்ணிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. வீட்டுவசதி வாரியத்திற்கு கோரிக்கை மனு கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மனுக்கள் கிடைக்கப்பெற்ற பிறகு, நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இதற்குண்டான செயல்பாடுகள் குறித்து அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 15, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

15—

கந்தர்வ கோட்டையில் கல்யாண மண்டபம்

*9814— திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கந்தர்வகோட்டையில் சமூகநலத்துறையின் சார்பில் கல்யாண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்பமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி (சமூக நலத்துறை அமைச்சர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது எல்லா இடங்களிலும் திருமணக் கூடங்கள் கட்டப்படுகின்றன. கந்தர்வகோட்டைப் பகுதியைப் பொறுத்த வரையில், இந்தக் கோரிக்கையை மிக நீண்ட நாட்களாக அந்த மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியென்றால், எந்த அடிப்படையில் திருமணக்கூடங்கள் தமிழகத்தில் இப்போது ஆரம்பித்து கட்டப்படுகின்றன என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மூலம் எந்த திருமணக் கூடங்களும், எங்கேயும் கட்டப்படுவதில்லை. திருமண உதவித் திட்டங்களை மட்டும் இத்துறை செயல்படுத்துகிறது.



1992 செப்டம்பர் 21]

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கந்தர்வகோட்டைப் பகுதியைப் பொறுத்த வரையில் 80 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்டது. தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் இடையிலே இருக்கிற அந்தப் பகுதி மக்கள், திருமணம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; அல்லது புதுக்கோட்டைக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. திருமண மண்டபங்கள் கட்டுகிற திட்டம் சமூக நலத் துறையின் மூலம் இல்லையென்று சொன்னாலும், சமூக நலக் கூடமாவது கந்தர்வகோட்டையில் அமைத்து, திருமணங்களை நடத்துவதற்கு அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க முடியுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இத்தகைய திருமண மண்டபங்கள் ஆங்காங்கே கட்டப்படுகின்றன. எனவே, அப்பகுதி மக்கள் இத்தகைய ஒரு திருமண மண்டபம் தேவை என்று சொல்லி, விண்ணப்பித்து, அதற்காக ஓரளவு நிதியை வசூலித்தால், மீதியை இந்து சமய அறநிலையத் துறை செலவழித்து திருமண மண்டபத்தைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 16, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்,

16—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு.

*9116—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[illegible]

[1992 செப்டம்பர் 21

தமிழ்நாட்டில் 11 இடங்களில் கால்நடை புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிதிநிலை காரணமாக தற்பொழுது இராமநாதபுரத்தில் மேற்படி பிரிவு ஒன்று துவங்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராம மக்களுக்கு வருவாயைத் தேடித்தருவது பசு, எருமை, ஆடு போன்ற கால்நடைகளாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகளும் 4 இலட்சத்திற்கும் அதிகமான கோழிகளும் இருக்கின்றன. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு இல்லாததால், பல கால்நடைகள் நோய்வாய்ப்பட்ட நிலையில் அடிமாடுகளாக அண்டை மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகின்றன. ஆறறிவு கொண்ட மக்களுக்கு மட்டுமின்றி ஐந்தறிவு கொண்ட கால்நடைகளையும் பாதுகாப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் நிதிநிலைக்கு ஏற்ப எதிர்வரும் ஆண்டுகளில் இது பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் 11 இடங்களில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு இருப்பதாகக் கூறினார்கள். பிற்பட்ட மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பிற்பட்ட மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் புலனாய்வுப் பிரிவை அடுத்த ஆண்டிலாவது ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் ஆண்டுகளில் இது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 17, திரு. வ. தமிழரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.



1992 செப்டம்பர் 21]

17—

## தவளப்பட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

*9562—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் மலைவாழ் மக்களுக்கு வசதியாக தவளப்பட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் தவளப்பட்டியில் கறவை மாடுகள் மற்றும் பால் உற்பத்தி மிகக் குறைவாக உள்ளதால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 11—00

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவளப்பட்டியில் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு கடுமையான வறட்சியால் தீவனங்கள் இல்லாததால் கறவை மாடுகளை அப்பகுதி மலைவாழ் மக்கள் விற்று விட்டனர். ஆனால், தற்போது நமது இதய தெய்வம் தெய்வத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் நல்ல மழையினால் நிறைய பச்சைத் தீவனங்கள் கிடைப்பதால் பால் சொசைட்டி ஏற்படுத்துகின்ற அளவிற்குக் கறவை மாடுகளை அப்பகுதி மக்கள் வைத்திருக்கின்றனர். எனவே, இந்த ஆண்டு ஏற்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் அதிக அளவில் மாடுகள் வாங்கி, போதிய அளவுக்குப் பால் உற்பத்தி செய்யத் துவங்கிய பின்னர், தனியான ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

18—

காஞ்சிபுரம் பகுதியிலுள்ள வேளாளர் இனத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*10134—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சிபுரம் பகுதியில் உள்ள தொண்டை மண்டல ஆதி சைவ வேளார் இனத்தைச் சார்ந்தவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவரவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில், எல்லாச் சமுதாய மக்களையும் அழைத்துப் பேசினார்கள். அந்த வகையில், அவருடைய வாரிசு, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் தொண்டை மண்டல ஆதிசைவ வேளாளர் இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவது பிற்பட்டோர் நலக் குழு, இந்தச் சமூகத்ினரைப் பின் அடைந்தவர்கள் அல்லர் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதே போன்று இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு, குழு நிர்ணயித்த குறைந்த பட்ச மதிப்பெண்களைவிட மிகக் குறைவாகப் பெற்றிருக்கிறது. மேலும், சமூக நிலை, கல்வி நிலை, பொருளாதார நிலைகளைப் பற்றிய சதவீதங்களைப் பார்க்கும்பொழுதும், மாநில சராசரியைவிட சைவ வேளாளர் வகுப்பினர் முன்னேறிய நிலையில் உள்ளனர் என்பதை இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு சுட்டிக் காட்டுகின்றது. எனவே இக்கோரிக்கை ஏற்புடையது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு பி. வி. இராஜேந்திரன்



திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகள் தொடர்ந்து எழுந்து கொண்டு இருப்பதற்குக் காரணமே, நமது அரசு மூன்றாவது பேக்வேர்ட் கிளாசஸ் கமிஷன் ஒன்றைப் போடாததுதான். இரண்டாவது, இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு டாக்டர் அம்பாசங்கர் தலைமையிலே நியமிக்கப்பட்டதை. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்றபொழுதே அந்தக் கேபினெட் அதை நிராகரித்து, அதைக் கிடப்பிலே போடுவோம் என்று நிறுத்திக்கூட வைத்து இருக்கின்றனர். எனவே, நாம் அதை ஒரு அளவாக எடுத்துக் கொள்ள முடியாது. மாண்புமிகு முதல்வரவர்கள் இதைப் பரிசீலித்து, மூன்றாவது பிற்பட்டோர் நலக் குழுவை ஏற்கனவே அவர்கள் ''நான் பரிசீலித்து முடிவு எடுக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள், உடனடியாக அப்படி ஒரு கமிஷனை அவர்கள் அமைக்க வேண்டும். அதிலே, பொருளாதாரத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒன்றை சொன்னார்கள். பொருளாதாரம் ஒரு அளவுக்கோலாக இருக்கமுடியாது, என்று நான் நினைக்கின்றேன். இந்திய அரமைப்புச் சட்டப்படிகூட கல்வி மற்றும் சோஷியல் அன்ட் எஜுகேஷனல் என்றுதான் இருக்கிறது. மற்றும் சமூக நீதி என்றுதான் இருக்கிறது. அதையும் பின்பற்றி மூன்றாவது நலக் குழு அமைக்கப்படுமா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு 1985 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மொத்தத்தில் 50 சதவீத இட ஒதுக்கீடு ஆணைக்கு எதிராகவும், 1989 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 சதவீதம் இட ஒதுக்கீட்டுக்கு எதிராகவும் உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள ரிட் மனு மீது தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் இது குறித்து மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படும். மேலும் பிற்பட்ட, மிகப் பிற்பட்டோர், சீர் மரபினர்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இது குறித்து 3--வது குழு அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்துள்ளார்கள். எனவே, 3-வது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டதும் இது குறித்து ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19 திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

19—

நாகப்பட்டினத்தில் மீன்பிடித்துறைமுகம்.

*10202—திரு. ஆர். கோடிமாரி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித்துறைமுகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட மீன்பிடித்துறைமுகம் பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளபடியால் அங்கு மீன்பிடி விசைப்படகுகளுக்குத் தங்குதள வசதி உள்ளிட்ட பிறபணிகளை மேற்கொள்ள திட்டம் தயாரிக்கட்டு மைய அரசிடம் நிதி உதவி கேட்கப்பட்டிருக்கிறது. நிதி உதவி கிடைத்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனனுடைய தொகுதியான நாகப்பட்டினம் துறைமுகத்தில், சுமார் 800 விசைப் படகுகளும், 1,500 கட்டு மரங்களும் உள்ளன. தற்போது மீன்பிடித் துறைமுகம் இல்லாத காரணத்தால், மீனவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கூறிய பதிலுரையில் அது மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினீர்கள். மீனவர்களின் இதய தெய்வமாகவும், எனது தெய்வமாகவும் விளங்கக்கூடிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியார் ஆட்சியில், உடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, மீன்பிடித் துறைமுகம் இல்லையென்று ஒரு தவறான தகவலைக் குறிப்பிட்டுள்ளார்கள். 1969 ஆம் ஆண்டு, நாகப்பட்டினத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் கூடிய திட்டங்களின் கீழ், ரூ. 5.78 லட்சம் செலவில் 10 விசைப்படகுகள் நிறுத்துவதற்கான தங்குதள வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டது. ஆனால் அங்குள்ள மீனவர்கள் படகுகளை நாகப்பட்டினம் வணிகத் துறைமுகப் பகுதியில் நிறுத்துவதால், சரக்குப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாக துறைமுகத் தலைவர் தெரிவித்தார். அதன் அடிப்படையில், அந்த இடையூறை நீக்கும் வண்ணம், தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர், மீனவர்களின் மீது அக்கறை கொண்டு, ரூ. 1 கோடியே 2 லட்சம் செலவில் மதிப்பீடுகள் தயார் செய்து, மத்திய அரசின் நிதியுதவி கோரி அனுப்பியுள்ளார். நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறியதுபோல் மீன்பிடித் துறைமுகம் இருப்பது போன்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆரம்பத்தில் சிறிய துறைமுகமாக இருந்தாலும், அது மண்மூடிக் கிடக்கின்றது. ஆகவே அரசு அந்த மண்மூடிக் கிடக்கின்ற துறைமுகத்தை, தூர்வாரி சிறந்த முறையில் அமைத்துத் தருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 20, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

20—

பாலிதீன் பைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள்.

*9519— திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாலிதீன் பைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவைகள் லாபத்தில் இயங்குகின்றனவா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): தமிழ்நாட்டில் 16 பாலிதீன் பைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒரு சங்கம் நீங்கலாக, 15 சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன. 1991—92 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு, அதிகப்படியான லாபங்களை அந்த 15 சங்கங்கள் ஈட்டியுள்ளன. ரூ. 26.53 லட்சம் லாபத்தை அந்தச்சங்கங்கள் ஈட்டியுள்ளன.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்குகின்ற அந்த ஒரு சங்கத்தையும் லாபத்திலே இயங்க வைப்பதற்கு அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிவருகிற அந்த பொன்னி மகளிர் பாலிதீன் கூட்டுறவுச் சங்கத்தில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு, லாபத்தில் இயங்குவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் அரசு சார்பு நிறுவனங்கள் அரசுத் தரப்புக் கம்பெனிகள், தமிழ்நாடு கதர் வாரியம் ஆகியவை பொருட்களைப் பாதுகாக்க தினசரி உபயோகத்திற்கு பாலிதீன் பைகளை உபயோகிக்கிறார்கள். அந்த நிறுவனங்கள், இந்த கூட்டுறவுச் சங்கங்களில்தான் வாங்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை அரசு வைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 1— (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### தகட்டூர் பத்திரப்பதிவு அலுவலகத்திற்குக் கட்டிடம்.

வினா எண். 5442— திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேதாரணியம் தொகுதி தகட்டூரில் இயங்கிவரும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: நாகப்பட்டினம் பதிவு மாவட்டத்திலுள்ள தகட்டூர்சார் பதிவகத்துக்கு கட்டிடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் இருப்பின் அதனை கையகப்படுத்த வட்டாட்சியருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டப் பதிவாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



2—

### பத்திரப்பதிவுத் துறை அலுவலகங்களுக்கு வசதிகள்.

வினா எண் 6347— திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதிவுத்துறையின்கீழ் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்களில் மேஜை, நாற்காலி போன்ற பொருட்கள் பழுதடைந்தும் பல ஆண்டுகளாக அவைகளுக்குப் பதிலாக புதியவை வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) பதிவுத்துறையின்கீழ் இயங்கும் அனைத்து மாவட்டப் பதிவாளர்களிடம் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள பழுதடைந்த மேஜை, நாற்காலிகள் பற்றிய விவரம் கோரப்பட்டுள்ளது. இதுபற்றி ஒருங்கிணைந்த அறிக்கை பெற்று மேஜை மற்றும் நாற்காலிகள் புதியதாக வழங்க இனிவரும் பகுதி 2 திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

### அவிநாசியில் கலைக் கல்லூரி.

வினா எண். 1113—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசியில் கலைக் கல்லூரி நிறுவும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

4—

பொள்ளாச்சியில் அரசு மகளிர் கல்லூரி.

வினா எண் 3901—திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி பகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்ச :

இல்லை.

5—

எம். ஜி. ஆர். பெயரில் தேசிய கால்பந்து போட்டி.

வினா எண். 5332—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். பெயரில் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகம் மூலம் தேசிய அளவிலான கால்பந்து போட்டி நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

6 — நூலகங்களில் வாங்கப்படும் பத்திரிகைகள்.

வினா எண். 6002—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூலகங்களுக்காக வாங்கவேண்டிய நாளேடுகள் மற்றும் வார, கிழமை ஏடுகள் எவை என அரசு பட்டியல் நிர்ணயம் செய்துள்ளதா ?



(ஆ) ஆம் எனில், 1989–90 ஆம் ஆண்டுகளில் அந்தப் பட்டியல் மாற்றி அமைக்கப்பட்டதா ?

(இ) அரசியல் நோக்கத்துடன் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டதா என ஆய்ந்தறிந்து இவ்வரசு அந்தப் பட்டியலை திருத்தி அமைக்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1989 ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

(இ) அரசியல் நோக்கத்துடன் பட்டியல் மாற்றம் செய்யப்படவில்லை. எனவே, பட்டியலை மீண்டும் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

7—

மஞ்சக்குழி நூலகம் சீர்செய்தல்.

வினா எண் 6846—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மஞ்சக்குழியில் உள்ள நூலகத்தை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் மஞ்சக்குழியில் உள்ள நூலகக் கட்டிடம் ரூ.2.25 லட்சம் செலவில் கட்டப்பட்டு 31-8-1990-ல் திறக்கப்பட்டது. இந்நூலகத்திற்கு கழிப்பிட வசதி செய்து தருவது குடிநீர் குழாய் நிறுவுவது போன்ற சில்லறைப் பணிகள் ரூ. 12,000 செலவில் விரைவில் சீர் செய்து முடிக்கப்படும்.

[1992 செப்டம்பர் 21

8—

பி. முட்லூரில் நூல் நிலையம்.

வினா எண், 7635—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பி. முட்லூருக்குப் புதிதாக நூல் நிலையம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ.அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பி. முட்லூரில் இலவசமாகப் பெறப்பட்ட 10 சென்ட் காலிமனையில் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் நூலகக் கட்டிடம் கட்ட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு கட்டிடப்பணி துவக்கப்படவுள்ளது.

9—

பூவாலை கிராமத்திற்கு நூல் நிலையம்.

வினா எண் 7667—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பூவாலை கிராம ஆதிதிராவிட மக்களுக்கு பொது நூல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ.அரங்கநாயகம், கல்வி அமைச்சர்,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 செப்டம்பர் 21]

10—

பரமக்குடி பெண்கள் மருத்துவமனைக்கு ஆழ்குழாய்க் கிணறு.

வினா எண் 468—டாக்டர் எஸ். சுந்தரரரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக்கு ஆழ்குழாய் போட்டு தண்ணீர் எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி: பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக்கு, ஆழ்குழாய் போட்டு தண்ணீர் எடுக்க மண்வள பரிசோதனை செய்யப்பட்டதில் உப்பு தண்ணீர்தான் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே மருத்துவமனை வளாகத்திற்குள் ஆழ்துளை கிணறு மூலம் சுவையான தண்ணீர் பெற வாய்ப்பில்லாததால் ஆழ்குழாய் நிறுவ இயலாது.

11—

பெண்ணாகரத்தில் அரசு மருத்துவமனை.

வினா எண். 1055—டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை :

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) பெண்ணாகரத்தில் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 32 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமையிட மருத்துவமனையாக 1991—92-ல் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 செப்டம்பர் 21

12—

மாவட்ட மருத்துவமனைகளில் அக்குபஞ்சர் சிகிச்சை.

வினா எண் 1335—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சீன சிகிச்சை முறையான அக்குபஞ்சர் சிகிச்சை முறை மாவட்ட மருத்துவமனைகளில் புதிதாக துவக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இந்த சிகிச்சை முறையை புதிதாக துவக்கப்படுவதற்கு அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

13—

சேலம் மாவட்ட மருத்துவமனையை ஆத்தூருக்கு மாற்றுதல்.

வினா எண் 1341—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி உள்ளதால் மாவட்ட மருத்துவமனையை சேலத்தை அடுத்த பெரிய நகரமான ஆத்தூருக்கு மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 செப்டம்பர் 21]

14—

ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக்குதல்.

வினா எண் 1611—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி சத்திரக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்ச-

(அ) அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை,

(ஆ) வினாவுக்கு இடமில்லை-

15—

வினா எண் 1615 டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ;

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

16—

அரசு மருத்துவர்களுக்கு குடியிருப்பு.

வினா எண் 1656—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு மருத்துவர்களுக்கு வாடகையில்லாக் குடியிருப்புகளைக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

அரசு மருத்துவர்களுக்கு வாடகையில்லாக் குடியிருப்புகளைக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

பரமக்குடி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு.

வினா எண் 1699— டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ;

(அ) பரமக்குடி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின்பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

18—

கடலாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர்.

வினா எண் 4396— திரு வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்ககண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டவும் குடியிருப்பு கட்டவும், 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்திடவும் ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டும் இன்னும் பணி தொடங்கப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் பணி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19—

பொன்மலை நகராட்சியில் அரசு மருத்துவமனை.

வினா எண் 5307— திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொன்மலை நகராட்சியில் அரசு மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

20—

நெடுஞ்சாலை ஓரங்களில் மோட்டல்கள் ஏற்படுத்துதல்.

வினா எண் 2622— திரு சோ. இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் ''மோட்டல்கள்'' அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை எங்கெங்கு அமைக்கப்பட உள்ளன

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இந்த ஆண்டு பாடலூர் பரமக்குடி, உளுந்தூர்பேட்டை, கொட்டாம்பட்டி ஆகிய நான்கு இடங்களில் அமைக்கப்பட உள்ளது.

21—.

## தில்லைநாயகம் குழு பரிந்துரைகள் மீது நடவடிக்கை.

வினா எண் 7762—திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தில்லைநாயகம் குழுவின் பரிந்துரைகளின்படி எந்தெந்தப் போக்குவரத்துக் கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் அந்தப் போக்குவரத்துக் கழகங்களின் நிலை உயர்த்தப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

தில்லைநாயகம் உயர் மட்டக் குழுவால் அளிக்கப்பட்ட 335 பரிந்துரைகளில் 168 பரிந்துரைகள்மீது இறுதி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. அனைத்துப் பரிந்துரைகள்மீதும் ஆணைகள் வெளியிட்ட பின்னரே போக்குவரத்துக் கழகங்களின் நிலை உயர்ந்துள்ளனவா என்ற நிலை தெரியவரும்.

22—

## நத்தம் நகரத்திலிருந்து நேரடி பேருந்துவிடுதல்.

வினா எண் 8461—திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நத்தம் நகரம் வர்த்தக மையமாகத் திகழ்வதால் மாவட்டத்தில் உள்ள மற்ற முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் நத்தத்திலிருந்து நேரடி வழித் தடங்களில் பேருந்துகள் இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள நத்தம் வர்த்தக மையம் ஏற்கனவே போதுமான பேருந்து வசதிகளைப் பெற்றுள்ளது.

23—

## புவனகிரி தொழிலாளர்களுக்கு பாவுநூல் ஒழுங்குபடுத்த கூடாரங்கள்.

வினா எண் 1379—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி நெசவாளர்களுக்கு மழைக்காலத்திலும் பாவுநூல் ஒழுங்குபடுத்த கூடாரங்கள் அமைத்துக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி நெசவாளர்களுக்கு கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கும்படி கோரிக்கை கொடுத்தால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும். மழைக் காலத்திலும் பாவுநூல் ஒழுங்குபடுத்த கூடாரங்கள் அமைத்துக் கொடுத்தாலும், காற்றில் உள்ள ஈரத்தன்மை காரணமாக பாவுநூல் காய்வதற்கு நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளும். எனவே கூடாரங்கள் அமைப்பதால் எதிர்பார்க்கும் பயன் கிடைக்குமா என்பது சந்தேகமே.

24—

## வெண்ணாறு பாலம் சீர் செய்தல்.

வினா எண் 774—திரு வே. தம்புசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், நாலுரோடு—திருநெல்லிக்காவல் சாலையில் உள்ள வெண்ணாறு பாலம் பழுதடைந்து அபாய நிலையில் உள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப் படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்லிக்காவல் – கொளப்பாடு சாலை (மாவட்ட பெருஞ்சாலை) கி. மீ. 18/6-ல் வெண்ணாற்றின் குறுக்கே, இரண்டு கண்களையுடைய இரும்பு கர்டர்களுடன் கூடிய 3.5 மீட்டர் சாலை அகலம் கொண்ட குறுகிய ரெகுலேட்டர் பாலம் அமைந்துள்ளது. இப்பாலம் குறுகிய வளைவான பகுதியில் அமைந்துள்ளதால் தற்கால போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. எனவே, இவ்விடத்தில் 15.00 மீட்டர் நீர்வழிப் பாதையுடன் கூடிய உயர்மட்டப் பாலம் கட்டப்பட வேண்டும். அதற்கு தோராயமாக ரூ. 30.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நிலைமை நிறைவளிப்பதாக இல்லாததால் இப்பணியை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

25—

## சாலைச் சீரமைப்பு.

வினா எண் 3174—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை வழியாக பூக்கொல்லையிலிருந்து சேதுசாலையை இணைக்கும் தார் சாலையை உடன் மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

இச்சாலை கி. மீ. 3/0 – 5/0 பகுதி மிகவும் பழுதடைந்துள்ளது. இப்பகுதியைப் புதுப்பிக்க ரூ. 1.80 இலட்சம் தேவைப்படும். இப்பணி இதுவரை அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. ஆயினும், பராமரிப்பு நிதி நிலையைப் பொறுத்து, 1992–93 ஆம் ஆண்டு இப்பகுதியை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



26—

## கன்னடியன் கால்வாய்ச் சீரமைப்பு.

வினா எண் 3336—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கன்னடியன் கால்வாயின் 183 மடைகளும் பழுதுபார்க்கப்படாமல் உள்ளதால் நீர்க்கசிவு பெருமளவில் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உலக வங்கித்திட்டத்துடன் கன்னடியன் கால்வாய்ச் சீரமைப்புப் பணி தொடங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தேசிய நீர் மேலாண்மைத்திட்டம், தாமிரபரணி செயலாக்கத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் இப்பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் உள்ள 183 மடைகள், சீரமைப்புப் பணிகளினால் 159 மடைகளாகக் குறைக்கப்பட்டுள்ளன.

27—

## பழநியிலுள்ள பொதுப் பணித்துறை (முன் ஆய்வு) அலுவலகத்தை மதுரைக்கு மாற்றும் திட்டம்.

வினா எண், 3507—திரு எஸ். எம். துரை : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்--அண்ணா மாவட்டம் பழநி பி. டபிள்யூ. டி. முன் ஆய்வு (இன்வெஸ்டிகேசன்) அலுவலகத்தை மதுரைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1989–90-ஆம் நிதி ஆண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கன்னிவாடி ''நாய். ஓடை'' அணைத் திட்டம் நிறைவேற்றுவதில் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க அவ் வலுவலகத்தை மாற்றாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

28—

செங்கரையூர் பாலம்.

வினா. எண் 3745—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொள்ளிடத்தில் அலமேல்புரம் பூண்டி அருகாமையில் கொள்ளிடத்தில் தென் கரையிலிருந்து வடகரையிலுள்ள செங்கரையூர் இணைக்கும் பாலம் கட்ட அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

29—

மன்னம்பந்தல் மற்றும் வடகரை சாலை சந்திப்பில் வேகத்தடை.

வினா எண், 5526—திரு எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம்பந்தல் மற்றும் வடகரை சாலை சந்திப்பில் வேகத்தடை கட்டித்தர அரசு முன்வருமா'?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம்பந்தல் மற்றும் வடகரை சாலை சந்திப்பு தரங்கம்பாடி—மயிலாடுதுறை சாலையில் கி.மீ. 23/8-ல் உள்ளது. இச்சாலையில் கி.மீ. 23/8ல் மன்னம் பந்தல்—வடகரை சாலை என்ற மற்றொரு இதர மாவட்ட சாலை பிரிந்து செல்கிறது. இந்த இரண்டு சாலைகளின் சந்திப்பில் வேகத்தடை பொருத்தும் திட்டம் தற்சமயம் இல்லை. விதிமுறையின்படி நாகை காயிதே-மில்லத் மாவட்ட போக்குவரத்துக் குழுவின் ஒப்புதலுடன் வேகத்தடை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

30—

மயிலாடுதுறை இரயில்வே மேம்பாலத்திற்கு கைப்பிடிச்சுவர்.

வினா எண். 5529—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மயிலாடுதுறை நகரில் உள்ள புகைவண்டி மேம்பாலத்தின் மேற்குப் பகுதியில் பாலத்தின் இரு ஓரங்களிலும் கைப்பிடிச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மயிலாடுதுறை புகைவண்டி நிலையத்தின் அருகில் கும்பகோணம் சீர்காழி சாலையில் கி.மீ. 33/2-ல் உள்ள ரயில்வே மேம்பாலம் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளது. கைப்பிடிச்சுவர் கட்ட வேண்டிய பகுதி சீர்காழி பக்கம் உள்ள அணுகு சாலையில் உள்ளது. தற்பொழுது இந்த அணுகுசாலையின் இருபுறமும் பாதுகாப்பு கல் நடப்படுள்ளதால் இந்த இடத்தில் கைப்பிடிச்சுவர் கட்டும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

[1992 செப்டம்பர் 21

31—

விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு கூடுதல் மின்திறன் கேட்டவர்கள் விவரம்.

வினா எண் 6118—திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாய பம்ப் செட்டுகளுக்குக் கூடுதல் மின்திறன் கேட்டு மனு கொடுத்துள்ளவர்கள் இதுவரையில் எத்தனை விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன?

(ஆ) சிறப்பு உணவு உற்பத்தியை கருத்தில் கொண்டு கால தாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) 31—1—1992 முடிய, 18,549 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

(ஆ) விவசாய பம்பு செட்டுகளுக்கு கூடுதல் மின்திறன் இணைப்பதில் தடை ஏதும் இல்லை. எனினும் நிதி நிலைக்கேற்றவாறும் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளுக்கு ( Technical Feasibility ) உட்பட்டும் அதாவது மின் மாற்றியின் கொள்திறன், மின்னூட்டிகளின் திறன் ஆகியவை ஆராயப்பட்டு கூடுதல் மின் திறனுக்காக விவசாய விண்ணப்பங்கள் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

32—

புதிய பாலம் அமைத்தல்.

வினா எண். 8999—திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குளச்சல் தொகுதி ஆலன்விளை கிராமத்தை இணைக்க இரட்டை கரை சானலின் குறுக்கே புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?



1991 செப்டம்பர் 21]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

33—

குப்பத்தேவன் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம்.

வினா எண். 368—திரு. ஆர். சிங்காரம்—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் நடுநிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளிக்கு ஏற்கனவே இரண்டு ஆர்.சி.சி. கட்டிடங்கள் நல்ல நிலையில் உள்ளன. மேலும் ரூ. 30,000 மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளது. எனவே, குப்பத்தேவன் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

34—

மஞ்சூர் ஆரம்பப் பள்ளிக்கு கட்டிடம்.

வினா எண். 1429—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி, மஞ்சூரில் ஆரம்பப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1991-92 ஆம் ஆண்டு சிறப்புத் தன்னிறைவு திட்டத்தில் ரூ. 138 லட்சத்தில் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

35—

ஊராட்சி அலுவலகங்களுக்கு கட்டிடம்.

வினா எண். 1852—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பாதரங்கோட்டை தெற்கு ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு 1985-86 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 41,798 செலவில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

36—

வினா எண்: 1853—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா .

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1990-91 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் திருவோணம் ஊராட்சி ஒன்றியம் பாதரங்கோட்டை வடக்கு ஊராட்சிமன்றக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.



37—

குளம் மராமத்து செய்து படி கட்டுதல்.

வினா எண். 2208—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி தெற்கு ஆதிதிராவிடர்களின் தண்ணீர்பந்தல் குளத்தை மராமத்து செய்து படிக்கட்டு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் மற்றும் தொடர்புடைய ஊராட்சியில் போதிய நிதி வசதியின்மையால் இடையாத்திதெற்கு ஆதிதிராவிடர் தண்ணீர்பந்தல் குளத்தை மராமத்து செய்து படிக்கட்டு கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

38

ஆவணங்குடியில் குடிதண்ணீர் ஆழ்குழாய்க் கிணறு

வினா எண். 3651—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, ஆவணங்குடி பகுதியில் குடிதண்ணீர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இப்பகுதி குடிநீர் வசதி பெற்றுள்ள பகுதி. ஏற்கனவே மின் இறைப்பான் செயல்பட்டு வருகிறது. எனவே புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

கீழச்சாவடி வானொலி மன்றம் பழுதுபார்த்தல்.

வினா எண் 4124—செல்வி கோ. மல்லிகா:—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழச்சாவடி கிராமத்தில் வானொலி மன்றம் பழுது பார்த்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கீழச்சாவடி கிராமத்திலுள்ள வானொலி மன்றக் கட்டிடத்தில் பழுதுகள் அகற்றி மின் இணைப்புகள் சரி செய்ய ரூ. 5,000 மதிப்பீட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

40—

காலரா மஸ்தூர் பணியாளர்களை நிரந்தரமாக்குதல்.

வினா எண் 4465—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிகப் பணியில் உள்ள காலரா மஸ்தூர் பணியாளர்களை நிரந்தரமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

காலரா மஸ்தூர் பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகஅடிப்படையில் அவசர அவசியத்தை முன்னிட்டு, நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அவ்வப்போது தேவைப்படும் சமயம் மட்டும் நியமனம் செய்யப்படும் பணியிடமாகும். இந்தப் பணி



யினை தொடர்ந்து வைத்துக்கொள்ளவோ தற்காலிகப் பணி நியமனத்தைக் கொண்டு பணி நிரந்தரம் செய்யவோ விதிகளின்படி தற்போது இயலாது.

41—

சேமூர் ஊராட்சி மன்றத்திற்கு கட்டிடம்.

வினா எண். 6302—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மொடக்குறிச்சி தொகுதி, பூந்துறை சேமூரில் ஒரு ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, பூந்துறை சேமூரில் ஒரு ஊராட்சி மன்றக் கட்டிடம் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991–92 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

42—

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தை கண்காணித்தல்.

வினா எண். 8237—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாடு திட்டத்தின்கீழ் விதை நெல், உரம், களைக்கொல்லி, பயிர்பாதுகாப்பு கருவிகள் மானிய விலையில் சீராக விநியோகம் செய்வதைக் காண்காணிக்க அரசு கையாளும் முறையின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் நெல், உரம், களைக்கொல்லி, பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் ஆகியவைகள் விவசாயிகளுக்கு குறுக்கீடு

ஏதுமின்றி முழுமையாகப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு முறையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேளாண் இடுபொருட்கள் வாரியாக கணக்குகள் வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மானிய விலையில் சீராக விநியோகம் செய்வதைக் கண்காணிக்க அரசு குழுக்களை அமைத்துள்ளது.

1. மாநில அளவில் ஒருங்கிணைப்புக் குழு அரசு தலைமைச் செயலர் தலைமையில் காலாண்டிற்கு ஒருமுறை கூடி இத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இதர நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்யும். இக்குழுவில் வேளாண் துறை, பொதுப்பணித்துறை நிதித்துறை, திட்டம் மற்றும் மேம்பாட்டு துறை செயலாளர்கள் வேளாண்மை இயக்குநர், கூட்டுறவுத்துறை பதிவாளர், தமிழ்நாடு அக்ரோ இன்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷன் மற்றும் தமிழ்நாடு அக்ரோ இன்ஜினியரிங் மற்றும் சர்வீஸ் கோ-ஆபரேடிவ் பெட்ரேஷன் நிறுவன மேலாண்மை இயக்குநர்கள், மின்வாரிய அலுவலர்கள் மற்றும் வங்கி அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

2. மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் பருவ காலங்களில் மாதம் இருமுறை கூடி திட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் சீரமைப்ப குறித்து ஆய்வு செய்கிறது.

43—

## சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்.

வினா எண். 8563—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தண்ணீர் இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்தும் சிறப்பு நிதித் திட்டத்தில் அவினாசி தொகுதிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டுவரும் ''சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்'' 1988–89 ஆம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தது. பிறகு 1991–92–லிருந்து 14 மாவட்டங்களில் செயல்படுத்த மத்திய அரசு அங்கீகாரம் கொடுத்தது.



2. மத்திய அரசு இத்திட்டத்தினை 50,000 ஹெக்டேர் நிலத்திற்கு மேல் அரிசி சாகுபடியாகும் மாவட்டங்களிலேயே செயல்படுத்த முடிவெடுத்திருந்தது. இக்குறியீட்டைப் பெறாத தினால் அவினாசி தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டம் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் செயல்படுத் மாவட்டங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

3. மேலும் இத்திட்டத்தின்கீழ் ஆழமற்ற கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டமும் மத்திய அரசின் நிதி உதவியோடு 1989–90 லிருந்து 1991–92 வரை செயல்பட்டு வந்தது. ஆனால் இந்த நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கு மத்திய அரசு மானியம் ஏதும் வழங்கவில்லை. எனவே, இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வாய்ப்பில்லை.

44—

## வாழை ஆராய்ச்சி நிலையம்.

வினா எண். 8627—திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) லால்குடி வட்டம், குமுளூர் அரசு வேளாண்மைத் கல்லூரியில் உள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) லால்குடி வட்டம் குமுளூர் அரசு வேளாண்மைக் கல்லூரி வளாகத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் இல்லை. வேளாண்மைக் கல்லூரி மட்டுமே இயங்கி வருகின்றது.

(ஆ) வினா எழவில்லை.

45—

## ஆழ்கடல் மீன்பிடி திட்டம்.

வினா எண். 5290— திரு. இ. சாத்தையா : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆழ் கடலில் மீன் பிடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு வேண்டிய பாதுகாப்பு உபகரணங்கள் போதுமானதாக அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) 1973 ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ''மீன்பிடி நாவாய்கள் இறக்குமதி திட்டத்தினை'' தொடர்ந்து வணிக ரீதியாக தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இரு மீன்பிடி நாவாய்களை மெக்சிகோனாவிலிருந்து இறக்குமதி செய்து 1978 முதல் ஆழ்கடல் மீன்பிடிப்பதில் ஈடுபட்டு திட்டம் லாபகரமாக செயல்பட்டு வருகின்றது. மேலும் இருபழைய மீன்பிடி நாவாய்கள் மேற்கு வங்கத்தில் இருந்து வாங்கப்பட்டு அவ்விரு நாவாய்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

(ஆ) வேண்டிய பாதுகாப்பு உபகரணங்களுடன் மீன்பிடி நாவாய்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

46—

சாமியார்பேட்டை மீன் மார்க்கெட்.

வினா எண். 7505—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சாமியார்பேட்டை மீனவர் கிராமத்தில் மீன் மார்க்கெட் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) சிதம்பரம் வட்டம், சாமியார்பேட்டையில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மூலமாக ஒரு மீன் மார்க்கெட் கட்டப்பட்டு முடியும் தருவாயில் இருப்பதால் மீன்துறை மூலம் மீன் மார்க்கெட் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாதிருக்கிறது.

(ஆ) இல்லை. இவ்வினாவிற்கு இடமில்லை.





47—

இறால் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை.

வினா எண். 7841—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மீன் இறால் பதப்படுத்தும் தொழிற்சாலை மல்லிப்பட்டினத்தில் அல்லது சேதுபாவாசத்திரத்தில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

ஏதுமில்லை.

48—

முழுக்குத்துறை சாலையைப் பராமரித்தல்.

வினா எண். 9214—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் மீனவர் வாழும் முழுக்குத்துறைச் சாலையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

சிட்கோ மூலம் கடன் பெற நிபந்தனைகள்.

வினா எண். 7983—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிட்கோ மூலம் கடன் உதவி பெறுவதற்கான சிறு தொழில் துவங்குவோருக்குள்ள நிபந்தனைகள் விவரம் என்ன?

(ஆ) இவற்றில் எந்த நிபந்தனைகள் தளர்த்த அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன?

(இ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத்தொழில்துறை அமைச்சர் :

(அ) சிறு தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில்கள் தொடங்குவதற்கு எந்த வகையான கடன் வசதியையும் சிட்கோ அளிப்பதில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) வினா எழ வாய்ப்பில்லை.

50—

வாலாஜா நகராட்சியில் தொழிற்பேட்டை.

வினா எண். 8908—திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டின் முதல் நகராட்சியான வாலாஜா நகராட்சியில் தொழிற்பேட்டை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத்தொழில்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



51—

நீதிமன்றக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்.

வினா எண். 5626— டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பழுதடைந்த நிலையில் உள்ள ஆரணி நீதிமன்றக் கட்டிடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

ஆரணியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு அவசர மராமத்துப் பணிகளை மேற்கொள்ள ரூ. 78,000 அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆரணியில் உள்ள குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம் சீரமைத்துப் பழுது பார்க்க ரூ. 68,000-க்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

52—

நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண். 8724—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கிழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நத்தத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் மற்றும் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நத்தத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு மட்டும் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

[1992 செப்டம்பர் 21

53—

சார்நிலை மன்றம் (கோர்ட்) ஏற்படுத்துதல்.

வினா எண். 9387—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரியில் சார்நிலை மன்றம் (கோர்ட்) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

இல்லை.

54—

விற்பனை வரி விதித்தல்.

வினா எண். 3512—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இருந்து அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு விற்கப்படும் பேருந்துகளுக்கு 15 சதவிகித விற்பனை வரி விதிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பள்ளிகளுக்கு வழங்கும் பேருந்துகளுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) போக்குவரத்துக் கழகங்களிலிருந்து விற்கப்படும் பேருந்துகளுக்கு 4—9—1991 வரை 15 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் இவ்வரியினை 5—9—1991 லிருந்து 7 சதவீதமாக இந்த அரசு குறைத்துள்ளது.

(ஆ) பள்ளிகளுக்கு விற்கப்படும் பேருந்துகளுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1992 செப்டம்பர் 21]

55—

பட்டா புத்தகங்கள் வழங்கல்.

வினா எண். 8419—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) திருவட்டார் தொகுதி கிராம நிர்வாக அலுவலகங் களில் பட்டா புத்தகங்கள் பொதுமக்களுக்கு கடந்த சில ஆண்டு களாக வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா புத்தகங்கள் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் ;

(அ) மற்றும் (ஆ) : 1972 ஆம் ஆண்டில், செயலுக்கு கொண்டுவரப்பட்ட நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட நில உரிமைப் பதிவேடு புத்தகம், சட்ட அடிப்படையில் இல்லை. இதற்கு சட்டத் தகுதி நிலை கொடுப் பதற்காக 1983 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் ஒவ்வொரு வட்டத் திலும் உள்ள எல்லா நில உரிமைதாரருக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்க வழிவகை செய்கிறது. இது ஒரு சட்டபூர்வ ஆதார ஆவணமாகும். இந்த பட்டா பாஸ் புத்தகத்தில் நிலங் களில் பயிர் செய்யும் நபர்களின் பெயர்கள், கூட்டுப் பட்டா தாரர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமை யுள்ள பங்கு, பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரி, செலுத்திய வரி விவரங்கள், நிலங்களின் மீதுள்ள வில்லங்கம் ஆகிய விவரங்களும் குறிப்பிடப்படுகின்றன. பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் பரீட்சார்த்த முறையில் செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், திருச்சி ராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் 1—10—87 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இத்திட் டத்தை தமிழகம் முழுவதும் உடனடியாக செயலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அரசு விரும்பி அதன் அடிப்படையில் நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு தமிழகம் முழு வதும் பட்டா பாஸ் புத்தகம் வழங்கும்போது, திருவட்டார் தொகுதிக்கும் வழங்கப்படும்.

[1992 செப்டம்பர் 21

56—

கிராமங்களை இணைத்து தனி வட்டமாக்குதல்.

வினா எண். 8707—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், வி. கே. புதூர் வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்களையும், தென்காசி தாலுக்காவின் சில கிராமங்களையும் இணைத்து ஆலங்குளத்தை தனி வட்டமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

இச்செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

57—

மாவட்டங்கள் பிரித்தல்.

வினா எண். 9233—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாவட்டங்கள் பிரிக்கப்படுவது எந்த அடிப்படையில் (Norms) செய்யப்படுகிறது?

(ஆ) தமிழகத்தில் பிரிக்கப்பட உள்ள மாவட்டங்களின் விவரம் என்ன ?

(இ) இரண்டு மாவட்டங்களை மூன்றாகப் பிரிக்கப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை –

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) பெரிய மாவட்டங்கள் நிர்வாக வசதிகளுக்காகவும் அரசின் நலத்திட்டங்களை காலதாமதமின்றி செயற்படுத்தவும் பிரித்தமைக்கப்படுகின்றன.



1992 செப்டம்பர் 21]

(ஆ) திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள். இதில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

58—

வயது வந்தோர் கல்வி.

வினா எண். 3421 —திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வயது வந்தோர் கல்வியை மேலும் ஊக்குவிக்க ஏதேனும் சிறப்பு திட்டங்கள் அரசிடம் உள்ளதா '

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன'

விடை –

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வயது வந்தோர் கல்வியை மேலும் ஊக்குவிக்க 100 சதவிகிதம் எழுத்தறிவுத் சிறப்பு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 15–35 வயது பிரிவு எழுத்தறிவற்ற மக்கட்கு எழுத்தறிவு ஊட்டுவது இத்திட்ட பணியாகும். முதல் கட்டமாக இத்திட்டம் 7 மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 1992–93–இல் மேலும் 10 மாவட்டங்களிலும் மூன்றாம் இறுதி கட்டமாக 1993–94 இல் எஞ்சியுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக 1991–92இல் 18.34 இலட்சம் எழுத்தறிவற்றோர் இத்திட்டத்தின் வாயிலாக எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றப்படுவார்கள். இத்திட்டத்தை செயல்படுத்த இதுவரை மைய அரசு ரூ. 443.18 இலட்சமும் மாநில அரசு ரூ. 255.8 இலட்சமும், மாவட்ட ஆட்சியாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. 1995 முடிவில் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் எழுத்தறிவில்லாத 78 இலட்சம் பேர் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றப்படுவர்.

59 –

கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 8539—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 செப்டம்பர் 21

(அ) திருவையாறு தொகுதியில் உள்ள மாணவர்கள் தொலை தூரத்திற்கு சென்று கல்லூரி படிப்பைப் பயில வேண்டியிருப்பதால் திருவையாறு தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை —

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

60—

மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம்.

வினா எண். 779 — திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர் அரசினர் மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

61—

கழிவு நீரினால் குடிநீர் கெடுவதை தடுக்க நடவடிக்கை.

வினா எண். 5036—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரூர் நகரில் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேற கழிவு நீரினால் குடிநீர் கெடுவது பற்றி அரசுக்குத் தெரியுமா?



1992 செப்டம்பர் 21]

(ஆ) ஆம் எனில், அதைத்தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கரூரிலுள்ள சாயத்தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேறும் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்ய, பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

62—

வன விலங்குகளால் தாக்கப்படுபவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கல்

வினா எண். 5082—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அடர்ந்த வனப்பகுதியில் கல்பாசம், கடுக்காய் எடுக்கச் செல்வோர் மற்றும் மாடுகள் மேய்க்க செல்கின்ற ஆதிவாசிகள் பலர் யானை, கரடி போன்ற வன விலங்குகளால் தடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்படிப்பட்டவர்களுக்கு 1990–91-ல் எத்தனை பேருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1990–91 ஆம் ஆண்டில் வெவ்வேறு இடங்களில் யானை தாக்கி இறந்ததாகக் கூறப்படும் ஒன்பது சம்பவங்களில் சம்பந்தப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள ஆறு குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்குவது பரிசீலனையில் உள்ளது. இவைகள் தவிர, கரடி மற்றும் புலி, சிறுத்தை தாக்கி பாதிக்கப்பட்டதாக கூறப்படும் எட்டு சம்பவங்களில் ஒரு குடும்பத்திற்கு மட்டும் நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள ஏழு குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்குவது பரிசீலனையில் உள்ளது.

63—

சவுக்கு மரங்கள்.

வினா எண், 5426—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அண்டை மாநில வியாபார சந்தைகளில் பணப்பயிராக விளங்கும் வேதாரண்யம் தொகுதியில் விளையும் சவுக்கு மரங்கள் தீவிர சாகுபடிக்கு அரசு என்ன முயற்சி மேற்கொண்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இயன்ற வரையில் ஆற்றுப்படுகைகளிலும், மணற்பாங்கான நிலங்களிலும் சவுக்கு விளையக்கூடிய புறம்போக்கு நிலங்களிலும் மற்றும் தகுதியுள்ள அரசு பொது நிலங்களிலும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து துறை ஒப்புதலுடன் கிராம மக்கள் ஒத்துழைப்புடனும் சமூகக் காடுகள் பிரிவினால் சவுக்கு பயிரிடப்படுகிறது.

மேலும் இப்பயிருக்கு ஓரிரு ஆண்டுகளுக்காவது கோடை காலங்களில் மட்டுமாவது நீர் ஊற்றி பாதுகாக்க வேண்டியுள்ளதால், அந்த அளவு நீர் வசதியுள்ள இடங்கள் அதிகம் இல்லாததாலும், ஆடு மாடுகளினால் சேதம் ஏற்படாத இடங்களாக இருக்க வேண்டியுள்ளதாலும், சவுக்கு வளரக்கூடிய ஒதுக்குக் காடுகள் அதிகம் இல்லாததினாலும் மிக அதிக அளவில் சவுக்கு மரங்கள் வளர்க்க இயலவில்லை.

இருப்பினும் இயன்றவரை சவுக்கு மரங்கள் வளர்க்கத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. விவசாயத்திற்கு தகுதியில்லாத மணற்பாங்கான தனியார் நிலங்களிலும், வரப்பு கரைகளிலும் சவுக்கு வளர்க்க ஊக்கம் அளிக்கப்படுகிறது.

64—

உல்லாச பயணிகளிடம் வசூலிக்கும் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை.

வினா எண். 5772—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வால்பாறைத்தொகுதி குரங்கு நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் உல்லாச பயணிகளுக்கு ரூ. 5 வீதம் கட்டணம் வசூலிப்பது மிகவும் அதிகம் என்று பொது மக்கள் கருதுவதால் இந்த கட்டணத்தை குறைக்க அரசு முன்வருமா ?



(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): வால்பாறை தொகுதி குரங்கு நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் உல்லாச பயணிகளிடமிருந்து தற்போது வசூலிப்பப்படும் கட்டணம் ரூ. 5 மட்டுமே. இக்கட்டணம் மிகவும் சாதாரணமாக இருப்பதால் இதனை மேலும் குறைக்க வேண்டியது அவசியமில்லை.

65—

சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டு கைதானோர் எண்ணிக்கை.

வினா எண். 6339—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த 3 ஆண்டுகளில் சந்தனமரக்கடத்தலில் ஈடுபட்டு கைதானோர் எண்ணிக்கை, பறிமுதல் செய்யப்பட்டவற்றின் மதிப்பு ஆண்டு வாரியாக விவரம் என்ன?

(ஆ) கைது செய்யப்பட்டவர்களில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு தண்டிக்கப்பட்டோர் எண்ணிக்கை விவரம் என்ன?

(இ) இன்னும் நிலுவையில் உள்ள வழக்குகள் விவரம் என்ன ?

(ஈ) இந்த கடத்தல்களில் பயன்படுத்தப்பட்டதாக பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துறை அமைச்சர் :

| | ஆண்டு. | | |
|---|---|---|---|
| | 1989 | 1990 | 1991 |
| (அ) (i) சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டு கைதானோர் எண்ணிக்கை. | 2,166 | 3,329 | 2,953 |
| (ii) பறிமுதல் செய்யப்பட்ட சந்தன மரத்தின் மதிப்பு | ரூ. 280.09 இலட்சம். | ரூ. 1,391.28 இலட்சம் | ரூ. 722.78 இலட்சம் |
| (ஆ) நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தண்டிக்கப் பட்டோர் எண்ணிக்கை. | 33 | 2 | 7 |
| (இ) இன்னும் நிலுவையில் உள்ள வழக்குகள். | 715 | 994 | 881 |
| (ஈ) கடத்தலில் பயன்படுத்தப் பட்டதாக பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள். | 176 | 443 | 419 |

66—

## வனங்களில் மரம் வெட்டப்படுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை.

வினா எண். 6531—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள வனங்களில் ( Reserve Forests ) சட்ட விரோத வேட்டைகள் அத்து மீறல்கள் விலங்குகளை அழித்தல், மரங்கள் வெட்டப்படுதல் போன்ற செயல்களை முற்றிலுமாக கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

வன நிர்வாகம் மற்றும் பாதுகாப்பிற்கும் வன உயிரின் வேட்டைகளை தடுத்தல் மற்றும் காத்தல் ஆகியவற்றிற்காக



கீழ்க்காணும் சட்டங்கள் தமிழகத்தில் தற்பொழுது நடைமுறையில் உள்ளன.

(அ) தமிழ்நாடு வனச் சட்டம், 1882.

(ஆ) தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949.

(இ) தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் 1955.

(ஈ) வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972.

(உ) வன (பாதுகாப்பு) சட்டம், 1980.

மாவட்டங்களில் உயர் சக்தி கம்பியில்லாத் தொலைபேசி சாதனம் நிறுவப்பட்டுள்ளதன் மூலம் சந்தன மரக்கடத்தல் மற்றும் தந்தத்திற்காக யானைகள் வேட்டையாடப்படுவதும் குறைந்து விட்டது. நடமாடும் சோதனைச் சாவடிகள் அண்டை மாநில எல்லைப்குதிகளில் அமைத்துள்ளதன் மூலம் சந்தன மர திருட்டுகள் ஒடுக்கப்பட்டுள்ளது, திருட்டு வெட்டுகளை தடுக்கவும் காடுகளில் கேடு விளைவிப்பதை தடுப்பதற்கும் சில இடங்களில் விறகு டிப்போக்கள் திறக்கப்பட்டுள்ளன. வனக் குற்றங்கள் செய்வதையே தொழிலாக கொண்டவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1983–84 ஆம் வருடத்திலிருந்து வனக் குற்றப் புலனாய்வுத் துறை ஒரு தலைமை போலீஸ் அதிகாரியின்கீழ் இரண்டு காவல் துறை கண்காணிப்பு அதிகாரிகள் மற்றும் 104 இதர அலுவலர்களுடன் இயங்கி வருகிறது. முக்கியமான வனக் குற்றங்கள் மற்றும் இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் வனக்குற்ற புலனாய்வுத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

67—

## பறவைகள் சரணாலயம் அமைத்தல்.

வினா எண். 7738—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு பறவைகள் சரணாலயங்கள் உள்ளன ?

(ஆ) புதிதாக எங்கேனும் பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன். போக்குவரத் துத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட ஏழு இடங்களில் பறவைகள் சரணாலயம் உள்ளன.

(1) வேடந்தாங்கல்.

(2) கரிக்கிளி.

(3) கஞ்சிராங்குளம்.

(4) சித்திரங்குடி.

(5) வேட்டங்குடிப்பட்டி.

(6) உதயமார்த்தாண்டபுரம்.

(7) புலிக்கட் ஏரி.

(ஆ) மற்றும் (இ) : சமீபத்தில் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி வட்டத்தில் 128.10 எக்டேர் பரப்புள்ள இடத்தை வடுவூர் பறவைகள் சரணாலயமாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது இது தவிர, தஞ்சாவூர் மாவட்டத்திலும், நாகபட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலும் இயற்கை வனச் சூழல் நிறைந்த பகுதிகளையும் வன உயிரினம் மற்றும் பறவைகள் மிகுந்து காணப்படும் 9 இடங்களை தேர்வு செய்து அவைகளை கோடிக் கரை பறவைகள் சரணாலயமாக அறிக்கை செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

68—

## TANTEA நிறுவனம்.

வினா எண். 7823—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வால்பாறையிலுள்ள TANTEA நிறுவனத்திற்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது?

(ஆ) அதில் எத்தனை எக்கர் தேயிலை நாற்று நடப்பட் டுள்ளது?



விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவர துத்துறை அமைச்சர் :

(அ) வால்பாறை பகுதியில் தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கழகத்திற்கு (TANTEA) தேயிலை நடுவதற்காக ஒதுக்கப்பட்ட பரப்பளவு. 6,126.10 ஏக்கர்

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்தால் தேயிலை நடப்பட்ட பரப்பளவு. 240.90 ஏக்கர் ஆகும்

69—

## தேக்குமரம் வளர்க்கும் திட்டம்.

வினா எண். 7903—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

"Wasteland Development programme மூலமாக வனத்துறை உதவியுடன் அரசாங்கத்திலுள்ள தரிசு நிலங்களில் தேக்குமரம் வளர்க்க ஊக்குவிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவி யுடன் வனத்துறை மூலமாக அரசுக்கு சொந்தமான தரிசு நிலங் களில் தேக்குமரம் வளர்க்க ஊக்குவிக்கும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

70—

## இரப்பர் தரம் பிரிப்பு ஆராய்ச்சிக் கூடம் நிறுவதல்.

வினா எண். 8002—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் இரப் பரின் தரத்தை பகுப்பாய்வு செய்து, தரத்தை பேணுவதற்கு ஏதுவாக ஒரு இரப்பர் தரப் பிரிப்பு ஆராய்ச்சிக் கூடம் நிறுவ அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறு இரப்பர் உற்பத்தியாளர்களின் நலன் கருதி இரப்பர் பாலை பகுப்பாய்வு செய்து தருவதற்காக நாகர்கோவில் புதிய அலுவலக வளாகத்தில் ஒரு சிறு தரம் பிரிப்பு ஆய்வகம் அமைக்க அரசு இரப்பர் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) ஆய்வகம் அமைக்க இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஆனால் அரசு இரப்பர் கழகத்தின் நிதி நிலை மோசமாக உள்ளதால் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. கழக நிதிநிலை சீரமைந்ததும் ஆய்வுக்கூடம் நிர்மாணிக்கப்படும்.

17—

காடுகளை அதிகப்படுத்துதல்.

வினா எண். 8195—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1989—90-ம் ஆண்டில் காடுகளின் மூலம் கிடைத்த வருவாய் என்ன?

(ஆ) மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தின் காடுகளை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1989–90 ஆம் ஆண்டில் காடுகளின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 300.42 லட்சங்களாகும்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வனத்துறைக்கு சொந்தமான 21,000 எக்டேர் வன நிலம் குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அளிக்கப்பட்ட அனைத்து நிலங்களிலும் முந்திரி





தோட்டங்கள் மற்றும் மரக்கூழ் மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள கூழ்மரத் தோட்டங்களை அதிக மகசூல் பெறத்தக்க வகையில் தீவிர வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் தோட்டங்கள் உருவாக்குதலை வனத்தோட்டக் கழகம் செய்து வருகிறது. மேலும் சமூக நலக் காடுகளின் திட்டங்களின் கீழ் 1991-92-ல் இம்மாவட்டத்தில் ரூ. 68.77 லட்சம் செலவில் 590 எக்டேர் பரப்பில் சமூக நலக் காடுகள் எழுப்பப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டிலும் 640 ஹெக்டேர் பரப்பில் சமூகக் காடுகள் சுமார் ரூ. 70 லட்சங்கள் செலவில் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

72—

மூடிக்கிடக்கும் மில் பஞ்சாலைகளை திறக்க நடவடிக்கை.

வினா எண். 1382—திரு. பா. கோவிந்தராஜ் ; மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோவை மாவட்டத்தில் மூடிக் கிடக்கும் வசந்தா, மது ஸ்பின்னிங், ஆர்.கே. மில், ஜெயலட்சுமி மில் பஞ்சாலைகளை திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சா ;

(அ) சட்டப்படியான சிக்கல்களினால் கோயம்புத்தூரில் உள்ள வசந்தா மில், ஜெயலட்சுமி மில், மது ஸ்பின்னிங் ஆகிய நூற்பாலைகளைத் திறக்க அரசின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட இயலவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

73—

நெசவாளர்களுக்கு விசைத் தறிகள் வழங்குதல்.

வினா எண். 6864—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்ா ;

(அ) களம்பூர் பகுதியில் பட்டு நெசவுத் தொழிலாளர்களுக்கு விசைத் தறிகள் வழங்க அரசு முன்வருமா?

[1992 செப்டம்பர் 21

(ஆ) போளூர் மாம்பட்டில் நெசவாளர்களுக்கு விசைத் தறிகள் வழங்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில் எப்போது?

(ஈ) மாம்பட்டில் சாயத் தொழிற்சாலை (நூல்) நிறுவ அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) களம்பூர் பகுதியில் அதிக அளவில் பட்டு நெசவாளர்களே உள்ளமையால் தற்சமயம் விசைத்தறிகள் வழங்குவது சாத்தியமில்லை.

(ஆ) ஆம். போளூர், மாம்பட்டில் உள்ள நெசவாளர்கள் ஜனதா ரகம் மற்றும் மதிப்பு மலிவாக உள்ள ரகங்கள் உற்பத்தி செய்வதன் வாயிலாக தினம் ரூ. 15-க்கும் குறைவாக வருவாய் ஈட்டுபவர்களாய் இருப்பின் அங்கு நெசவாளர்களுக்கு விசைத் தறிகளை வழங்கும் திட்டம் செயலாக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

(இ) இப்புதிய திட்டம் செயல்படுத்தும் முகத்தான் 1991-92 ஆம் ஆண்டு முதற்கட்டமாக 500 கைத்தறிகளை 1,000 விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுக்கும் சமயத்தில் போளூர் மாம்பட்டு பகுதி வாழ் கைத்தறி நெசவாளர்களுக்கு விசைத் தறிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வேலூரில் நவீன சாயச் சாலை ஒன்று இயங்கி வருகிறது. மேலும் ஒரு சாயத் தொழிற்சாலை மாம்பட்டில் நிறுவ தற்சமயம் வாய்ப் பில்லை.

74—

தார் சாலை அமைத்தல்.

வினா எண். 23—திருமதி அ. தி. சரஸ்வதி; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில் தாளவாடியிலிருந்து பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம் வரை உள்ள சாலையில் மெட்டல் போட்டு தார் சாலை அமைத் துத்தர அரசு ஆவண செய்யுமா?



1992 செப்டம்பர் 21]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்.

அத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

75-

பாசன வசதி திட்டம்.

வினா எண். 1189—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்கு நோக்கி வீணாகக் கடலில் செல்லும் அச்சன்கோயில் பகுதி தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்பி திருநெல்வேலி மாவட்டத்திற்கு பாசன வசதி செய்து கொடுக்கும் வகையில் திட்டம் தயாரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு, எஸ். கண்ணன், பொதுப்பணித் துறை அமைச்சர் :—

ஆம்.

76—

பாலம் கட்டுதல்.

வினா எண். 474.—திருமதி கனிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

சின்னதாராபுரம், கொடுமுடி சாலையில் நொய்யல் ஆற்றில் ஒரு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

77—

தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 5144—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில், வெள்ளித் திருப்பூரில் இருந்து குறும்பாளையம் வழியாக குருவாரெட்டியூர் வரை செல்லும் சாலையினை தார் சாலையாக மாற்ற அரசு 1991-9-2ல் நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

வெள்ளித்திருப்பூர்—குருவாரெட்டியூர் சாலை கி.மீ. 0/0 8/4 நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்ட சாலையாகும். இதன் மொத்த நீளம் 8.40 கி.மீ. ஆகும். இச்சாலை ஒரு தார் சாலையாகும். மொத்தமுள்ள 8.40 கி.மீ. நீளத்தில் 6.20 கி.மீ. நீளம் ஏற்கனவே தார் சாலை புதுப்பிக்கப்பட்டு விட்டது. 1.00 கி.மீ. நீளத்திற்கு தார் சாலை புதுப்பிக்கும் பணி நடப்பாண்டில் செய்து முடிக்கப் படவுள்ளது. மீதமுள்ள 1.20 கி.மீ. (2-8-4-0) பகுதி இரண்டு 1992-93-ம் ஆண்டில் நிதி நிலைமைப் பொறுத்து தார் புதுப்பிக்கும் பணி செய்து முடிக்கப்படும்.

78—

அணை கட்டும் திட்டம்.

வினா எண். 8087—திரு. சி. இராமசுவாமி:— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சங்கராபுரம் தொகுதி, லக்கிநாயக்கன்பட்டி அருகில் குஸ்குந்சா நதி அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எந்த ஆண்டு தொடங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர் ;

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





79—

குடிநீர் வசதி.

வினா எண். 4251—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பகுதியில் போதுமான அளவு மழை இல்லாத காரணத்தால் பல ஊர்களில் குடிநீர் வசதி இல்லாமல் மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வைகை ஆற்றிலிருந்து எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

(அ) ஆம். திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியிலுள்ள 238 கிராமங்களில் 173 கிராமங்கள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளன.

(ஆ) அனைத்து கிராமங்களுக்கும் முன்னுரிமைப்படி குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டு செயலாக்கப்படும். விரிவான ஆய்வு மேற்கொள்ளும்போது நீராதாரமாக வைகை ஆற்றை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும்.

80—

குடிநீர் வசதி.

வினா எண். 4587—திரு. மெ. ஆண்டி அம்பலம்; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்திற்குட்பட்ட காசம்பட்டியில் அப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்னை தீர அங்கு மேல்நிலை குடிநீர் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

[1992 செப்டம்பர் 21

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்திற்குட்பட்ட காசம் பட்டி குடிநீர்த் தேவையின் பகுதி நிறைவு பெற்ற கிராமம் ஆகும். இக்கிராமத்தில் திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் அமைக்கப்பட்ட 5000 லிட்டர் கொள்ளளவு உள்ள மின் விசை திட்டம், ஆறு பொதுக் குழாயுடன் செயலில் உள்ளது. மேலும் ஆறு கையிறைப் பான்கள் திட்டம் இக்கிராமத்தில் செயலில் உள்ளன. எனவே இங்கு மேல்நிலை குடிநீர் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

81—

அத்திக்காட்டு நீர்த்தேக்கத் திட்டம்.

வினா எண். 8526—டாக்டர் மு. சீனியம்மாள் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டம், தண்ணீர் பிரச்சினை நிரந்தர மாக தீர்க்க வகை செய்யும் அத்திக்காட்டு நீர்த்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

கோயம்புத்தூர் மாவட்டம் தண்ணீர் பிரச்சினை நிரந்தர மாக தீர்க்க வகை செய்யும் அத்திக்காட்டு குடிநீர்த் திட்டம் மார்ச் 1992 வரை மொத்தப் பணிகளில் 42 சதவிகிதப் பணிகள் முடிக் கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டப் பணிகள் அனைத்தும் 30—6—1993க்குள் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டுவரும் வகையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

82—

வெளி மாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்வதை தடை செய்தல்.

வினா எண். 2905—திரு. கு. லாரன்ஸ் ; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளி மாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்வதை தடை செய்யவும், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 செப்டம்பர் 21]

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டு றவுத்துறை அமைச்சர் :

ஆம்.

83—

ஒரு நபர் உணவு பங்கீட்டு அட்டைகளை ரத்து செய்தல்.

வினா எண். 3919—திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒரு நபர் உணவு பங்கீட்டு அட்டைகளை அரசு ரத்துசெய்து விட்டதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத்துறை அமைச்சர் :

ஒரு நபர் உணவு பங்கீட்டு அட்டைகளை அரசு ரத்து செய்ய வில்லை.

84—

தலைமைச் செயலகத்திலுள்ள அமுதம் சிறப்பங்காடி.

வினா எண். 8245—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தலைமைச் செயலகத்தில் உள்ள அமுதம் சிறப்பங்காடி பெரும்பாலான நேரங்களில் மூடிக்கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்த அங்காடியின் வியாபாரத்தை அதிகரிக்க அதிகநேரம் திறந்து வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத்துறை அமைச்சர் :

(அ) தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள அனைத்து அங்காடிகளும் காலை 9.30 முதல் 10.00 மணி வரை மதியம் 1.00 முதல் 3.00 மணிவரை மற்றும் மாலை 5.30 முதல் 6.00 மணி வரை மட்டும் பணிபுரிய வேண்டும். என்ற அரசு ஆணை களுக்கு இணங்க தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள அமுதம் சிறப்பு அங்காடியும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த நேர மாற்றத்தால் விற்பனைத் தொகையில் எவ்வித மாற்றமும் இல்லை. ஊழியர்கள் அந்த நேரத்திற்கு தகுந்தாற்போல் அவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொள்கின்றனர்.

85—

கடையின் வெளியே விலைப்பட்டியல் வைக்க நடவடிக்கை.

வினா எண் 8745—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அத்தியாவசியமான பொருட்களை விற்பனை செய்யும் கடைக்காரர்கள் விலைப் பட்டியலை கட்டாயம் வெளியே வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு அத்தியாவசியப் பொருட்கள் (இருப்பு மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் மற்றும் கணக்குகள் பராமரித் தல்) ஆணை 1977-ன்படி வணிகர்கள் கடைகளில் விலைப் பட்டியல் மற்றும் இருப்பு அடங்கிய தகவல் பலகையை தவறாது வைத்தல் வேண்டும். இது உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயலாக்கப்படுகிறது.

86—

தொழில் பிரிவுகளுக்கு விதிவிலக்கு அளித்தல்.

வினா எண் 7726—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;



(அ) தொழிற்சாலை சட்டத்திலிருந்து மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென கூறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. செ. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (10) பிரிவிற்கு திருத்தம் கொண்டுவரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

87—

வேலை முன்னுரிமை அடிப்படையில் நியமனம்.

வினா எண் 8677—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியரின் வாரிசு ஒருவருக்கு வேலை முன்னுரிமை அடிப்படையில் நேரடி நியமனம் மூலம் அளிக்கப்படுகிறதா ?

(ஆ) அப்படி நியமிக்கப்படும்போது அரசு ஊழியராக நியமிக்க உள்ள வயது வரம்பு உயர்த்தி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பொதுவாக அரசு ஊழியராக நியமிக்க நியமனம் பெறும் நாளில் மனுதாரர் 30 வயதிற்குள் இருக்க வேண்டும் என பணி விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் கருணை அடிப்படை பணி நியமனத்தின் கீழ் அரசு ஊழியராக நியமிக்க அரசு அலுவலர் இறந்த நாளில் அவரது வாரிசுதாரர்களான மனைவி (அல்லது) கணவன் ஆகியவர்கள் 40 வயதிற்குள்ளும் மகன், திருமணமாகாத மகள், விதவை (அல்லது) விவாகரத்து பெற்ற மகள் ஆகியவர்கள் 30 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும்

[1992 செப்டம்பர் 21

என ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர் அரசு ஊழியராக நியமனம் பெற, செயல்முறை ஆணைகள் மூலம் வயது வரம்பு உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது எனலாம்.

88—

வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 8871—திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராணிப்பேட்டையில் நவ்லாக் பஞ்சாயத்தில் அரசு பண்ணை இயங்கி வருவதால் இங்கு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

89—

வினா எண். 8981—திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராணிப்பேட்டை தொகுதியில், நவ்லாக் பண்ணை மற்றும் தென்னை வித்து பண்ணை போன்ற வசதிகள் இருப்பதால் இப்பகுதியில் விவசாயக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்; வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.



1992 செப்டம்பர் 21]

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

90—

சத்துணவுக் கூடங்களிலுள்ள குழந்தைகளுக்கு மருத்துவர்கள் மூலம் பரிசோதித்தல்.

வினா எண். 2908—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சத்துணவுக் கூடங்களிலுள்ள குழந்தைகளுக்கு படிப்புதவிற்காக கல்வி கற்றுக் கொடுக்கவும் சுகாதாரம் வேண்டி வாரந்தோறும் மருத்துவர்கள் மூலம் குழந்தைகளைப் பரிசோதித்து நோய்களைத் தடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

ஆம். அரசு பரிசீலனையில் உள்ளது.

91—

ஆதிதிராவிடர்களுக்கு குழந்தைகள் காப்பகம்

வினா எண். 5352—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலும் குறைந்தது 40—70 வரையிலான 2 முதல் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 0—2 வயதுடைய குழந்தைகள் 30 பேர் மற்றும் 30 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இணைந்து 100 பேர்கள் இருந்தால் அப்பகுதியில் ஒரு குழந்தைகள் நல மையம் துவங்கப்படுகிறது. இதற்கு குறைந்த குழந்தைகள் உள்ள பகுதிகளை பக்கத்திலுள்ள அமைந்துள்ள குழந்தைகள் நல மையத்துடன் இணைக்கப்படுகின்றன

[1992 செப்டம்பர் 21

தமிழ்நாடு ஊட்டச் சத்துத்திட்டம் அமுல் நடத்தப்படும் மாவட்டங்களில் கூடுதலாக புதிதாகச்சத்துணவு மையங்கள் தேவைக்கேற்ப அமைக்கப்படுகின்றது. ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிகளிலும் மையங்கள் அமைக்க கருத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

92—

முதியோர் மற்றும் விதவைகள் உதவித்தொகை.

வினா எண் 6799—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைகள் உதவித் தொகை கோரி மனு செய்தால் எவ்வளவு காலத்திற்குள் பரிசீலித்து உதவித் தொகை வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

அரசு ஆணை எண் 1514, வருவாய்த்துறை, நாள் 18–11–1986ன்படி இம்மாதிரி உதவித் தொகை கோரி வரும் மனுக்களின் மீது அதிகபட்சம் ஒரு மாத கால அவகாசம் வழங்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. காலி இடங்கள் இல்லாத நிலை ஏற்படும்போது, காலாண்டுக்கு ஒரு முறை அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி தேவையான அளவு கூடுதல் இடங்களை வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

93—

சத்துணவுக் கூடம் கட்டுதல்

வினா எண் 7783—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் புவனகிரி பேரூராட்சியில் 7-வது வார்டு கள்ளிக்காட்டு காலனிக்கு சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1992 செப்டம்பர் 21]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புவனகிரி பேரூராட்சி 7வது வார்டு கள்ளிக்காட்டு காலனிக்கு 1992–93-ஆம் நிதியாண்டில் புதிய கட்டிடம் கட்டுவது குறித்து ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

பார்வையற்றோருக்கான பள்ளிகள்.

வினா எண் 8225—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பார்வையற்றோருக்கான அரசு பள்ளிகள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) மேலும் எங்கு அத்தகு பள்ளி அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

(அ) பார்வையற்றோருக்கான அரசு பள்ளிகள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன:—

1. பூவிருந்தவல்லி, சென்னை.
2. சேலம்
3. கடலூர்
4. தஞ்சாவூர்
5. தர்மபுரி
6. சிவகங்கை
7. திருச்சிராப்பள்ளி
8. மதுரை
9. நாகர்கோவில்
10. புதுக்கோட்டை
11. கோயம்புத்தூர்

(ஆ) தற்பொழுது கூடுதலாக பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகள் துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1992 செப்டம்பர் 21

95—

## சத்துணவுக்கூடம் அமைத்தல்

வினா எண். 8701—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்பு மிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

ஆலங்குளம் ஒன்றியம், ஆலங்குளம் நகரில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு சத்துணவுக் கூடம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஒன்றியம், ஆலங்குளம் நகரில் இரண்டு குழந்தைகள் நல மையங்களும், ஒரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியும், ஒரு அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மூன்று தனியார் பள்ளிகள் உள்ளன. புதியதாக கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

96—

## சத்துணவு மையங்களின் கட்டிடங்களைப் புதுப்பித்தல்

வினா எண். 8835—திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியகுளம் தொகுதியில் முதல்வர் எம், ஜி. ஆர். சத்துணவு மையங்கள் நடைபெறும் கட்டிடங்களைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தொண்டுள்ளம் படைத்த தொழில் அதிபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் சத்துணவு மையக் கட்டிடங்களைப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது. தவிர, 1992-93 ஆம் ஆண்டில் இதற்காக ரூபாய் 1 கோடி நிதி மாநில வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள எல்லா மையங்களின் தேவையை கருத்தில் கொண்டு இயன்ற அளவுக்கு பெரியகுளம் தொகுதியில் உள்ள சத்துணவு மையக் கட்டிடங் களைப் புதுப்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1992 செப்டம்பர் 21]

97—

## கண்பார்வை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு

வினா எண். 9944—திருமதி கே. பழனியம்மாள் : மாண்பு மிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முதுகலை பட்டம் பெற்ற கண்பார்வை இழந்தவர் கள் எத்தனை பேர் இதுவரை வேலை வாய்ப்பு அலுவலகங் களில் பதிவு செய்து உள்ளனர் ?

(ஆ) நடப்பாண்டில் எத்தனை பேருக்கு நேர்முகத் தேர்வுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது ?

(இ) எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) 107

(ஆ) 22

(இ) 10

98—

## ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நவீன தொழில் பயிற்சி

வினா எண். 5958—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு நவீன தொழில்களில் பயிற்சி அளிக்க வேண்டுமென அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) எந்தெந்த தொழில்களில் பயிற்சி அளிக்க அரசு முடிவெடுத்தது ?

விடை—

மாண்புமிகு திரு. மு. ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, வாகனப் பொறியியல் வானூர்தி பராமரிப்புப் பொறியியல் "வீடியோ கேமரா, கணிப்பொறி, தொலைக்காட்சி மற்றும் [illegible]

போன்ற நவீனத் தொழில்களில் ஏற்கனவே பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பழங்குடி மாணவர்களுக்கு மின்சாரம், மோட்டார் வாகனம், குளிர்பதனம் போன்ற நவீன தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

99—

நரிக்குறவர் மற்றும் லம்பாடி இனங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண். 8780—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) நரிக்குறவர் மற்றும் லம்பாடி இனங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு செய்த பரிந்துரை மீது அவ்வரசிடமிருந்து ஏதேனும் பதில் வந்துள்ளதா ?

(ஆ) இல்லையெனில், மத்திய அரசை வலியுறுத்த உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. மு. ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) நரிக்குறவர் மற்றும் லம்பாடி இனங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மாநில அரசு மத்திய அரசுக்கு செய்த பரிந்துரை மீது மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) மாநில அரசு எந்த ஒரு இனத்தையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைதான் செய்ய இயலும். பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது பற்றிய முடிவை மைய அரசுதான் செய்ய வேண்டும்.

100—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.

வினா எண். 8000—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தமுள்ள முந்திரித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை ?



(ஆ) இவைகளில் எத்தனை தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அனுமதி (உரிமம்) பெற்றுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) 122.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து அனுமதிச் சான்றிதழ் பெற்ற தொழிற்சாலைகள் 73. மேலும், அனுமதிச் சான்றிதழ்களுக்குரிய விண்ணப்பங்களை 49 தொழில் நிலையங்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 4. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்து, உங்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளை அதை எடுத்துக் கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நீங்கள் என் அறையில்தான் கேட்க வேண்டும் ; உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அப்படிச் சொன்னால், விதிப்படி ஒரு மணி நேரத்திற்கு முன்னர் அதைக் கொடுக்கவில்லை ; உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை ; நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை என்னுடைய அறையிலே வந்து நீங்கள் கேட்கலாம். நாளை அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஒரு முக்கியமான பிரச்சினை, ஒரு காவல் துறை அதிகாரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை அதை எடுத்துக் கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் விதிப்படி பேச வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள்.

முற்பகல் 11–10.

## 5. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். சட்டமன்ற பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

(1) திரு. ம. சின்னசாமி

(2) திரு. வ. சத்தியமூர்த்தி

(3) திரு. ஆர். சிங்காரம்

(4) திரு. வே. தம்புசாமி

(5) திரு. நா. சா. பழனிசாமி

## 6. கண்டனம்.

அவை உரிமை மீறலுக்காக ''முரசொலி'' ஆசிரியர் திரு. எஸ். செல்வம் அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் உரிமையை மீறியதற்காகக் கண்டனம்.

பேரவையின் உரிமையை மீறியதற்காக ஒருவர் கண்டிக்கப்படுகிறபோது அவையின் இறையாண்மையையும், மாண்பையும் உணர்த்திடும் வகையில் தண்டனை நிறைவேற்றப்படும் வரையில், தண்டனையின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் துளியும் சத்தமின்றி அமைதி காக்க வேண்டும்.

மார்ஷல், பத்திரிகை ஆசிரியர் திரு. செல்வம் ஆஜராகி உள்ளாரா ?

(மார்ஷல் : ஆம் ஐயா, ஆஜராகி உள்ளார்.)

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வராது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பாராளுமன்றத்திலே கரஞ்சியா அவர்கள் கண்டிக்கப்படுகிறபோது, அந்த அவைத் தலைவர் கேட்டிருக்கிறார். (குறுக்கீடு) இதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வராது. இது அவை எடுத்த முடிவு. அது இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது. (குறுக்கீடு) அவை ஒரு முடிவு செய்து அது இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறபோது, இதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்கிறீர்கள். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல என்று நான் சொல்லியிருக்கிறேன். ரெப்ரிமேண்ட் செய்கிறபோது 'பின் டிராப் சைலென்ஸ்' இருக்க வேண்டும் என்கிற மரபு கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. நீங்கள் அந்த மரபை மீற வேண்டாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் வேறொன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' என்று இதிலே கேட்டீர்கள். (குறுக்கீடு) தாமரைக்கனி உட்கார வேண்டும். இதிலே வேண்டாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளுக்குப் புறம்பாகப் போய்விடும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவை எடுத்த முடிவு. இது அவையினுடைய அதிகாரம். என்னுடைய அதிகாரம் அல்ல.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மறுபரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நேரத்தில் அல்ல. இது தண்டனை நிறைவேற்றப்படுகிற நேரம். (குறுக்கீடு) இல்லை. தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டு, பின்னர் வாரண்ட் அனுப்பப்பட்டு, அவர் ஆஜராகி, இன்றைய தினம் ஆஜராகிறேன் என்று அவர் வாக்குறுதி வழங்கி அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற வந்திருக்கிறார். இதிலே நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்பது (குறுக்கீடு) தயவுசெய்து வேண்டாம். உட்காருங்கள். உங்களுக்கு நான் இவ்வளவு எடுத்துச் சொல்லி விட்டேன். (குறுக்கீடு) வேண்டாம் ; உட்காருங்கள்.

[1992 செப்டம்பர் 21

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பெருந்தன்மையாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து தண்டனை நிறைவேற்றப்படுகிற நேரத்திலே வேண்டாம். (குறுக்கீடு) முதலிலேயே விடுவது என்பது வேறு, சம்பந்தப்பட்ட அந்த நபர் நான் அறியாமல் செய்து விட்டேன் ; உணர்ச்சிவசப்பட்டுச் செய்து விட்டேன் என்று முன்பே சொல்லியிருந்தால் அது வேறு.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்கு ஒரு வாய்ப்பு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வாய்ப்பெல்லாம் இவருக்கு வழங்கப்பட்டு, உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, உரிமைக் குழுவில் வருத்தம் தெரிவிக்கிறீர்களா என்று கேட்டு, (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். நான் நிற்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். இதிலே 'பின் டிராப் சைலென்ஸ்' இருக்க வேண்டுமென்பது மரபு. அந்த மரபை மாண்புமிகு உறுப்பினர்கள் மீற வேண்டாம். (குறுக்கீடு) தாமரைக்கனி உட்கார வேண்டும். இது பாராளுமன்ற மரபு. ரெப்ரிமெண்ட் செய்கிற நேரத்தில் 'பின் டிராப் சைலென்ஸ்' இருக்க வேண்டுமென்பது மரபு. அது எல்லா அவையிலேயும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடு). இந்த நேரத்தில் அந்த மரபை கடைப்பிடிக்கப் பாருங்கள். எல்லா வகையிலேயும் மரபை மீறலாம் என்று நீங்கள் முடிவு எடுக்க வேண்டாம். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள் நான் நிற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி உட்காருங்கள். திரு. தம்புசாமி உட்காருங்கள். இது பாராளுமன்ற மரபு. இந்த மரபை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். இது முறையல்ல. நான் தண்டனையை நிறைவேற்றுகிற நேரத்தில் அவைத் தலைவரைச் செயல்படவிடாமல் தடுப்பது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் இப்படி செய்வது கூடாது. (குறுக்கீடு). தயவுசெய்து இது வேண்டாம். (குறுக்கீடுகள்).

திரு. ச. இராமச்சந்திரன் : நீங்கள் பெருந்தன்மையோடு...

முற்பகல் 11-15.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே ஏற்றுக்கொண்டு அமர்ந்திருக்கிறார். இதிலே நீங்கள் குறுக்கே நிற்க வேண்டாம். நீங்கள் இன்றைக்கு குறுக்கே நிற்கின்ற காரணத்தாலே அவருக்கு அரசியல் லாபம் ஒன்றும் வராது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இது மரபு மீறிய நடவடிக்கை என்று கருத வேண்டிவரும் தயவுசெய்து உட்காரவும். (குறுக்கீடுகள்)



V 211,31 (N92
N92-29-1

1992 செப்டம்பர் 21]

திரு. ச. இராமச்சந்திரன்: இந்த நேரத்தில் இது நம்முடைய பண்பாட்டிற்கே எதிரானது ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, இது தான் பண்பாட்டிற்கு எதிரானது. ஒருவர் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்ற வருகிற போது குறுக்கே நிற்பதுதான் பண்பாட்டிற்கு எதிரானது என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. பழனிசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

163/83
600 008

(திரு. ச. இராமச்சந்திரன், டாக்டர் இ. கு. குமாரதாஸ் மற்றும் திரு. வே. தம்புசாமி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்). (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதுவும் இப்போது பேசுவதற்கு அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) இல்லை திரு. பழனிசாமி, அந்த சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியரே விரும்பி இப்போது வந்து இருக்கிறார் நீங்கள் ஏன் அதற்கு குறுக்கே நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை அவரே ஒத்துக் கொண்டு வந்திருக்கிறார். அதற்கு நீங்கள் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை நான் அனுமதித்தால் தான் நீங்கள் பேசமுடியும். இல்லை, நான் அனுமதிக்காமல் நீங்கள் பேசமுடியாது. நான் இப்போது அனுமதிக்கவில்லை (குறுக்கீடுகள்) திரு. திருநாவுக்கரசு, இதிலே இடையிலே எதற்கு நீங்கள்? நான் திரு. பழனிசாமியிடம் தான் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. நான் அனுமதிக்காதபோது, நான் நின்று கொண்டிருக்கின்றபோது, நீங்கள் நின்றுகொண்டிருப்பதே, அத்தனை விதிமுறைகளுக்கும் மீறிய செயல். நான் எல்லா விதிகளையும் மீறித்தான் செயல்படுவேன் என்று மற்ற உறுப்பினர்களைப் போல நீங்களும் பேசுவது என்றால் அது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் அனுமதிக்கவில்லை. நான் அனுமதிக்கவில்லை என்கின்ற போது நான் பேசித்தான் ஆகவேண்டும் என்றால் எப்படி? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை நான் அனுமதித்தால் தான் நீங்கள் பேச முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் தாராளமாகச் செய்யலாம். உங்களுக்கு குறுக்கே நின்று யாரும் மறிக்கவில்லை இப்போது. நீங்கள் வெளிநடப்புச் செய்வதற்கு யாரும் தடையாக இருக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் பேச அனுமதிக்காததினாலேதான் வெளிநடப்புச் செய்கிறீர்கள். பிறகு

அதிலே சொல்வதற்கு அனுமதி கொடுங்கள் என்று சொல்வது
முறையல்ல. (குறுக்கீடுகள்) அது முறையல்ல. (குறுக்கீடுகள்)
நீங்கள் வெளிநடப்புச் செய்தாலே அது குறிப்பிலே இருக்கும்.
(குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது முறையல்ல.

திரு. ஜி. பழனிசாமி : நாங்கள் வெளிநடப்புச் செய்
கிறோம்.

(திருவாளர்கள் ஜி. பழனிசாமி மற்றும் எஸ். திருநாவுக்கரசு
வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மார்ஷல், பத்திரிகை
ஆசிரியர் திரு. செல்வம் ஆஜராகி உள்ளாரா ?

(மார்ஷல் ; ஆம் ஐயா, ஆஜராகி உள்ளார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவரைக் கொண்டு
வரவும்.

(பத்திரிகையாசிரியர் திரு. செல்வம் வந்து கூண்டில்
நின்றார்.)

திரு. இளம்வழுதி ; இந்த ஜனநாயக விரோதச் செயலைக்
கண்டித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. செல்வம் , நீங்கள்
இவ்வவை உரிமைகளைப் பாதிக்கும் வகையிலும், இவ்வவையின்
உறுப்பினர் ஒருவரின் சட்டமன்றப் பணிக்கு களங்கம் உண்டாக்
கும் அளவுக்கும் செய்தி வெளியிட்டமைக்காக, உரிமைக் குழு
வால் விசாரிக்கப்பட்டு, கூண்டிலேற்றிக் கண்டிக்கப்பட வேண்டும்
என்ற அதன் பரிந்துரையின்படி கண்டிக்கப்படுவதற்காக இங்கே
கூண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறீர்கள். இப்பேரவை
உரிமை என்பது தன்னிகரற்றது என்பதை அறிந்திருந்தும், திட்ட
மிட்டு, அவையில் நடக்காத, பேசாத பகுதிகளை 'முரசொலி'
நாளிதழில் செய்தியாக வெளியிட்டது, அதற்கான சரியான
விளக்கங்களை உரிமைக் குழுவின் முன்னர் ஆஜரானபோது அளிக்
காதது மற்றும் பேரவைத் தலைவரால் இவ்வவை முன்னர் ஆஜ
ராகிக் கண்டனத்தை ஏற்றுக் கொள்ளுமாறு சம்மன் அனுப்பிய
போது, அதனை துச்சமென மதித்தது, ஆகியன இந்திய அரசியல்
சட்டத்தால் தனித் தன்மையானதென மதிப்பிடப் பெறும்
இவ்வவையினைப் பெரிதும் அவமதிப்புச் செய்யும் எண்ணத்துடன்
செய்யப்பட்டவை ஆகும். ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்னும்
வகையில், இந்த அவையின் நடவடிக்கைகளையும், அவை
உறுப்பினர்களது பேச்சுக்கள், கருத்துக்கள் ஆகியவற்றையும்





எவ்வித களங்கத்திற்கும் ஆட்படுத்திடாது வெளியிடவேண்டிய
கடமையும், பொறுப்பும் உங்களுக்கும் உண்டு. பத்திரிகை
ஆசிரியர்களை அத்தகைய பொறுப்புணர்வும், கடமையும்,
கண்ணியமும் மிக்கவர்களாகவே இந்த அவை கருதுகிறது.

முற்பகல் 11-20

ஆனால், மிகவும் பொறுப்பற்ற தன்மையில், இந்த அவை
நடவடிக்கை பற்றி, நடக்காத, ஒரு செயலைச் செய்தியாக
வெளியிட்டு, திட்டமிட்ட உள்நோக்கத்தோடு இந்த அவை
யினைக் களங்கப்படுத்தியதோடு, கண்ணியம் மிக்க ஓர் உறுப்
பினரின் உரிமை பாதிக்கும் அளவுக்கும் காரியமாற்றியுள்ளீர்கள்.

எனவே, அவை உரிமை மீறிய இச்செயல்களுக்காக பேரவை
எடுத்த முடிவின்படி, பேரவையின் பெயரால் கண்டனத்தைத்
தெரிவிக்கிறேன். பேரவை உங்களைக் கண்டிக்கிறது. நீங்கள்
போகலாம்.

(பத்திரிகையாசிரியர் திரு. செல்வம் கூண்டிலிருந்து இறங்கி
வெளியே சென்றார்.)

மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தை மட்டும்
மீண்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 1950-க்கும்
1985-க்கும் இடையில் பாராளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்
களவை ஆகியவற்றில் கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சினை
கள் மட்டும் 563. அவற்றிலே செய்தித் தாள்கள் பற்றிய உரிமை
மீறல் பிரச்சினைகள் மட்டும் 55. அவற்றிலே பேரவைத் தலைவ
ரால் தெளிவாக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்கள் 3 பேர்.
வருத்தம் தெரிவித்ததற்குப் பிறகு விடுவிக்கப்பட்வர்கள்
32 பேர். மன்னிப்புக் கேட்டதற்குப் பிறகு விடுவிக்கப்பட்டவர்
கள் 18 பேர். கூண்டில் ஏற்றப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள்
இரண்டு பிரச்சினைகளில் 4 பேர் என்பதை மீண்டும் நினைவு
படுத்துகிறேன்.

தி.மு.க. தலைவர் இந்த அவையிலே முதல்வராக இருந்து
ஆட்சி நடத்திய காலத்தில் செய்தித் தாளினர் இந்த அவை உரிமை
மீறல் குற்றத்தைச் செய்தார்கள் என்பதற்காக எச்சரிக்கப்
பட்டவர்கள் 2 பேர். வருத்தம் தெரிவித்ததன் காரணமாக
விடுவிக்கப்பட்டவர்கள் 6 பேர். மன்னிப்புக் கேட்டதன் காரண
மாக விடுவிக்கப்பட்டவர்கள் 2 பேர்.

அவையின் உரிமைக் குழு ஒரு பிரச்சினையைப் பொறுத்த
வரையில் கூண்டிலே ஏற்றி நிற்க [illegible] தீர்மானம்
[illegible] அவர்கள் அவர்
[illegible] என்கின்ற
வருத்தம் தெரிவித்துக் கொண்டால் [illegible]

அளவுக்கு ஒரு நேரத்தில் முடிவு செய்யப்பட்டது. சிறைத் தண்டனைப் பெற்றவர்கள் மட்டும் 3 பேர் என்ற செய்தியைத் தான் நான் இந்த அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினையில் என்னுடைய விளக்கமாக அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. வி. தண்டாயுதபாணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இதிலே வேண்டாம். இது நிறைவேறிவிட்டது. அவை முன்னவர் சொன்னதற்குப் பிறகு வேண்டாம். உங்களைக் களங்கப்படுத்தியதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. வி. தண்டாயுதபாணி ; அதற்காக அல்ல, சொல்கிற பாயிண்ட் வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்தப் பிரச்சினை முடிந்து, ' zero hour ' ம் முடிந்துவிட்டது. இதிலே வேண்டாம்.

திரு. வி. தண்டாயுதபாணி ; உச்ச நீதிமன்றத் தீர்ப்பு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்தப் பிரச்சினையிலே வேண்டாம். (குறுக்கீடு) இல்லை. இல்லை, இதிலே வேண்டாம். பேரவை முன்னவரும் இந்தப் பிரச்சினையைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையிலே வேண்டாம். முடிந்ததற்குப் பிறகு வேண்டாம்.

7. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவையின் விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு பற்றிய ஒரு அறிக்கையினை வைக்க அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இவ்வரசு பதவியேற்றதும், தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகளை, குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. புலிகளின் நடவடிக்கைகளைத் [illegible] முறையே நீக்கிட, புலிகள் இயக்கத்தைத் தடை [illegible], பாரதப் பிரதமருக்கும் கடிதம் எழுதப்பட்டது.





இதனைத் தொடர்ந்து, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், 1992 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாளன்று வெளியிட்ட, நிலை ஆணை 330 (இ) எண்ணுள்ள தனது அறிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது, ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என்று அறிவித்துள்ளது. இது 1967ஆம் ஆண்டு சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் unlawful Activities (Prevention) Act (Act 37 of 1967) 3 ஆம் பிரிவின் 1ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கப்பட்டுள்ளது. 1967 ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் (Act 37 of 1967 )ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் தொடர்பாக, வழக்கு தொடர்வதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம், தமிழ்நாடு அரசு உள்துறை செயலருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 28—5—1992 ஆம் நாளிட்ட 364(இ), 365(இ) எண்ணுள்ள அறிவிக்கைகளில் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தில் 7, 8 ஆம் பிரிவுகளின்படி, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் கையாளக்கூடிய அனைத்து அதிகாரங்களையும் தமிழ்நாடு அரசு செலுத்த வல்லமையுள்ளது என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசு கையாளத்தக்க அத்தகைய அதிகாரங்கள் அனைத்தையும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகர்களின் காவல் துறை ஆணையாளர்களும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் செலுத்த வல்லமையுடையவர்கள் என்றும் இந்திய அரசு ஆணையிட்டுள்ளது.

(முற்பகல் 11-25

சட்டப்புறம்பான எந்தவொரு நடவடிக்கையிலும் பங்கேற்கும் அல்லது அத்தகைய நடவடிக்கையைச் செய்யும் அல்லது அந்த நடவடிக்கைகளைப் போதிக்கும், அறிவுறுத்தும் அல்லது அந்த நடவடிக்கைகளுக்கு உடந்தையாயிருக்கும் அல்லது அத்தகைய நடவடிக்கையினைச் செய்யத் தூண்டும் எவரும் இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்படி 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதத் தண்டனையும் பெறுவர். சட்டப்புறம்பான அமைப்பு என்று அறிவிக்கப்பட்ட ஓர் அமைப்பின் சட்டப் புறம்பான எந்தவொரு நடவடிக்கைக்கும் எந்த வழியிலேயும் உதவி புரியும் எவரும் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதத் தண்டனை அல்லது கூட்டாக இவ்விரு தண்டனைகளும் பெறுவர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் அவர்கள் 17—5—1992 அன்று, நாகை காயிதே மில்லத் மாவட்டம் நன்னிலத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் [illegible]

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு ஆதரவு அளிப்பதாக வெளிப்படையாக அறிவித்தார்.

அண்மையில் திண்டுக்கல் நகர் அருகிலுள்ள மேட்டுப்பட்டி என்ற கிராமத்தில் நடைபெற்ற திருமண விழாவில் ஒரு குழந்தைக்கு 'பிரபாகரன் ' எனப் பெயர் சூட்டினார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நாளேடும், தமிழ் தினசரியுமான 'தினப்புரட்சியில்' 25, 26 மற்றும் 27—8—1992 ஆம் தேதிகளில், 'தன்னுரிமை' என்னும் பொருள் பற்றிக் கூறுகையில், டாக்டர் ராமதாஸ் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்ததாக அந்த தினசரியில் வந்துள்ளது.

''ஆரியர்களின் மேலாதிக்கத்தின் கீழ் தமிழர்கள் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவிப்பதாகவும், தங்கள் சொந்த மாநிலத்திலேயே அகதிகளாகவும், அடிமைகளாகவும் வாழும் சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பின் அடிப்படையில் அவர்களுக்குப் பேச்சுரிமை, எழுத்துரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் மற்றும் சமூகப் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும், கருப்புச் சட்டங்கள் அவர்கள் மீது திணிக்கப்பட்டு, அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.''

''தினப்புரட்சியில்'' அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களையடுத்து, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை செப்டம்பர் திங்கள் 10, 11 மற்றும் 12 தேதிகளில் சென்னையில் நடத்தியது.

மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியவர்களில், டாக்டர் எஸ். ராமதாஸ், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன், பெருஞ்சித்திரனார், திரு. தீரன், திரு. ப. நெடுமாறன் ஆகியோர் முக்கியமானவர்கள். டாக்டர் ராமதாஸ் பேசுகையில் தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றும் நோக்குடன் இம்மாநாடு நடத்தப்படுவதாகக் கூறினார். தனி ஈழம் அடையும் பிரபாகரனின் லட்சியம் விரைவில் ஈடேறும் என்றும் கூறினார்.

மாநாட்டின் இரண்டாம் நாளன்று உரை நிகழ்த்திய திலீபன் மன்றத்தை சேர்ந்த தியாகுவும், பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை பரப்பு அணி மாநிலத் தலைவர் திரு. இ. ஆர். பாஸ்கரனும் அரசின் பொருளாதாரக் கொள்கையைக் குறை கூறியதுடன், தமிழர்கள் தன்னுரிமை பெற முயற்சி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார்





மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள் அனைவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ததைத் தீவிரமாகக் கண்டித்ததுடன், விடுதலைப்புலி இயக்கத்தையும் இயக்கத்தின் தலைவரான பிரபாகரன், தமிழீழம் மற்றும் திரு. ராஜிவ் காந்தியைக் கொலை செய்தவர்களையும் ஆதரித்துப் பேசினாாகள். விடுதலைப் புலிகள் வீரத்தோடு போராடி வருவதாகவும், அந்த இயக்கத்திற்கு எத்தனை தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும, அத்தடைகளையும் மீறி, தாங்கள் அளித்து வருகின்ற ஆதரவினை எந்தவிதத்திலும் விலக்கப் போவதில்லை என்றும், தமிழீழம் அமைவதைப் போல், தமிழ்நாட்டிலும் தன்னுரிமை கிடைக்கவேண்டும் என்றும், அப்படித் தன்னுரிமை கிடைக்கவில்லையென்றால், தனித்தமிழ்நாடு கோரிக்கை இங்கு வலிவு பெறப் போகிறது என்றும் பேசினார்கள்.

முற்பகல் 11-30

பிரபாகரன் வளரக்கூடாதென்ற காரணத்தினாலே, மத்திய அரசு பிரபாகரன் மீது கொலைப் பழியைச் சுமத்தியிருப்பதாகவும், பிரபாகரன் மீது எவ்வளவு கொலை வழக்குப் போட்டாலும் அதைப்பற்றித் தமிழ்ச் சமுதாயம் கவலைப்படப் போவதில்லை என்றும், கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது என்றும், அதே பிரபாகரனை இராணுவ மரியாதையுடன் குண்டுகள் ஒலி முழங்க வரவேற்று, திரு. நரசிம்மராவ் பேச்சுவார்த்தை நடத்தப் போகின்ற காலம் கண்ணெதிரில் தெரிவதாகவும், அதற்கான ஆயத்தப் பணிகளை, திரு. ராமதாஸ் தலைமையில் தமிழ்ச்முதாயம் செய்து கொண்டிருப்பதாகவும், தமிழீழத்துக்காக உயிரைக் கொடுப்பதற்காக 25 லட்சம் இளைஞர்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் தயார் நிலையில் இருப்பதாகவும், டெல்லிக்கு வேண்டிய அதிகாரத்தை வழங்குகின்ற நிலையில், தமிழர்கள் வாழும் பகுதி இருக்க வேண்டுமே தவிர, அதிகாரத்தை டெல்லியிலிருந்து வேண்டுகின்ற நிலை இருக்கக்கூடாதென்றும் அவ்வகையில் தமிழர்கள் வாழ்கிற நாடு தமிழர்களுக்கே சொந்தம் என்றும் கூறப்பட்டது.

மாநாட்டில் கடைசி நாளான, 12—9—1992 அன்று நடைபெற்ற ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் எல்.டி.டி.ஈ. யையும் பிரபாகரனையும் ஆதரித்து, 'உலகத் தமிழன் பிரபாகரன் வாழ்க' என்ற கோஷத்தை எழுப்பிக் கொண்டு சென்றனர். ஊர்வலத்தில் பிரபா

கரனுடைய உருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் சென்றவர்களில் சிலர், பிரபாகரனின் உருவப் படத்தையும், மற்றும் சிலர் பிரபாகரன், சிவராசன் ஆகியோரின் உருவப்படம் தாங்கிய தலைப்பாகை அணிந்து சென்றனர். மேலும், தாணு, சிவராசன் ஆகியவர்களைப் புகழ்ந்தும், 'காலிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற கோஷங்களையும் எழுப்பிக்கொண்டு சென்றனர்.

மாநாட்டில் உரையாற்றிய திரு. தீரன், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை இருந்து வருவதாகவும், அந்தத் தடையை மீறித் தாங்கள் அவர்களுக்கு அளித்து வருகின்ற ஆதரவினை எந்த நிலையிலிருந்தும் மாற்றப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. நெடுமாறன், மாநாட்டை டாக்டர் ராமதாஸ் துவக்கி வைப்பது மிகவும் பொருத்தமானது என்று கூறி வழிமொழிந்து பேசுகையில், விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு ஆதரவை எந்த நிலையிலும் அளிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் சொல்லியுள்ளார்.

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் உரையாற்றும்போது, "அரசியல் சட்டம் 21-வது பிரிவின்படி வாழ்வுரிமை, கல்வி உரிமை, நீதி பெற உரிமை போன்றவைகள் கிடைக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அந்த உரிமைகள் தமிழர்களுக்குக் கிடைக்கின்றனவா ? எங்கு பார்த்தாலும் தமிழன் தாக்கப்படுகிறான் என்ற நிலைமைதானே இருக்கின்றது" என்று கூறியுள்ளார். இந்திய அரசு நெல்சன் மண்டேலாவையும், யாசர் அராஃபத்தையும் ஆதரிக்கிறது : விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்கிறது, என்ன நியாயம் என்று கேட்டு, விடுதலைப் புலி இயக்கத்திற்கு எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும், அதை மீறி என்றைக்கும் அவர்கள் அவ்வியக்கத்திற்கு ஆதரவு கொடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

டாக்டர் ராமதாஸ் பேசுகையில், புறநானூற்றுக் கவிதைகளில் முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வீரம் பற்றி பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்களே தவிர, தற்போது ஏ. கே. 47-ஐ கையில் வைத்துக் கொண்டு போராடும் தமிழச்சி பற்றி எழுதுங்கள் என்று சொன்னால், அது தங்களின் வேலை இல்லை என்று பத்திரிகைக் காரர்கள் சொல்வதாகவும், மாவீரனாக பிரபாகரன் திகழ்ந்து கொண்டிருப்பதாகவும், அவரது குறிக்கோள் நிறைவேற்றப் போகிறது என்றும், தமிழ் ஈழம் மலர்வதைத் தாங்கள் பார்க்கத்தான் போகிறோம் என்றும் கூறியுள்ளார்.



தமிழ் ஈழம் அமைவதைப் போல தமிழ் நாட்டிலும் தன்னுரிமை கிடைக்கவேண்டுமென்றும், அப்படித் தன்னுரிமை கிடைக்கவில்லை என்றால் தனித் தமிழ் ஈழம் போல தனித் தமிழ்நாடு கோரிக்கை எழுந்து வல்மை பெறத்தான் போகிறது என்றும் கூறியுள்ளார்.

மாநாட்டின் முடிவில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இந்தியாவில் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இலங்கைத் தமிழர்களைப் பற்றிய கொள்கை இல்லை என்ற கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், பணக்காரர்களாலும் அரசர்களாலும் கொண்டு வரப்பட்டதென்றும், மக்களுடைய தேவையை அவை பூர்த்தி செய்யவில்லை என்றும், ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கவும், மேலும் தமிழ் மக்களுடைய அரசியல் மற்றும் குடியுரிமைகளைத் திரும்பப் பெறவும், தன்னுரிமைக் கருத்து உள்ளடக்கிய புதியதொரு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கவும், பாட்டாளி மக்கள் கட்சி போராடப் போவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முற்பகல் 11–35

இவ்வாறு பாட்டாளி மக்கள் கடசியைச் சார்ந்த டாக்டர் எஸ். ராமதாஸ், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் மற்றும் பலர் திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில், குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட பிரபாகரனை ஆதரித்தும், தமிழ் மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டதாகக் கூறி, அவற்றைக் காப்பாற்ற, தமிழ் மக்கள் தன்னுரிமை பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியும், மற்றும் போராட்டம் நடத்தப் போவதாகவும் பேசி, மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றிய நிலையில் அவர்களின் இச் செயல்களின் தன்மை ஆராயப்பட்டு, அவை சட்டவிரோதமான நடவடிக்கைகள் ஆகும் என்று தமிழக காவல் துறை முடிவெடுத்து, டாக்டர் ராமதாஸ் மற்றும் 15 பேர்கள் மீது, 1967 ஆம் வருடத்திய சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டப் பிரிவு 13 உட் பிரிவு (1) மற்றும் 13 உட்பிரிவு (2)-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கினைத் தொடர்ந்து, 18-9-1992 அதிகாலை, டாக்டர் ராமதாஸ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டனர். எனினும், டாக்டர் ராமதாசும் சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரனும் நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுதலைச் செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வினைத் தொடர்ந்து பல மாவட்டங்களிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் தாக்கப்பட்ட சம்பவங்கள் கவனத்திற்கு வந்தன.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 செப்டம்பர் 21

மொத்தத்தில் 54 அரசு பேருந்துகள் மீதும், 17 தனியார் வாகனங்கள் மீதும் கல் வீசப்பட்டதாகவும் மற்றும் 2 அரசு பேருந்துகளும், 2 தனியார் வாகனங்களும் தீயிட்டுக் கொளுத்தப் பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 19—9—1992 ஆம் நாள் வரை 4065 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல் துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு சட்டம் ஒழுங்கு, அமைதி, நிலை நாட்டவும் அரசு மற்றும் பொது வுடமை சொத்துக்களைப் பாதுகாக்கவும், விரிவான அறி வுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங் களுக்கு அந்தந்த இடங்களின் நிலைமைக் கேற்ப பேருந்துகளை இயக்குமாறும், அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் அறி வுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, பாதுகாப்புப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற, மைய அரசிடம் தொடர்புகொண்டு, மைய அரசின் காவல் தொகுப்பிலிருந்து 10 கம்பெனி காவலர் களை அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. மைய அரசும் 6 கம்பெனி ஆயுதப்படைகளை அனுப்ப ஏற்பாடு செய்து, அவை தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்துள்ளன. தமிழ கத்தில் தற்போது சட்டம்—ஒழுங்கு முழுமையாக நிலை நாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது.

தமிழகத்தில் தேசவிரோத சக்திகளையும், தேசிய ஒருமைப் பாட்டிற்குப் பங்கம் விளைவிக்க முயற்சி செய்யும் எவரையும் இந்த அரசு எப்போதும் அனுமதிக்காது என்பதை (மேஜையைத் தட்டும் பலத்த ஒலி) திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள் கிறேன். தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைத் தடுத்து நிறுத்தி, அவர்களை வளரவிடாது முளையிலேயே கிள்ளி எறியும் அத்தனை நடவடிக்கைகளையும் எங்கள் அரசு மேற் கொள்ளும் (மேஜையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், தமிழக மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : The whole matter is sub-judice எல்லாமே கோர்ட்டின் முன்னாலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Unúer Rule 110 there shall be no deba e ( interruption ).

திரு. ச. இராமச்சந்திரன் : விதி 92-ஐ பாருங்கள்.



1992 செப்டம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியை விட்டு நீங்கள் போய்க் கொண்டு இருந்தீர்கள் என்றால் என்ன அர்த்தம்? Under Rule 110, there shall be no debate on such statement at the time it is made. இதைத் தவிர வேறு எந்த விதி இருக்கிறது? (குறுக்கீடு) இந்த விதியை மீறி நீங்கள் அத்துமீறிப் போகிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் அத்துமீறிச் செல்லுகிறீர்கள். நீங்கள் அத்துமீறிச் செல்லு கிறீர்கள். விதி 110-ஐ மீறி நீங்கள் பேசுவது தவறு.

திரு. ச. இராமச்சந்திரன் : இது சப்-ஜுடிஸ்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள், சப்-ஜுடிஸ் என்றால் நீங்கள் வேறு வகையிலேதான் கிளப்ப வேண்டும். விதி 110-ன்கீழ் அறிக்கை வைக்கிறபோது நீங்கள் இத்தகைய குறுக்கீடுகளைச் செய்வது அத்துமீறிய செயல் என்பதைத் தங்களுக்குக் கண்டனமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : இது சப்-ஜுடிஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் வேறு வகையிலேதான் கிளப்பவேண்டும். 'At the timc it is mace— there shall be no debate' என்று வருகிறபோது (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவு நாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து என்ன பயன்? (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன் : Can ycu allow this? It is sub-judice.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விதியை விட்டு விட்டு பேசும்போது என்ன செய்வது? (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் இந்த விதியைப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். (குறுக்கீடு). பொதுவான சட்டம்—ஒழுங்கு பற்றிய ஒரு அறிக் கையை அவைக்கு அளிக்க அரசாங்கம் விரும்புகிறபோது அவைத் தலைவர் அனுமதி அளிக்கிறேன். அவைத் தலைவர் அனுமதி அளித்த ஒரு பிரச்சினையை சப்-ஜுடிஸ் என்கிற வகையில் பேசுவதற்கு எந்த வகையிலும் உங்களுக்கு விதியில் இடம் இல்லை.

8. ஒழுங்குப் பிரச்சினை:

பதவிப் பிரமாணத்தின்போது எடுத்துக் கொண்ட உறுதி மொழிக்கு மாறாக "சுய நிர்ணய உரிமை" பற்றிப் பேசுவது குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினராக அமர்ந்திருக்கிற ஒவ்வொருவரும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஆர்டிகள் 188-படி Oath or Affirmation எடுத்துத்தான் அமர்ந்திருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது முழு நம்பிக்கையும் வைத்திருக்கிறோம். இறையாண்மையிலும் ஒற்றுமையிலும் முழு நம்பிக்கை வைத்துத்தான் அமர்ந்திருக்கிறோம். அதற்கு விரோதமாக "Right to self-determination, என்று கூறி, சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விவாதம் இல்லை. அதைத் தான் அவரிடம் கேட்டேன். அவருக்கு விதி 110-ன்கீழ் அனுமதி இல்லையென்கிறேன். அவர் வேறு ஏதோ பேசுகிறேன் என்கிறார். கேட்டுவிட்டு நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: தலைவர் அவர்களே, "Right to self-determination" சுயநிர்ணய உரிமை என்பது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்சினையாக வராது. இதுபற்றி என்னிடம் எழுதிக்கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, ஒரு உறுப்பினர், தான் எடுத்த உறுதிமொழிக்குப் புறம்பாக நடந்து கொள்கிறார் என்று நீங்கள் கருதினால் அதுபற்றி என்னிடத்திலே கொடுங்கள். அது இதிலே வராது. அது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வராது. அதை என்னிடத்தில் எழுதிக்கொடுத்தால் அதன்மீது நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடு) அவையினுடைய ஒழுங்குப் பிரச்சினையாக இது வராது. உட்காருங்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தது இன்றைக்கிருக்கிற அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை இந்த அவைக்கும், நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவும், மத்திய அரசினுடைய சட்டம், மத்திய அரசினுடைய அறிக்கைகள் பற்றியும், மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதற்காகவும் அவர்கள் விளக்கினார்களே தவிர, அதுபற்றிய தீர்ப்பு எதையும் முதல்வர் அவர்கள்



வழங்கவில்லை. அது மட்டுமல்லாமல், இந்தச் சட்டத்தைப் பொறுத்து, மத்திய அரசாங்கத்தினுடைய நோக்கத்தைப் பொறுத்து, இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. என்ன நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தான் தெளிவாகத் தெரிவித்தார்கள் தீர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

5. அறிவிப்புகள் – தொடர்ச்சி.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

[1992 செப்டம்பர் 21

(ஆ) மது விலக்கு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (மூன்றாம் திருத்த) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.



1992 செப்டம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது
மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும், ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

முற்பகல் 11—45

9. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஈ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1992,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.



மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மேற்படி சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## எ. வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1992

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992-93—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கானசெலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



முற்பகல் 11-50

1992-93 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 161.29 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 131.83 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 29.46 கோடி மூலதன கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த பின்னர், உடனடி செலவு செய்ய வேண்டிய சில இனங்களுக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தொகை அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று எதிர்பாராச் செலவு நிதியில் ஈடு செய்வதற்கே முக்கியமாக இத்துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாக கூற விழைகிறேன்.

3. காவல் துறையின் சில வகைப் பணியாளர்களுக்கு உடுப்புப் பராமரிப்புப் படிகள் ( Kit mainterance all wance உணவுக் கட்டணங்கள் ஆகியவற்றிற்கான கட்டண வீதங்களை அரசு உயர்த்தியுள்ளது . இவற்றிற்கான செலவு ரூபாய் 1.27 கோடி முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

4. கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை 30—9—1992-க்கு முன்னர் செலுத்திவிடும் விவசாயிகளுக்கு காலம் கடந்த வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றுக்குச் சமமான தொகையை 'போனஸ் ஆக அரசு அனுமதித்துள்ளது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் 69 கோடியாகும். முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 40 கோடி முன் பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. துணை மதிப்பீட்டில் மொத்தத் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் ரூபாய் 2·19 கோடி செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணங்கள் வழங்குவதன் வாயிலாக, இச்செலவு முதற்கண் செய்யப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில், இவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 21

6. திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் அனைத்திலும் ஏழை எளியோர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோரின் நலனுக்கே இந்த அரசு எப்போதும் தலையாய முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. ஏழை எளியோருக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டு மென, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இதற் கிணங்க, கடந்த பொங்கல் திருநாளன்று வேட்டி, சேலை வழங்கப்பட்டது. மேலும், வருகின்ற பொங்கல் திருநாளன்று இத்திட்டத்தைத் தொடர்ந்து . செயல்படுத்தத் தற்போது கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வருகின்ற பொங்கல் திருநாளையொட்டி ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர் களுக்கும், நகர்ப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோருக்கும் இலவசமாக 60 இலட்சம் புடவைகளும், 60 இலட்சம் வேட்டி களும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென்று துணை மதிப்பீட்டில், ரூபாய் 45 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

7. இந்த அரசு உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூபாய் 41.85 கோடி செலவில் அணைப் பகுதி பாதுகாப்பு சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி முன்பணம் வழங்கப்பட்டு, துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. இந்திய விடுதலைக்காகப் போராடியோரின் தியாகங் களைப் பாராட்டும் வகையில், விடுதலைப் போராட்ட வீரர் களுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகையை அரசு கணிசமான அளவு உயர்த்தியுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 மாநில அரசு உதவித் தொகையாக வழங்கி வந்தது. இந்த உதவித் தொகை தற்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடம் உதவித் தொகை பெறும் பலதரப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் மாதம் மொத்தமாக ரூபாய் 1000 உதவித் தொகையாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. உயிர்நீத்த விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினர் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 400 உதவித் தொகைப் பெற்று வருகின்றனர். இத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

'' வெள்ளையனே வெளியேறு '' இயக்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களின்போது சுதந்திரப் போராட்ட வீரர்கள் பொன்னாடைகளும் நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப் பட்டனர். முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.43 கோடி அளவிற்கு முன்பணம் வழங்கப் பட்டுள்ளது. இத் தொகைகள், துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ளன.



[இரா. நெடுஞ்செழியன்]

[1992 செப்டம்பர் 21

9. சேலத்திலுள்ள சவ்வரிசி நிறுவனத்தின் (Sagoserve) கடுமையான நிதி இடர்ப்பாட்டைக் களைவதற்காக 1991–92 ஆம் ஆண்டிற்கு இழப்பீட்டு உதவித் தொகை என்ற வகையில், ரூபாய் 50 இலட்சம் அனுமதித்துள்ளது. இது துணை மதிப் பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. 1993 ஜனவரித் திங்களில், 10 ஆவது ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்து விளையாட்டு போட்டியை குறித்த நேரத்தில் நடத்தும் பொருட்டு சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் புதிய பன்னோக்கு விளை யாட்டு அரங்கமொன்றைக் கட்டுவதற்கு, அரசு ரூபாய் ஏழு கோடி அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தொகை வழங்கப் பட்டுச் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப் பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. நடப்பாண்டில், தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப் படுத்தல் என்ற திட்டத்தின் கீழ், கால்வாய்களுக்குப் புதிய கரைகள் அமைத்தல், வடிகால் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்காக ரூபாய் 4.55 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொடக்கச் செலவுகளுக்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.10 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 2.81 கோடி செலவில் சிறைகளை நவீனப்படுத்துவதற்கான பணி மேற்கொள் ளப்பட்டுள்ளது. இதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 80 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. சென்னை மாநகரில் திரைப்பட நகரை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு மொத்த செலவு ரூபாய் 14.93 கோடியாகும். இதற்கான முதற்கட்டப் பணியை மேற்கொள்ள ரூபாய் 3.93 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல் வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் ஏனைய இனங்களைக் குறித்தும் உரிய முழு விவரங்களும் பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரி வாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

1992 செப்டம்பர் 21]

முற்பகல் 11.55

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஈ) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1992–93—வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-93ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் ஆணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானிய கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்புகிற உறுப்பினர்கள் அவைகளை பேரவை 190-வது விதிக்கிணங்க 22—9—1992 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்க்கலாம் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் (22—9—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 11-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. மாற்றுப் பேருந்து மற்றும் நிலைய ஊர்திகளுக்கு வரிவிகிதத்தை குறைப்பது குறித்து உள் (போ) துறையின் 10—1—1992-ஆம் நாளிட்ட 67-ஆம் எண். அரசாணையில் மெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

2. தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு நாட்டு மதுபான (மொத்தமாக அளித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 8—3—1991-ஆம் நாளிட்ட 71-வது எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

3. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 4—9—1990



[1992 செப்டம்பர் 21

ஆம் நாளிட்ட 904-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. இராணுவ பதிவு எண். 82-பி 22298 எண். கொண்ட இராணுவ அம்பாசிடர் காருக்கு பதிவு கட்டணத்திலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போ) துறையின் 27—1—1992-ஆம் நாளிட்ட 140-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழக நிலைப் பேருந்து அமாவாசையன்று மேட்டூரிலிருந்து மாதேஸ்வர மலைக்கும், சேலத்திலிருந்து கொள்ளேகாலுக்கும் செல்ல தற்காலிக உரிமம் வழங்கியது குறித்து உள் (போ) துறையின் 27—12—1991-ஆம் நாளிட்ட 1945-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. பெரியார் மாவட்டம், பன்னாரியிலுள்ள பன்னாரி மாரியம்மன் மற்றும் மருபூஜை விழாவிற்காக 15—3—1992 முதல் 24—3—1992 வரை கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தினால் தற்காலிக உரிமம் பெற்று இயக்கப் பெற்ற பேருந்துகளுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போ) துறையின் 9—3—1992-ஆம் நாளிட்ட 408-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. மாதாந்திர அடிப்படையில் இயக்கூர்திகள் வரி செலுத்துவது 30—6—1992 வரை கால அவகாசம் நீட்டிப்பு குறித்து உள் (போ) துறையின் 27—12—1991-ஆம் நாளிட்ட 490-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவ்திப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. மதுரை விற்பனைக் கூடம் பற்றி வேளாண்மைத் துறையின் அறிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 30—12—1989-ஆம் நாளிட்ட 982-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

1992 செப்டம்பர் 21]

9. 19 இணைப்பு சரக்கு ஊர்திகளால் செலுத்தப்படவேண்டிய வரியை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போ) துறையின் 12—3—1992-ஆம் நாளிட்ட 424-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. பெரியார் மாவட்டம் தாராபுரம் அங்காடி பகுதியிலிருந்து அறிவிக்கப்பட்ட சில கிராமங்களை நீக்குதல் குறித்து வேளாண்மைத் துறையின் 12—4—1990-ஆம் நாளிட்ட 280 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/195920 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

11. தமிழ்நாடு 1988-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 21—1—1992-ஆம் நாளிட்ட 34-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

12. செயின் அல்லாமல் தங்கத்தினால் செய்யப்பட்ட இதர சேர்ப்புகளுடன் கூடிய தாலிக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து அறிவிக்கப்பட்ட அறிவிக்கையில் திருத்தமொன்று, செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—2—1992-ஆம் நாளிட்ட 50-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1!1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

13. காஞ்சிபுரம், தமிழ்நாடு சரிகை லிமிடெட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பெறும் சரிகைக்கு கொள்முதல் வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—2—1992-ஆம் நாளிட்ட 51-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

14. கரிகரி, திருவாளர்கள் ஷெப்லின் தொழுநோய் ஆராய்ச்சி நிலையத்தினால் வாங்கப்படும் சிலவகை மூலப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்த வெளியிடப்பட்ட அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது



1992 செப்டம்பர் 21]

குறித்து வணிக வரி மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—2—1992-ஆம் நாளிட்ட 49-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

15. ஆர். டி. 35 இன்ஜின்கள் மற்றும் எல். 35 இன்ஜின்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு விற்பனை வரி சதவிகிதத்தை குறைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—2—1992-ஆம் நாளிட்ட 58-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

16. டான்காப் மற்றும் அதனைச் சேர்ந்த சங்கங்களினால் வாங்கப்படும் மற்றும் விற்கப்படும் எண்ணெய் வித்துக்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—2—1992-ஆம் நாளிட்ட 50-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

17. திருச்சிராப்பள்ளி, கான்கிரிகேஷன் ஆப் சிஸ்டர்ஸ் ஆப் கிராஸ் ஆப் செவனாடு என்ற நிறுவனத்தினால் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியை இரண்டு ஆண்டுக் காலத்திற்கு அதாவது 13—2—1992 முதல் ரத்து செய்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—2—1992-ஆம் நாளிட்ட 61-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. சென்னை, திருவாளர்கள் நேஷனல் பார்வையற்றோர் சங்கத்தினால் சமூக நலத் துறைக்கு விற்கப்படும் அலுமினிய புஷ்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—2—1992-ஆம் நாளிட்ட 22-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

19. சென்னை, திருவாளர்கள் மெட்டல் பாக்ஸ் இந்தியா லிமிடெட்டால் டில்லி ஐக்கிய நாடுகள் கோதுமை சங்கத்திற்கு 10,000 டின் போஸ்டர்கள் 1991-ஆம் ஆண்டு விற்பனை செய்த

தற்கு வரி விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16 —3 —1992-ஆம் நாளிட்ட 42-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

20. சென்னை, பன்னாட்டு விமான நிலையத்தினால் வாங்கப்பட்ட மூன்று அம்புலன்ஸ் வண்டிகளுக்கு வரிவிதிப்பி லிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5 — 2 — 1992-ஆம் நாளிட்ட 45-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக் கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

21. சென்னை, திருவாளர்கள் ஈஸ்வரன் & சன்ஸ் லிமி டெட்டால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 1 — 4 —1989 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளி வைத்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3 —9 —1991 ஆம் நாளிட்ட 389 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

22. ஆலய நிருவாக வாரியம் ஏற்படுத்தலும் அவ்வாரியத் திற்கு அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களில்லாத வர்கள் உறுப்பினர்களாக நியமனம் செய்வது குறித்தும் வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13 —12 —1991-ஆம் நாளிட்ட 504-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை . [தமிழ்நாடு 1991-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1991) 64(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

23. மதுரை, அருளகச் சங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை அன்பளிப்பாக வழங்காமல் வரை யிலும், வாடகைக்கு விடாமல் வரையிலும் பொது நோக்கத் திற்காக பயன்படுத்தும் வகையில் அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சலுகை அடிப்படையில் நிர்ணயித்தல் குறித்து உள் (போ) துறையின் 16 —7 —1991-ஆம் நாளிட்ட 1144-ஆம் எண். அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 5(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]





24. சென்னை, லிட்டில் சிஸ்டர்ஸ் ஆப் தி புவர் மற்றும் முதியோர் இல்லத்திற்குச் சொந்தமான டி.எம்.இசட். 8040 மோட்டார் வண்டிக்கான வரிச் சலுகையை ரத்து செய்தலும், டி. எண். 01/பி. 7899 பதிவு எண் கொண்ட வாகனத்திற்கு வரிச் சலுகை அளித்தலும் குறித்து உள் (போ) துறையின் 4 —2 —1992-ஆம் நாளிட்ட 186-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

25. சென்னை, லிட்டில் சிஸ்டர்ஸ் ஆப் தி புவர் மற்றும் முதியோர் இல்லத்திற்குச் சொந்தமான டி.என். 01/சி-7800 பதிவு எண் கொண்ட இயக் கூர்திக்கு வரி விகித . சலுகை அளித்தல் மற்றும் டி. எம். சி. 4738 பதிவ எண் கொண்ட இயக் கூர்திக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையை ரத்து செய்தல் குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 6 —3 —1991-ஆம் நாளிட்ட 377-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது,]

26, ஈரோடு லிட்டில் சிஸ்டர்ஸ் ஆப் தி புவர் மற்றும் முதியோர் இல்லத்திற்குச் சொந்தமான டி.என். 33/ஏ-1464 பதிவு எண் கொண்ட இயக் கூர்தி அந்நிறுவனத்திற்கு தொண்டு நோக்கத்திற்கு பயன்படுத்தும் வரை மேற்கண்ட இயக் கூர்திக்கு வரிச் சலுகை அளித்தல் குறித்து உள் (போக்கு வரத்து) துறையின் 6—3—1992-ஆம் நாளிட்ட 376-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

27. சென்னை, ஜெர்மன் தொழுநோய் நிவாரண கழகத் திற்குச் சொந்தமான இயக் கூர்திகள் அவற்றை வாடகைக்கு மற்றும் அன்பளிப்பாக வழங்காமல் தொண்டு நோக்கத் திற்காக பயன்படுத்தும் வரை அவ்வாகனங்களுக்கு வரிச் சலுகை அளித்தல் குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 17 — 7 — 1990-ஆம் நாளிட்ட 1765-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

28. 13,000 கிலோவுக்கு மேல் எடையை ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களுக்கு வரி விகிதம் நிர்ணயித்தல் குறித்து 29 — 10 —1991-ஆம் நாளிட்ட 1628-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தம் செய்தல் குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 13 —11 —1991-ஆம் நாளிட்ட

1699-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

29. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 1-3-1991-ஆம் நாளிட்ட 65-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

30. 2-2-1990-ஆம் நாளிட்டII PWE/702/(4)-ஆம் எண்ணில் பொதுப் பணித் துறையினால் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தமொன்று செய்தமை குறித்து பொதுப் பணித் துறையின் 12-7-1990-ஆம் நாளிட்ட 1443-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் நிலத்தை பயன்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 16/1978) 21(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

31. 2-2-1990 முதல் கல்பாக்கத்தில் அணு உலை நிறுவுதல் குறித்து பொதுப் பணித் துறையின் 2-2-1990-ஆம் நாளிட்ட 263-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிலத்தை பயன்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 16/1978) 21(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

32. சென்னை நகரத்தில் போக்குவரத்துக்கு பயன்படாத வாகனங்களுக்கு இயக் கூர்திகள் வரி யூகோ வங்கி மூலமாக வசூல் செய்வது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 25-2-1992-ஆம் நாளிட்ட 289-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

33. வேளாண்மைத் துறையின் 6-3-1986-ஆம் நாளிட்ட II(2)AG/1921/86 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 5-2-1992-ஆம் நாளிட்ட 69-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 27/1989) 52(4) (c) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



34. வேளாண்மைத் துறையின் 2-2-1978 ஆம் நாளிட்ட II (2) AG/758/78 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 5-2-1992-ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (C) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

35. வேளாண்மைத் துறையின் 27-11-1990 ஆம் நாளிட்ட II (2)/AG/6605/90 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 26-11-1991 ஆம் நாளிட்ட 640 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள்(ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

36. வருவாய்த் துறையின் 5-5-1972 ஆம் நாளிட்ட III/407/1972 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தலும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கிராமப்புற தொழிலினால் செய்யப்பட்ட அனைத்து பொருட்களுக்கும் வரிவிலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20-3-1992-ஆம் நாளிட்ட 122-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

37. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர் வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 25-2-1992-ஆம் நாளிட்ட 62 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத் தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

38. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத் தின் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8-12-1990 ஆம் நாளிட்ட 1501-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

39. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நாட்டு மதுபான (உற் பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு

மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 26 —12 —1991 ஆம் நாளிட்ட 300-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

40. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25—2—1992-ஆம் நாளிட்ட 45-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

41. சென்னை, கிரிமால்டஸ் ரெப்பரல் மருத்துவ மனை மற்றும் தொழுநோய் நிலையத்தினால் வாங்கப்பட்ட டெம்போ டிராலர் வாகனத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—2—1992-ஆம் நாளிட்ட 44-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக் கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

42. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24—2—1992-ஆம் நாளிட்ட 80-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

43. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—3—1992-ஆம் நாளிட்ட 106-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

44. வாடகைச் சீருந்துகள் மற்றும் டிராக்டர்களுக்கான வரி விகிதத்தை சீராய்வு செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—3—1992-ஆம் நாளிட்ட 109-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக் கூர்திகள் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம். 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)





45. சென்னை, கில்டு ஆப் சர்வீஸ் என்ற நிறுவனத்தினால் வாங்கப்பட்ட மெட்டடர் வேன் எண் எப். 307 என்ற மோட்டார் வாகனத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25—4—1991-ஆம் நாளிட்ட 232-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக் கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13:1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

46. இராமநாதபுரம் அங்காடி பகுதியிலிருந்து அறிவிக்கப்பட்ட சில கிராமங்களை நீக்குதலும் பருத்தி, நிலக்கடலை, மிளகாய் மற்றும் நெல் ஆகியவற்றை விற்பது குறித்தும் வெம்பகோட்டை அங்காடி பகுதியில் சில கிராமங்களை சேர்த்தல் குறித்தும் வேளாண்மைத் துறையின் 9—8—1990-ஆம் நாளிட்ட 604-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

47. சென்னை, ஜெர்மன் தொழுநோய் நிவாரண கழகத்தினால் வாங்கப்பட்ட ஜீப்புக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20—4—1992-ஆம் நாளிட்ட 140-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக் கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1991) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது .)

48. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 20—3—1991-ஆம் நாளிட்ட 81-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

49. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 20—3—1991-ஆம் நாளிட்ட 81-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில், தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

50. ஆந்திர மாநிலம், ஸ்ரீ சத்திய டிரஸ்ட் சாய் நிறுவனத்திற்கு சொந்தமான ஏபி/02:பி. 0909 எண் பதிவு எண் கொண்ட மோட்டார வாகனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரியை 5—7—1992 முதல் ஓராண்டு காலத்திற்கு விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 3—4—1992 ஆம் நாளிட்ட 581ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேர்வைமுன் வைக்கப் பெற்றது).

51. வெளி மாநிலத்திற்கு சொந்தமான ஐந்து மோட்டார் வாகனங்களின் நிலுவை வரியை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 3—4—1992ஆம் நாளிட்ட 582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவ்ன்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

52. ஆந்திரா மாநிலம், பட்டணஞ்சேரி, பன்னாட்டு பயிர் ஆராய்ச்சி மற்றும் பகுதி வரண்ட வெப்ப மண்டல நிலையத்திற்கு சொந்தமான ஏபிபி 8078 பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனம் வாடகைக்கு அல்லது அன்பளிப்பாக வழங்காமலும், சொந்த உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தும் வரையிலும் அவ்வாகனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 8—10—1991-ஆம் நாளிட்ட 1503-ஆம் எண் விசாரணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

53. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தின் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27—2—1991 ஆம் நாளிட்ட 273-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

54. 19—8—1981 ஆம் நாளிட்ட வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் அறிவிக்கை எண். 11(எல்) சி.டி.ஆர்.இ.:398/81-ல் திருத்தம் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20—12—1990 ஆம் நாளிட்ட 742-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)





55. சென்னை, திருவாளர்கள் செகிஷோ பிரினியா கேர் மற்றும் ரிசர்ச் பவுண்டேசனால் அளிக்கப்பெறும் மருத்துவ சிகிச்சை மற்றும் மறுவாழ்வு நோக்கத்திற்காக வாங்கப்படும் மருந்துகள் கச்சாப் பொருட்கள் இயந்திரக் கருவிகள் மற்றும் மரச் சாமான்களுக்கு செலுத்தப்படவேண்டிய வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 30—4—1992 ஆம் நாளிட்ட 157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

56. கோவை, ஊனமுற்ற குழந்தைகள் உதவி பெறும் சங்கத்தினால் தயாரிக்கப்படும் காகித உறைகளை விற்பதற்கும் அந்நிறுவனத்தினால் வாங்கப்படும் மருத்தவமனை கருவிகள், இயந்திரக் கருவிகள் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றிற்கு செலுத்தப்படவேண்டிய வரியிலிருந்து விலக் களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—3—1992-ஆம் நாளிட்ட 101-ஆம் எண் அர சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது[.

57. சென்னை-10, திருவாளர்கள் இந்துஸ்தான் டைபுள் இன்ஸ்டியூட் மற்றும் காலேஜின் உபயோகத்திற்காக வாங்கப்பட்ட ஒரு டெம்போ டிராலருக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 17—5—1992-ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

58. மனிதர்களால் உட்கொள்ளப்படும் எல்லா வகை எரி சாராயத்திற்கு எந்த ஒரு விற்பனையாளராலும் செலுத்தப் படவேண்டிய விற்பனை வரி விகிதத்தை குறைத்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7—5—1992-ஆம் நாளிட்ட 161-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1992 செப்டம்பர் 21]

59. இந்திய அரசு, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்திற்காக ஜனத்தொகை கடிகாரம் நிறுவுவதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—6—1992 ஆம் நாளிட்ட 215 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

60. திருச்சிராப்பள்ளி, திருவாளர்கள் திருச்சிராப்பள்ளி தோல் பதனிடும் பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினால் 1978—79 முதல் 1982—83 வரை செலுத்தப்படவேண்டிய நிலுவை விற்பனை வரி, மேல் வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியை தள்ளுபடி செய்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—6—1991 ஆம் நாளிட்ட 300-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5), தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) மற்றும் தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

61. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மின்சார பொது நிறுவனங்களால் வாங்கப்படும் சில மின் சாதன பொருட்களுக்கு வரிவிகித சலுகை அளித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—2—1992-ஆம் நாளிட்ட 47-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

62. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் அட்டவணை 2-ல் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—5—1992 ஆம் நாளிட்ட 166-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

63. கோவை, திருவாளர்கள் எலிடா குழந்தைகள் இல்லத்தின் உபயோகத்திற்காக வாங்கப்பட்ட டெம்போ டிராவலர் பேருந்துக்கு செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—2—1992 ஆம் நாளிட்ட



1992 செப்டம்பர் 21]

43 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிகளுள் இயக் கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

64. கர்நாடக மாநிலம் மாதேஸ்வரி மலைக்கு மகா சிவ ராத்திரி மற்றும் உகாதி விழா நாளன்று [illegible] அடிப்படையில் தற்காலிக உரிமம் வழங்கியது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 27—12—1991-ஆம் நாளிட்ட 1946-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

65. 1989—90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. [1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54 1948) 75(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

66. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1990—91 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54 1948) 69(5) (ஏ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) தமிழ், ஆங்கிலம்].

67. 1990-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் வாணிபக் கழகத்தின் ஆறாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1 1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

68. 1989—90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலக் குழாய் கிணறுகள் கழகத்தின் எட்டாம் ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

69. 1989—90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/1992).

2. தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு திறந்த வெளி (அழகு கெடுக்கப்படுவதை தடுத்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 7/1992).

3. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1992).

4. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1992).

5. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிறுவனங்கள் (கட்டாய நன்கொடை வசூலிப்பதை தடை செய்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1992).

6. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

7. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

D
V211,31 N92
N92.29.1
600 009
163183